சிலப்பதிகாரப் புதையல்கள்



முதுமுனைவர்

இரா. இளங்குமரனார்

பதிப்பாசிரியர்

முனைவர் பி. தமிழகன்

திருவள்ளுவர் நிலையம்

7, இராமன் தெரு, திருநகர்

மதுரை - 625 006

சிலப்பதிகாரம்

புதையல்கள்

முதுமுனைவர்

இரா. இளங்குமரனார்

பதிப்பாசிரியர்

முனைவர் **பி. தமிழகனார்**

திருவள்ளுவர் நிலையம்

7, இராமன் தெரு, திருநகர்,

மதுரை - 625 006

நூற்குறிப்பு

நூற்பெயர்	**சிலப்பதிகாரப் புதையல்கள்**
ஆசிரியர்	இரா. இளங்குமரன்
மொழி	தமிழ்
பொருள்	இலக்கிய ஆய்வு
முதற் பதிப்பு	திசம்பர் 2020
பக்கம்	xii + 148 = 160
எழுத்து	12 புள்ளி
தாள்	116 வெள்ளை மேப்லித்தோ
அளவு	1/8
படிகள்	600
விலை	உருபா. 120/-
உரிமை	ஆசிரியர்க்கு
வெளியீடு	திருவள்ளுவர் நிலையம் 7, இராமன் தெரு, திருநகர், மதுரை.
நூலாக்கம்	“தி பிரிண்டிங்கு அவுசு” திருச்சி - 23

நூல் கிடைக்குமிடம்:

- நூலாசிரியர்
  9442760616
- பாவேந்தர் பதிப்பகம்
  4/79, சீரகம், திருமழபாடி,
  அரியலூர் மாவட்டம்.
  94439 49807
- 2, பிச்சையம்மாள் நகர்,
  காசாமலை, திருச்சி - 23.
  9940704702

❖❖❖

பாவேந்தர் பதிப்பக

நூன்மணி விழா வெளியீடு

திருமழபாடி முனைவர் ஆய்வுத் தோன்றல்

அண்ணல் ஆறுமுகனார்,

மணிவிழா, முத்து விழா, பவழ விழா, வயிர விழா என கடந்தும் அவற்றைக் கொண்டாடாமல்,

முனைவர் ஆறுமுகம் – சாரதாம்பாள்

மணவிழாவின்

மணி விழா மலர்

என நூல் விழா எழுத்து, எடுத்துக் காட்டானார் (2019)

பின்னர்த் தமக்கு வந்த மடல்களைக் கால வரிசையில் அடைவு செய்து, 109 புலமையரையும் அவர் எழுத்தையும் பரப்பாளராக

“மணந்தருமடல்கள்”

என்பதையும் அதே ஆண்டில் வெளியிட்டார்.

தாமே ஆய்வாளியாய், படைப்பாளியாய், பதிப்பகராய், பதிப்பகத்தாராய்த் தம் அருமை மகனார் பல்துறை வல்லார் **ஆறு. இளங்கோவனார்** இணையிலாப் பணியால் பாவேந்தர் பதிப்பக நூல்கள் அறுபதைத் தாண்டிய அளவில், **எம் சிலப்பதிகாரப் புதையல்** என்னும் நூலை, **அண்ணல் ஆறுமுகனார் வழியில்,**

‘பாவேந்தர் பதிப்பக நூல்மணிவிழா’வாக வெளிப்படுத்தலில் உள்ளார்ந்த மகிழ்வெய்துகிறேன்.

திருவள்ளுவர் நிலையம்
7, இராமன் தெரு, திருநகர்
மதுரை - 625 006.

இன்ப அன்புடன்
இரா. இளங்குமரன்

சிலப்பதிகாரப் புதையல்கள் - நூல் வருமுறை

'ஈ' ஆய்தல் ; 'கொசு' ஆய்தல் ; 'கீரை' ஆய்தல் ; 'கொத்தவரை ஆய்தல்' என்பவை வெளிப்படையாகத் தோன்றும் ஆய்வுகள். நீருள் மீன் வரவை ஆயும் குருவி, 'ஆல் ஆய் குருவி' ஆல் –நீர். ஆலி நாடர் – சோழ நாட்டை ஆண்ட திருமங்கைமன்னர்.

புதையல் என்பது மண்ணுள் குறிப்பறிந்துப் பிறர் அறியாவாறு புதைத்து வைக்கும் அரிய பொருள்.

"பாடுபட்டுத் தேடிப் பணத்தைப்புதைத்து வைத்து"

எடுத்துக் கொள்ளாமல் மறக்க அல்லது இறக்கப் பிறர் கைக்கு அகப்படுவது. இது மக்கள் செயல்.

ஆனால் இயற்கை வீறு கொண்டெழும் ஆழிப் பேரலையால் நாடு நகரே மண்ணுள் ஆழ்ந்து போவதும், அதனை ஆயும் தொல் பொருள் துறையினர் அகழ்ந்து கண் கொண்டும் கருவி கொண்டும் ஆய்வதும் முந்தைக் கால மக்கள் பண்பாடு, நாகரிகம், மொழிக் கூறு, கலைத்திறம், அவற்றின் காலம் முதலியவற்றை ஆய்வது புதைபொருள் ஆய்வாகும். சான்றாக அண்மைக்கால ஆய்வால் 'கீழடி ஆய்வு' கி.மு. 6–ஆம் நூற்றாண்டுத் தமிழக நிலையை அறியச்செய்கிறது.

இளங்கோவடிகள் காலத்தில்,

"பதிஎழுஉ அறியாப் பழங்குடி கெழீஇய
பொதுவறு சிறப்பில் புகார்" (காவிரிப் பூப்பட்டினம்) என்ற பூம்புகார்

அவர் நண்பர் மணிமேகலைச் சாத்தனார் காலத்தேயே, அழியுண்டு போயதை ஆழியுள் ஆழ்ந்ததை – அறிகிறோம்.

'பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள'

என்று இளங்கோவடிகள் தமக்கு முன்னை அழிவைச் சுட்டுகிறார். அவற்றை மேலோட்டமாக அறிய முடியாமல் அகழ்ந்து ஆய்வதுபோல் இலக்கியத்திலும் ஆய்ந்து காண வேண்டும் பொருள்கள் பலவுண்டு என்பது கல்வி வல்லோர் எவரும் அறிவது.

சான்றாகச் 'சிலப்பதிகாரம்' என்னும் பெயர் முதற்காப்பியப் பெயர். அப்பெயரை அன்றிச் 'சிலம்பு' என்பது, 'சிலப்பு' என வலித்தல் பெற்று நூலில் வரவில்லை. மக்கள் வழக்கிலும் இல்லை. நூலுள் எங்கும் 'சிலம்பே' இருக்க, நூற்பெயரில் 'சிலப்பு ' என்று அமைப்பானேன்.

சிலம்பு விளையாட்டு, சிலம்பாயி பெயர், எதிரொலி செய்யும் மலை – சிலம்பு 'தினைச்சிலம்புவ' 'மனைச்சிலம்புவ' (கம்பர்) என்பது பெருவழக்காக இருக்கவும் அதை விடுத்துச் 'சிலம்பு' என்றது, மெல்லியல் ஒலியும், மெல்லியல் ஒலியும், மெல்லியலார் அணியும் ஆகிய சிலம்பு, கோவலனை மட்டுமா கொன்றது? பாண்டியனை, அவன் தேவியை, மாதரியை, கண்ணகியை, கவுந்தியை, கோவலன் தாயை, கண்ணகி தாயைக் கொன்றதே.

மாதவியை, மணிமேகலையை, கோவலன் தந்தையை, கண்ணகி தந்தையைத் துறவு கொள்ளைவைத்ததே இவை **மென்சிலம்பின் செயலா? வன்கொடுமை செய்தது** அல்லவோ என்பதை, **உச்சியில் முத்திரையிட்டுக் காட்டுவது அல்லவோ! எனக் காண்பது புதையல் தானே!**

'பொற்கொல்லர் உயிர்ப்பலியூட்ட' என்பதற்கும்

'பொற்கொல்லரை உயிர்ப்பலியூட்ட' என்பதற்கும் – உள்ள வேறுபாடு மலைக்கும் முடிவுக்கும் உள்ள வேறுபாடு அல்லவா!

முன் சொன்னதில் ஒரு மெல்லினம், வல்லினம் ஆதல்,

பின் சொன்னதில் **ஓர் உருபை – இரண்டாம் வேற்றுமை உருபாகிய ஐயை** – உரையாசிரியர் விரித்ததால் நேர்ந்தது தானே!

–இவற்றைக் காணல் **'புதையல் எடுப்பது'** போன்றது தானே!

இவ்வாய்வுப் பயன் என்ன?

இக்கட்டுரை, 'உருபு செய்த உயிர்க்கொலை' என மதுரை நான்காம் தமிழ்ச் சங்க மாதிகையாகிய **'செந்தமிழில்'** 1965-இல் யான் எழுதி வெளிவந்தது.

விழுப்புரத்தில் இருந்து ஓரஞ்சல் வந்தது :

விழுப்புரம் பொற் கொல்லர் மாநாட்டில், பொற்கொல்லரை இழிவு செய்யும் பகுதி சிலம்பில் இருத்தலால் எரியூட்டத் தீர்மானித் திருந்தோம். உங்கள் கட்டுரையால் நூலாசிரியர் செய்ததன்று ; உரையாசிரியர் செய்தது என்பதை உணர்ந்து, எங்கள் தீர்மானத்தைக் கைவிட்டோம். அக்கட்டுரையை எங்கள் **'சிற்பி இதழில்'** வெளியிடவேண்டும் ; அதற்குத் தங்கள் இசைவும் இதழாசிரியர் இசைவும் வேண்டும் என்று வந்தது அஞ்சல். அதன்படி 'சிற்பி' இதழில் கட்டுரைவந்தது.

அரிய பாராட்டு மடல்கள், பாடல்கள் எய்தின.

பூந்தமிழ்ப் புதையல் (பணிவாசகர் பதிப்பகம்) செந்தமிழ்ச்செல்வி மாதிகை, தமிழ் வளம் – பொருள் என்றும் நூல் ஆயவற்றில் சில சில

கட்டுரைகள் வந்தன. நிறைவாகச் செந்தமிழில் வந்தவையே பெருந்தகைத் தோன்றல், என்பணியைத் தலையாகக் கொண்டு செய்யும் தகவர் **முனைவர். பி. தமிழகனார்** தொகை – வகைப்படுத்திப் பதிப்பாசிரியராகத் தமிழுலகம் கொள்ள வைத்துள்ளார். தனித்தனிக் கட்டுரைகள் ஆதலின், முன்வந்த செய்திகள் சில தவிர்த்தல் இயலாதாயிற்று.

சென்னை மணிமங்கலத்தில் **கண்ணகி கோட்டக்** கால் கோள் விழா. கோட்டத் தூண்டலர் சீர்மிகு **சிலம்பொலி செல்லப்பனார்.** என் பொழிவு அதன் செயற்பாட்டாளர் **காஞ்சி அமிழ்த, இளவரசர்** அவரே என் சிலம்புப் பொழிவுக்கு ஈரிடங்களில் ஏற்பாடு செய்திருந்தார். அங்கும் சிலம்பொலியார் தலைமை கொண்டார். செந்தமிழில் என்கட்டுரைகள் **'சிலப்பதிகாரப் புதையல்'** என வந்திருந்தன. அவற்றைப்படித்தார். **சிலம்பு, மேகலை** இரண்டிற்கும் யான் தெளிவுரை வரைந்ததை அறிவார். அதனால், தாம் **இளங்கோவடிகள்** பெயரால் சென்னைப் பல்கலைக்கழகத்தில் அறக்கட்டளை நிறுவியிருந்ததன்வழி எனக்கு அவர் பிறந்தநாள் விழாவில் **இளங்கோவடிகள் விருதும், ஓரிலக்கம் பொற்கிழியும் வழங்கினார்.**

பல்கலைக் கழகத் தமிழ்த்துறையர் சிறப்பாக விழா ஏற்பாடு செய்திருந்தனர் அவற்றைச் செந்தமிழ் ஆசிரியர் பெருந்தகை **சதா சிவனார்** பாராட்டி எழுதியதை அறிந்து செல்லப்பனார் பெரிது மகிழ்ந்தார்.

யான் அவ்விழாவிலேயே **'பன்மணிக்குவியல்'** என ஒரு நூல், இத்தொகை கொண்டு வெளியிட்டு 100 படிகள் விடுப்பேன் என்றேன். அவ்வாறே அத்தொகை நூல் செய்து வழங்கும் பேறும் வாய்த்தது.

அரிய நூல்களை வெளியிடுவதையே தம் பணியாகக் கொண்ட திருமழபாடி, ஆய்வறிஞர் **'அண்ணல் ஆறுமுகனார் பாவேந்தர் பதிப்பக நூன் மணிவிழா'** வெளியீடாக வாய்த்தமை இப்புதையலுக்கு மேலுமொரு சிறப்பாம்.

இப்புதையல் தொகுப்பும் பதிப்பும் செய்யும் அயராத் தொண்டர் முனைவர் **பி. தமிழகனார்க்கும், திருச்சிராப்பள்ளி அச்சுக் குழுமத்தார்க்கும்** நெஞ்சார்ந்த நன்றியுடையேன்.

இன்ப அன்புடன்,

இரா. இளங்குமரன்

அச்சிட்ட நூலும் ஏடும்

அச்சிட்ட நூல்களைத் தமக்குக் கிடைத்த ஏட்டுப்படிகளொடு ஒப்பிட்டுப் பார்ப்பின் பலப்பல நலப்பாடுகள் உண்டாதல் கண்கூடு.

அப்பணியை மதுரை நான்காம் தமிழ்ச் சங்கம் தோன்றி அதன் இதழாகச் செந்தமிழ் வந்த சில தொடக்க ஆண்டுகளில் காண வாய்த்தது.

உ.வே.சா. அவர்களின் முதற்பதிப்பின் பின்னே ஏடுகிடைப்பின் ஒப்பிட்டு நலம் கண்டது அறியப்படுகிறது. **வையாபுரியாரும்** இப்பணி செய்தார்.

ஔவை.சு.து அவர்கள் அரிதின் முயன்று ஏடு தொகுத்து ஒப்பிட்ட பயன் மிகப்பெரிதாம்.

எனக்குக் கிடைத்த சிலப்பதிகாரக் கையெழுத்துச் சுவடி, குறுந்தொகை ஏடு, திவாகர ஏடு இவற்றால் கொண்ட பயன்பெரிதாகும். எனக்கு,

> *"எச்.ஏ. கிருட்டிணபிள்ளை கையெழுத்துச் சுவடி*
> *க அள சூயகூ - ம் - வு (ஆண்டு) பெப்ருவரி மீ கஅ "*
>
> (1869 பெப்.18)

என முகப்புடைய சிலப்பதிகார மூலஏடு கிடைத்ததாகும்.

பக்க எண்கள் தமிழ் எண்கள்.

நாம் இப்பொழுது நிலைக்கால் இட்டு ஊடும்

வெளியும் புள்ளி வைக்கும் எழுத்து (ஈ)

> 'இ' என வே யுள. வள்ளலார் கையெழுத்துப்
> படியும் இகரமேல் சுழியே உளது.

எ-கா : பதிகம் : "இரேழ் நாளகத்தெல்லை" (51)

பதிக முடிவில்,

> ***"இது குட்டச் செந்தூக்கு வந்த வாசிரியம்***
> ***பதிகம் முற்றும்"***

என்னும் குறிப்புளது.

மங்கல வாழ்த்து இறுதியில்,

> **"இது மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா"**

இவ்வாறே ஒவ்வொரு காதை இறுதியிலும் குறிப்புளது.

> "மாலை தாழ் சென்னி வயிரமணித் **தூணகத்து"** 1:48.
>
> பாடம் : **தூணத்து**
>
> "போதொடு **விரி** கூந்தல்" 1:60
>
> "போதொடு **விரை** கூந்தல்"
>
> "கவவுக்கை ஞெகிழாமல்" 1:61

"கவவுகை ஞெகிழாமல்"
"விருந்திற் றேஎம்" 2:5
"விருந்திற் றேயம்"
"கண்ணகி தனக்கென்" 2:90
"கண்ணகி தனக்கே"

இவ்வாறே பிறகாதைகளும் 'ஏ' கரத்தே முடிகின்றது.

"பேரியற் கிழத்தி" 2:84
பேரியற் கிழத்தியை
"பகுதிப் பாடலும்" 3:34
"பகுதியும் பாடலும்"
"வக்கிரித் திட்டத்தை" (3:41)
"வக்கிரித் திட்டதை"
"புண்ணிய நெடுவரைப் போகிய" (3.97)
"புண்ணிய நெடுவரைப் போகுயர்"
(அரும் : உயர வளர்ந்து)
"பேரிசை மன்னர் பெயர் புறத்தெடுத்த"
பெயர் புறக் கொடுத்த"
(அரும் : புறங் கொடுத்தவழி)
வழக்கெனப் பொருந்தி (3.132)
வழக்கெனச் சேர்ந்து
(அரும் : சேர்தல் வழக்கு)
"மரபின விவைதாம்" (5.108)
"மரபின வாயினும்"
(அரும் : இத்தன்மைய வாயினும்)

இவ்வாறு தொடர்வனவற்றை எம் சிலப்பதிகார உரையில் காண்க. இன்றியமையா ஒன்று.

"பாவைமார் **ஆரிக்கும்** பாடலோ பாடல்" (29 : 26 : 5)
"பாவைமார் **ஆரிரக்கும்** பாடலோ பாடல்"
"**வேப்பந்தார்** நெஞ்சுணக்கும்" (பாண்டியன்)
பனந்தோ டுளங்கவரும். (சேரன்)
சோழன் மாலை ஆர் - ஆத்தி ; ஆர் இரக்கும்
என்னும் பாடமே உரியது.
"போந்தை, வேம்பே ஆர்" தொல். 1006

எ-டு : ஆர்க்காடு

பெருங்காப்பிய சிலம்பு - மூலவைப்பகம்

தமிழில் தோன்றிய முதல் பெருங்காப்பியம் சிலப்பதிகாரம். ஒத்தகாலத்த தெனினும் சிலம்பின் பின்னதே மேகலை.

இரண்டும் தமிழ் நிலம்சார் காப்பியங்களே. தண்டியலங்காரம் என்னும் தமிழ் அணி நூல் பெருங்காப்பிய இலக்கணம் கூறுகிறது. அது:

1. பெருங்காப்பியநிலை பேசுங் காலை
   வாழ்த்து வணக்கம் வருபொருள் இவற்றினொன்று
   ஏற்புடைத் தாகி முன்வர இயன்று.
2. நாற்பொருள் பயக்கும் நடைநெறித் தாகித்
3. தன்னிகர் இல்லாத் தலைவனை உடைத்தாய்
4. மலைகடல் நாடு வளநகர் பருவம்
   இரு சுடர்த் தோற்றம் என்றினையன புனைந்து.
5. நன்மணம் புணர்தல்
6. பொன்முடி கவித்தல்
7. பூம்பொழில் நுகர்தல் புனல் விளையாடல்
8. தேம்பிழி மதுக்களி சிறுவரைப் பெறுதல்
9. புலவியில் புலத்தல் கலவியில் களித்தல் என்று
   இன்னன புனைந்த நன்னடைத்தாகி
10. மந்திரம் தூது செலவு இகல் வென்றி
    சந்தியில் தொடர்ந்து
11. சருக்கம் சிலம்பகம் பரிச்சேதம் என்னும் பான்மையின் விளங்கி
12. நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பக்
13. கற்றோர் விரும்பும் பெற்றிய தென்ப

1. மூன்றுமே உள்ளது.
2. மணத்தில் தொடங்கிக் கடவுள் மங்கலம் வாழ்த்து வரந்தரல் என முடிகிறது.

3. ஒப்பிலாக் கற்புக் கண்ணகி காப்பியத் தலைவி.

4. மலை முதலிய புனைவுகள் அனைத்தும் உள.

5. மங்கல வாழ்த்து.

6. சோழன் முடி கவித்தல்

7. பூம்பொழில் புனல் விளையாட்டு, கானல் வரி, கடலாட்டு

8. மணிமேகலை பிறப்பு.

9. மனையறம் படுத்த காதை.

10. இமயக் கல் கொணர்தல்.

11. காண்டம், காதை முதலாம் உட்பிரிவு.

12. முத்தமிழ்க் காப்பியம் – பதினோராடல், வரிப்பாடல்கள் உடைமை.

13. "சிலப்பதிகாரம் என்றோர் மணி
ஆரம் படைத்த தமிழ்நாடு" பாரதியார்.

தண்டியலங்காரத்திற்கு முற்பட்டது சிலம்பு ஆதலால், அதன் வழியே காப்பிய இலக்கணத்தைத் தண்டியார் செய்தாராம்.

❖❖❖

தமிழால் வந்தவை தமிழுக்கே

இளமையிலேயே தமிழை முழுதுறக்கற்று பழுதற பன்னூறு நூல்களைப் படைத்தவர் முதுமுனைவர் ஐயா. தமிழில் ஆழங்கால் பட்டதனால் தாம் கற்றுத் தெளிந்தவற்றை மற்றவரும் உணர விரித்துரைத்தார். சொற்பொழிவுகள் நூலாகாமல் போனால் காற்றில் கரைந்துவிடுமன்றோ? அதனால் எண்ணி எண்ணிப் பொழிந்தவற்றை நூலாக்குவதில் முதன்மையர் ஐயா. தமிழே நினைவாய், சிந்தையாய், எழுத்தாய், நூலாக்கமாய் வாழும் ஐயா படைத்த இந்நூல் செந்நூல், நன்னூல்.

அகவை தொண்ணூறு கடந்த நிலையில், தாம் பெற்ற அறிவுத் தெளிவை, புலமை நயத்தைச் சிலப்பதிகாரக் காப்பியத்துக்கு உரையாக வடித்துத் தந்தவர் பல உரைகளில் காண இயலாத அரிய செய்திகளைத் துருவித் துருவி ஆய்ந்து தோய்ந்து 'சிலப்பதிகாரப் புதையலாய்'த் தோண்டி எடுத்து உங்கள் கையில் தந்துள்ளார்.

சிலப்பதிகாரத்தைப் படைத்தபோது இளங்கோவடிகள் இளையரா? கிழவரா? ; செங்குட்டுவன் பெயர் நிறத்தாலா? கொற்றச் செம்மையாலா?; மங்கல வாழ்த்துள் திங்களையும், ஞாயிற்றையும் போற்றியது ஏன்?, பொற்கொல்லர் ஆயிரவைப் பலியிடலாமா?; சிலம்பு இருபத்திரு அடைமொழிகளால் நூலுள் படைக்கப்பெற்றதன் காரணம் என்ன? பாண்டியன் நெடுஞ்செழியன் தஞ்சாவுக்குக் குற்றம் உணர்ந்ததா? மனச்சான்றா? முதலிய வினாக்களுக்கு விடையறிய நூலைப் படியுங்கள்! நூலில் படிந்து படியுங்கள்!

இருபத்திரு தலைப்புகளுள் புதையலைத் தந்துள்ளார். சிலப்பதிகாரம் தொல்காப்பிய நெறியைப் பின்பற்றிய மூலவைப்பகமாய் திகழ்வதை முன்னே காட்டி நூலைத் தொடங்குகிறார். எச்.ஏ.கிருட்டிணப்பிள்ளையின் கையெழுத்து ஓலைச் சுவடிகளை வைத்துள்ளமையால் அச்சிட்ட நூல்களுக்கும் ஏட்டுக்கும் உள்ள வேறுபாடுகளைக் காட்டுகிறார்.

'தமிழால் வந்தவை தமிழுக்கே' என்னும் தகவார்ந்த கொள்கையர் தந்த நூலைத் தமிழகத்தார் கற்றுப் பயன்கொள்வர் என நம்பும்.

பி. தமிழகன்

உள்ளுறை

		பக்கம்
1.	சிலப்பதிகாரம்–அகம் காட்டும் முகம்	1
2.	'கிழவர் ' இளங்கோ	7
3.	செங்குட்டுவன்	12
4.	மங்கல வாழ்த்துப் பாடலின் மாண்பு	19
5.	கலைத் திருப்பமும் கதைத் திருப்பமும்	35
6.	உருபு செய்த உயிர்க்கொலை	46
7.	கொற்கை	55
8.	கோவலன் பெற்ற விருதுகள்	68
9.	குற்றம் உணரும் குணம்	73
10.	ஊடகன்	76
11.	கதிரும் மதியும்	83
12.	குன்றக் குரவை	87
13.	சிலம்பின் அடையும் நடையும்	93
14.	மனச்சான்று	96
15.	கவுந்தியடிகள்	99
16.	இன்பத் துன்பு	113
17.	கண்ணகியாரும் செல்லத்தம்மனும்	124
18.	போற்றா ஒழுக்கம்	128
19.	கண்களி மயக்கக் காதல்	130
20.	வள்ளுவப் பரப்பாளர் அடிகள்	134
21.	சிந்திக்க ! சீர்தூக்க! தெளிக !	139
22.	காப்பிய உத்திகள்	143

நூல்

1. சிலப்பதிகாரம்–அகம் காட்டும் முகம்

'சிலப்பதிகாரம்' என்பது காப்பியப் பெயர்.

சிலம்பு + அதிகாரம் = சிலப்பதிகாரம்.

சிலப்பதிகாரம் என்னும் பெயர் பதிகத்தின் 59 ஆம் அடியிலும் நூற்கட்டுரையின் 18ஆம் அடியிலும் இடம் பெறுகின்றது.

சிலப்பதிகாரத்தில் *'சிலம்பு'* என்னும் சொல் 40 இடங்களில் இடம் பெறுகின்றது. பத்துப்பாட்டு எட்டுத்தொகை ஆகிய பதினெட்டு நூல்களிலும் 123 இடங்களில் *'சிலம்பு'* என்னும் சொல்லாட்சி உள்ளது.

இவ்விடங்களுள் எவ்வோர் இடத்தும் *'சிலப்பு'*என்னும் சொல் இடம் பெறவில்லை.

சிலம்பு என்பதில் உள்ள *'ம்'* ஆகிய மெல்லினம், *'ப்'* ஆகிய வல்லினமாக வருதல் செய்யுளில் உண்டு என்று கொள்ள வாய்ப்புண்டு.

"அந்நாற் சொல்லும் தொடுக்கும் காலை
வலிக்கும் வழி வலித்தலும் மெலிக்கும் வழி மெலித்தலும்
விரிக்கும் வழி விரித்தலும் தொகுக்கும் வழித் தொகுத்தலும்
நீட்டும் வழி நீட்டலும் குறுக்கும் வழிக் குறுக்கலும்
நாட்டல் வலிய என்மனார் புலவர்" (சொல். 403)

என்பது தொல்காப்பியம். இதன்படி, வலிக்கும் வழி வலித்தலாய்க் கொள்ளலாமா என ஆராய வேண்டும்.

'இவ்வறுவகை விகாரமும் இன்னுழியாம் என்று வரையறுக்கப்படா; செய்யுள் செய்யும் சான்றோர் அணிபெற நாட்டலைத் தமக்கு வலியாகவுடைய செய்யுளின்பம் பெறச் செய்வான் நாட்டுதலை வலியாக உடைய' என்பார் சேனாவரையர்.

*"மெல்லெழுத்தினை வல்லெழுத்தாகத் தொடுக்க வேண்டும் வழி வல்லெழுத்தாகத் தொடுத்தல்"*என்பார் தெய்வச்சிலையார்.

'முந்தை' என்பதை *'முத்தை'*என்று வழங்கும் தொல்காப்பியம் (சொல்.194).

'குறுங்கை' என்பதைக் *'குறுக்கை'* என்று வழங்கும் ஐங்.266.

'பரம்பு', 'பரப்பு' என்றும்; *'வரம்பு'*, *'வரப்பு'*என்றும்; *'கரும்பு'*, *'கருப்பு'* என்றும்; *'இரும்பு'* *'இருப்பு'* என்றும்; இருவகை வழக்குகளிலும் பெருக வழங்குகின்றன.

குரங்கு என்பதைக் குரக்கு எனக் காட்டல் முறையாகாது. குரக்கு என்பதே குரங்கு ஆயது. *'குர்க்குர்'* என்று ஒலிக்கும் அதனைக் குர்க்கு, *'குரக்கு'* என்று சொல்லிக் *'குரங்கு'*என நிலைத்து விட்டது. அதன் ஒலியே இதனை மெய்ப்பிக்கும் சான்று.

"சிலப்பதிகாரம் : இப்பெயர் மென்றொடர்க் குற்றியலுகரம் இயல்பு கணத்துக்கண் திரிந்து வந்தது" என்கிறார் நச்.(குற்.9).

சிலம்பு முன் *குன்றம், சாரல், தடை, பள்ளம்* என்பது போல க,ச,த,ப வல்லினம் *'சிலப்பதிகாரம்'*என்னும் புணர்ப்பில் வந்திலது. '*அ*' கர உயிரே வருமொழி முதல் ஆயது. இதனை, *"விதப்புக்கிளவி வேண்டியது விளைக்கும்"*என்னும் விதியால்,

"ஒற்றென்ற மிகுதியான் இயல்பு கணத்துக்கண்ணும் *குரக்கு ஞாற்சி, நிணம், முகம், விரல், உகிர்* என மெல்லொற்றுத் திரிந்து வருமாறு கொள்க; சிலப்பதிகாரம் என்பதும் அது" என்கிறார். நச்.(எழுத்.குற்.9).

சிலம்பு என்னும் சொல் சிலம்பிலோ, அதற்கு முந்து நூல்களாகக் கிடைத்துள்ள நூல்களுள்ளோ *"சிலப்பு"* என வலிக்கும் வழி வலித்தல் என்னும் இலக்கணம் பெற வரவில்லை.

நூற்பெயர் சொல்லும் இடங்கள் இரண்டில் மட்டுமே *'சிலப்பு அதிகாரம்'* என வந்தமை *'ஒரு குறிப்பை உள்ளடக்கிய ஆட்சியாக இருக்க வேண்டும்'* என்று கொண்டு சிந்தித்தல் முறை. மற்றும் வரம்பு, வரப்பு; பரம்பு பரப்பு என்பவை போல, மக்கள் வழக்கிலும் சிலம்பு சிலப்பு என

என்றும் எங்கும் வழங்கப்பட்டதில்லை என்பதையும் எண்ண வேண்டும்.

கால் அணியாகிய சிலம்பு, ஒலி வகையால் பெற்றது இப்பெயர். இவ்வாறே கோலெடுத்து ஆடும் *சிலம்பாட்டமும்* ஒலிவழிப்பட்டதே. மேலும், பல்வகை ஒலிக்கு இடமாகவும், எதிரொலி தருவதாகவும் உள்ள மலையைச் சிலம்பு எனல் அறியலாம். அதன் மெல்லொலி விளங்க,

> "தினைச்***சி ம்புவ*** தீஞ்சொல் இளங்கிளி;
> நனைச்***சி ம்புவ*** நாகிள வண்டு; பூம்
> புனைச்***சி ம்புவ*** புள்ளினம்; வள்ளியோர்
> மனைச்***சி ம்புவ*** மங்கல வள்ளையே"

எனக் கம்பர் (பால.63) இசைக்கிறார். இம் மென்சிலம்புக்கு வலித்தல் (வன்மை) ஏற்றியது ஏன்? *'வலித்தல் விகாரம் பெற்றது' என்று, இலக்கணம் கூறுவதற்காகவா?*

இளஞ்செல்வியர் காலணி தண்டை ; அவர் குமரிநிலையடையும் போது அணிவது, சிலம்பு; அச்சிலம்பு மண நாளுக்கு முன் நாள் கழற்றப்படும். அக்கழற்றுதல் நிகழ்வு, *'சிலம்பு கழி நோன்பு'* எனப்பட்டது. மகளிர் காலில் சிலம்பு உள்ளமை, இல்லாமை கொண்டே மணமானவர், மணமாகாதவர் என அறிந்து கொள்ள வாய்த்த காவல் ஏற்பாடு அஃதாம்.

கண்ணகியார் காற்சிலம்பு காலில் இல்லை; ஏனெனில், சிலம்பு கழி நோன்பு நிறைந்து *'மண அணி'* பூண்டவர் அவர். காலணிகலம் கழற்றி, கழுத்தணி பூண்ட நிலை அது. ஆதலால், சிலம்பு காப்புப் பெட்டகத்தில் இருக்கும் பொருளாயிற்று. அச்சிலம்பு பொருளாக ஈட்டும் திட்டம் கொண்டே மதுரைக்குக் கிளர்ந்தனர் கோவல கண்ணகியர். *'வான் பொருட் குன்றம் தொலைந்தது'* என வருந்திய கோவலனிடம், *'சிலம்புள கொண்ம்'* என்னும் *கண்ணகி வாக்கே சிலம்பு சிலப்பதிகாரத்தில் முதற்கண் தலைகாட்டும் இடமாம்!*

சிலம்பு ஒலி செய்தலைச் சிலப்பதிகாரம்,

'சிலம்புவாய் புலம்ப'

என்கிறது. அஞ்சி அலமந்து ஓடுவாரை,

"நூபுரம் புலம்பிடச் சிலம்பு நொந்தழக்
கோபுரந்தொறும் குறுகினார் சிலர்"

என்பார் கம்பர் (உயுத்.3897).

இவற்றொடு தொல்காப்பியர், *'புலம்பே தனிமை'* என்பதை நோக்க ஓர் உள்ளீடு புலப்படுகின்றது. சிலம்பு முதலாகச் சென்று கலன் ஈட்டச் செல்லும் கோவலன், ஒற்றைச் சிலம்பைப் பெற்றுச் செல்வானேன். ஒற்றை மிதியடி கேட்பாரார்? தருவாரார்? கண்ணகியார் சிலம்பு பயன்படுத்தார். பிறர்க்குத் தர நேரினும் ஒன்றைத் தாரார்; பெறார். பெறினும் பயனும் கொள்ளார்.

இணை பிரியா இரட்டை, இணை பிரித்து விற்கச் செல்லல் கோவலன் வரலாற்றில் அன்றி உண்டோ? கோவலன் விலையிடக் கொண்டு சென்றது ஒற்றைச் சிலம்பு எனின், களவு கோள்பட்ட சிலம்பும் ஒன்றாக இருந்தது ஏன்?

கள்வனுக்கு இரண்டில் ஒன்றை எடுக்க நேர்ந்தது என்ன?

எந்தக் கால் சிலம்பைக் கோவலன் விற்கக் கொண்டு சென்றானோ, அதே காற்சிலம்புதான் களவாக வேண்டுமா?

சிலம்புகளுள் வலக்கால் சிலம்பு, இடக்கால் சிலம்பு எனத் தனித் தனி அமைப்பு உண்டு அல்லவோ, மிதியடியைப் போல!

மீண்டு வந்த சிலம்பு கண்டு, *'தன்தேவி சிலம்பென மன்னன் மயங்கலாம்! அதற்குடைய மாதேவியும் மயங்கிப் போய்த்'* தன் சிலம்பெனக் கொள்வாளா! கொண்டாளே எதனால்?

மன்னவன் தேவி அணி சிலம்பும், *வாணிகன் தேவி* அணி சிலம்பும் ஒத்ததென அமைய ஓரிடத்து ஒருவரால் செய்யப்பட்டதா? இல்லையே!

கோவலன் சிலம்பும் கோவேந்தன் சிலம்பும் முறையே புகார் நகரிலும், மதுரை நகரிலும் உள்ள வெவ்வேறு பொன் வினைஞர்களால் அல்லவோ செய்யப்பட்டவை.

உள்ளிடு *'பரல்'* புலப்படாதொழியினும், புறத்தோற்றம் கலைநிலை அளவுப்பாடு என்பனவெல்லாம் ஒத்தியல நேர்ந்தமை ஏன்?

பழிவழிப் படாஅப் பஞ்சவன் பழிக்கு ஆட்படவா இவை? அறவோர் அவையம், ஆயம், அமைச்சு என்பவை எல்லாம் எட்டாதொழியக், கரவே காவல் கடன் கொண்டது போலக் குற்றம் சாற்றியவனிடமே, 'கொன்றச் சிலம்பு கொணர்க' என ஏவ ஓர் ஊடல் தவிர்ப்புத் தானா இடமாக வேண்டும்?

இளங்கோவடிகள் சார்ந்த *சமண் சமயப் பிறப்புக் கோட்பாடு வினைக்கோட்பாடு*-ஈர்த்துச் செல்ல முன்னை வினை முடிச்சுப்போட்டு முடிக்கிறார்! 'ஊழ் என்பதனொடு வினை' என்பதை *இணைத்த முதல்வர் முன்னவர்-இளங்கோவடிகளேயாவர்.* அவர் நூலுக்கு முன்னை நூல்களில் ஊழ் என்னும் சொல் 96 இடங்களில் இடம் பெற்றிருந்தும், வினை ஒட்டவில்லை. அடிகள் ஊழ்வினை என இணைத்ததுடன், "ஊழ்வினை வந்து உருத்து ஊட்டும்" என்று நூலியல் நோக்கையும் உரைத்தார். சிலப்பதிகாரம் என வல்லொற்றிட்டு அதிகாரப்படுத்தினார். ஏன்?

1. கோவலன் கொல்லப்பட்டான்.

2. பாண்டியன் தேவியொடு முடிந்தான்.

3. கண்ணகி விண்ணகம் சென்றார்.

4. மாதவியும் மணிமேகலையும் துறவு பூண்டனர்.

5. கோவலன் தாயும் கண்ணகி தாயும் இறந்தனர்.

6. கோவலன் தந்தையும் கண்ணகி தந்தையும் துறவு பூண்டனர்.

7. நற்றுணையாய் வந்த துறவு மூதாட்டி,

காவுந்தி ஐயை பாடுகிடந்து உயிர் துறந்தார்.

8. தெய்வக் கோலம் கண்ட ஆயர்முதுமகள் மாதரி,

எரிவளர்த்து இறந்தாள்

9. மதுரை எரியுண்டது!

10. பொற் கொல்லர் உயிர்ப்பலி ஊட்டினர்.

11. மாடல மறையோன் தீர்த்த யாத்திரை சென்றான்.

12. செங்குட்டுவன் தன்னொத்த வேந்தனுக்கு

நேர்ந்த தெண்ணி நைந்தான்!

13. கனக விசயர் கதிர்த்தலை முடியைக் கல் நெரித்தது.

14. கங்கைப் போரில் செங்குருதி வழிந்தது!

ஒற்றைச் சிலம்பின் – ஆம்!

மென் சிலம்பின் விளைவுகளா இவை?
அச்சிலம்பின் கொடுமையை நெற்றிப்
பொட்டென இட்டுவைக்கவே
இளங்கோ வடிகள்
'சிலப்பதிகாரம்' எனப் பெயர்ச்சூட்டு
நிகழ்த்தினர் என்க.
சிலம்பு செய்த வன்கொடுமைகளையெல்லாம்
அகத் தடக்கிய முகக் குறியீடே
'சிலப்பதிகாரம்'

என்னும் பெயரீடாம் என்க.

*இது முந்தையர் கண்டதும் காட்டியதுமாம் வலிக்கும்வழி வலித்தல் ஆகாமல், வலியாவழி வலித்தல் எனப் பெயரீடு பெற வேண்டுவதாம்.

❖❖❖

2. 'கிழவர்' இளங்கோ

இளங்கோவடிகள் தமிழ்க் காப்பியங்களின் தந்தை ஆவார். முதற்காப்பியமாகச் சிலப்பதிகாரத்தை இயற்றினாலும் பின் வந்த காப்பிய நூல்களுக்கு இலக்கணமாக அமையும் சிறப்புப் பெற இயற்றினார். இளங்கோவடிகள் கொண்டிருந்த புலமையையும், பட்டறிவு முதிர்வையும் அவர் தம் சிலம்பு செவ்வனே தெரிவிப்பதாக இருக்கின்றது. மேலும், தமிழர் எழுத மறந்ததான *'தம் வரலாறு'* இளங்கோவடிகளாலே தான் முதற்கண் எழுதப்படுகின்றது. ஆதலின், *'தம் வரலாற்றின் தந்தை'* என்றும் இளங்கோவடிகளைக் குறிப்பிடலாம். இவ்விளங்கோவடிகள் சிலம்பு எந்த அகவையில் எழுதத் தொடங்கினார் என்பது குறித்து இக்கட்டுரையில் ஆராய்வோம்.

இளங்கோ என்றவுடன் நம் மனக்கண் முன் இளமை தான் வந்து நிற்கின்றது. அவ்விளமைக் கோலந்தான் இளங்கோவடிகள் நூல் யாக்கப் புகுந்த கோலமா எனின் காண்போம். இமயத்தை எல்லையாகக் கொண்டு ஆண்ட நெடுஞ்சேரலாதன் பெற்றெடுத்த மக்கள் இருவர். அவருள் மூத்தவன் செங்குட்டுவன்; இளையவர் இளங்கோ ! ஒரு நாள், மக்கள் இருவரும் பக்கத்தே இருக்க, சேரலாதன் அரியணையிலே அமர்ந்திருந்தான். அதுகாலையில், நிமித்தம் வல்லான் ஒருவன் அவ்விடத்தை அடைந்தான். அவன் இளங்கோவைக் கூர்ந்து நோக்கி *"இவ்விளையவனே அரசாளும் இலக்கணம் அனைத்தும் அமையப் பெற்றுள்ளான்; ஆதலால் இவனே அரசனாவதற்கு உரியன்"* என்றான். இச்சொல்லைக் கேட்ட இளங்கோவின் முகம் மாற்றம் உற்றது. நிமித்திகனை வெகுண்டு நோக்கி *"மூத்தவன் இருக்க இளையவனே ஆள வேண்டும் என்று முறைகெடக் கூறினை; உன் கூற்றைப் பொய்யாக்குமாறு இப்பொழுதே துறவு கொள்கின்றேன்"* என்று துணிந்தார். அப்படியே நடத்திக் காட்டினார்.

இளங்கோ துறவு கொள்ளும் நேரத்தே செங்குட்டுவன் ஆட்சி ஏற்கத் தக்க ஆண்டினனாக இருந்தான். அவனுக்கு நேர் இளையவர் இளங்கோ! செங்குட்டுவனுக்கு நேர்ந்த துயரத்தைக் குறிப்பால் அறியும்

திறம் இளங்கோவடிகளுக்கு இருந்தது. அத்துயரை மாற்றியமைக்கத் தக்க எண்ணம் நொடிப் பொழுதில் தோன்றியது. இவற்றை நோக்குங்கால் செங்குட்டுவனுக்கு அகவை பதினாறும், இளங்கோவுக்கு அகவை பன்னிரண்டும் ஆகவாவது இருந்திருக்கக் கூடும் என்ற முடிவுக்கு வரலாம்.

இஃது ஒருபுறம் இருக்க, பதிற்றுப்பத்தின் ஐந்தாம் பத்தைப் பாடிய புலவர்களில் ஒருவர் ***பரணர்*** ஆவர். அவர் பொய்யா நாவிற் பரணர் என்று கொண்டாடப் பெறும் புகழாளர். அவர் செங்குட்டுவனது வரலாற்றைப் ***பதிற்றுப்பத்தில்*** குறிப்பிடுகின்றார். சேரன் மேல்கடலிடைக் கொண்ட வெற்றியும், மோகூர் மன்னன் முரசங் கொண்ட வெற்றியும் அவரால் குறிக்கப் பெறுகின்றன. வடநாடு சென்று பத்தினிக்குக் கல்கொண்டு வந்த வரலாறு அவரால் குறிக்கப் பெறவில்லை. அன்றியும், பிற்கால வாழ்வில் செங்குட்டுவன் கொண்ட வெற்றிகளும் குறிக்கப் பெறவில்லை. பரணர் பாடிய பாடல்கள் பதிற்றுப்பத்தினை அன்றி வேறு சில தொகை நூல்களிலும் உள, அங்கெல்லாம் பெரும் வரலாறுகளைச் சுட்டிச் செல்லும் அவர், செங்குட்டுவன் பிற்பகுதி வரலாற்றின் நிகழ்ச்சிகள் நடந்த போது இருந்திருப்பாராயின், அவற்றைக் கூறாது விட்டுச் சென்றிருக்க மாட்டார். ஆதலால் பரணர் செங்குட்டுவனது முற்பகுதி வரலாற்றையே தாம் பாடிய பாடல்களில் குறித்தவர் ஆகின்றார்.

இளங்கோவடிகள் தம் நூலில் ஒரு காண்டத்தைச் சேரனுக்கு உரித்தாக்குகின்றார். அங்கே தான் செங்குட்டுவன் வடநாடு சென்று கற்புத் தெய்வத்திற்குக் கல் கொணர்ந்த வரலாறு கூறப்படுகின்றது. இளங்கோவடிகளோ ஆய்ந்து தெளிந்து அளவோடு கூறுபவர். ஆதலின், தம் நூலுக்கு ஏற்ப வடவர் போரையும், அதன் வெற்றியையும் கல்லெடுப்பையும் விரியக் கூறினார். எஞ்சிய போர்களைச் சுருக்கிக் காட்டினார். இதனால் செங்குட்டுவன் *வரலாற்றின் முற்பகுதி பரணராலும், பிற்பகுதி இளங்கோவடிகளாலும்* குறிக்கப் பெற்றது எனலாம். இஃது இவ்வாறிருக்க, ஒவ்வொரு பத்திற்கும் பதிகம் என ஒன்று பதிற்றுப்பத்தைத் தொகுத்தோரால் எழுதிச் சேர்க்கப் பெற்றுள்ளது. அதனை எழுதியவர், வரலாறும் கால உணர்வும் தெளிய அறிந்தவர் என்பதை அவர் குறிப்புக்கள் அறியச் செய்கின்றன. பதிற்றுப்பத்து கூறும்

சேர அரசர்கள் அத்தனை பேரின் ஆட்சியும் முடிந்த பின்னர் அவர் தக்க சான்றுகளைக் கொண்டு முறைபெறப் பதிகம் பாடியிருக்க வேண்டும். இவ்வாறு பாடப்பெற்ற பதிகங்களில் ஒன்றே *ஐந்தாம் பத்துப் பதிகமாகும்.* அப்பதிகம், செங்குட்டுவன் நடத்தியதாகப் பரணர் கூறும் போர்களையும், அதற்கு மேல் அவன் நடத்திய போர்களையும் இளங்கோவடிகள் குறிப்பிடும் வட நாட்டுப் போரையும் சேர்த்துத் தொகுத்துக் குறிப்பிடு கின்றது. அதில்,

"கடவுட் பத்தினிக் கற்கோள் வேண்டிக்
கானவிற் கானம் கணையிற் போகி
ஆரிய வண்ணலை வீட்டிப் போரிசை
இன்பல் அருவிக் கங்கை மண்ணி"

என்னும் பகுதி குறிப்பிடத் தக்கதாம்.

மற்றும், நமக்குத் துணையாகும் நல்லதொரு குறிப்பையும் அப்பதிகம் தருகின்றது. *"கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன் ஐம்பத்தையாண்டு வீற்றிருந்தான்"* என்பதே அது. வாழ்ந்தது ஐம்பத்தையாண்டு அல்ல. அவன் வீற்றிருந்தது- அரியணையில் வீற்றிருந்தது - ஐம்பத்தையாண்டு! இந்த ஆண்டினை வாழ்வுயாண்டு எனக் கருதக் கூடாதோ எனின், பதிற்றுப்பத்தின் வேறு சில பதிகங்களில் ***"பதினாறாண்டு வீற்றிருந்தான்", "பதினேழியாண்டு வீற்றிருந்தான்"*** என்று வருவனவற்றால் ஒவ்வாமை அறிக. அன்றியும் கல்லெழுத்துக்களிலே காணப்பெறும் காவலர் ஆண்டுகள் ஆட்சியாண்டாக இருக்கும் உண்மையும் தெளிக. வாழ்ந்ததை வீற்றிருத்தல் என்னும் வழக்கின்மையும் காண்க!

இங்குக் கூறியவற்றால் செங்குட்டுவன் ஐம்பத்தையாண்டுகள் ஆட்சி செய்ததாகக் கொள்ள வேண்டுவது உண்மையாவதாலும், அவன் பதினாறாம் ஆண்டிலே ஆட்சிப் பொறுப்பேற்று இருக்கக் கூடும் எனக் கருதுவதாலும் எப்படியும் செங்குட்டுவன் *எழுபது ஆண்டுகட்குக் குறைவுபடாமல் வாழ்ந்திருந்தான் என்பது தெளிவாம்.* மேலும் அவன் பிற்பகுதி வாழ்விலே நிகழ்ந்ததுதான் வட நாட்டுக் கற்கோள் செலவு என்பதை ஒரு வழியால் ஆராய்வோம்.

சேரனது முற்பகுதி நிகழ்ச்சியாயின் மிக உயர்ந்ததான இச்செயலைப் பரணர் கூறாது விட்டுச் சென்றிருக்க மாட்டார் என்பது உறுதி. இது நிற்க; வடநாடு சென்று கண்ணகிக்குக் கல்லெடுத்துக் கங்கையில் நீராட்டி வஞ்சிமா நகர் வந்து சேர்ந்த செங்குட்டுவன், ஆடல் பாடல்களில் மகிழ்ந்து அரியணையில் அமர்ந்திருந்தான். அதுபோழ்து நீலன் என்னும் ஒற்றர் தலைவன் வந்தான். நீலனோ, தமிழர் தம் ஆற்றலை இகழ்ந்த கனக விசயரைச் சேரன் ஆணைப்படி, பாண்டிய, சோழ வேந்தர்க்குக் காட்டிவரச் சென்றவன். அவன், பார்த்திபர் இருவரும் *"தோற்றோடியவரைச் சிறை செய்து வந்த வெற்றி போலொரு வெற்றி கண்டிலேம்"* என்று கூறிய இழிமொழியைக் கொண்டு வந்து சேரனிடம் சேர்த்தான். அதனால் செங்குட்டுவன் சீற்றமுற்றுச் சோழ பாண்டியர்களுடன் போரிட எழுந்தான். அது போழ்து அருகில் இருந்த மாடலன் என்னும் மறையோன்.

"வையங் காவல் பூண்டநின் நல்யாண்டு
ஐயைந் திரட்டி சென்றதற் பின்னும்
அறக்கள வேள்வி செய்யாது யாங்கணும்
மறக்கள வேள்வி செய்வோ யாயினை"

என்றான். இவன் கூற்றால் செங்குட்டுவன் வட நாடு சென்று மீண்டபொழுது, ஆண்டு-வையங்காவல் பூண்ட ஆண்டு-*ஐயைந்திரட்டி* (ஐம்பது) ஆகிவிட்டது. முன்னரே பதினாறு இளமையில் செங்குட்டுவன் ஆட்சிப் பொறுப்பு ஏற்றிருக்கக் கூடும் எனக் கருதிக் கொண்டு விட்டபடியால், இப்பொழுது 66 யாண்டுகள் ஆக வேண்டும்.

செங்குட்டுவன் வட நாடு சென்று இமயத்தில் கல் எடுத்துக் கங்கைக் கரை வர எண்ணான்கு மதியம் ஆகின்றது. அதன் பின்னர் சில திங்கள் செலவிட்டே வஞ்சி வந்தடைந்திருக்கக் கூடும். ஆகலின் செங்குட்டுவன் வட நாட்டுச் செலவுக்கு மூன்று யாண்டுகளேனும் செலவிட்டு இருக்கலாம். ஆதலால் தனது 63ஆம் ஆண்டில் குன்றக் குறவர்களாலும், புலவர் சாத்தனாராலும் தன் தம்பி இளங்கோவுடன் இருந்து கண்ணகி வரலாற்றை அறிந்து கொண்டான் செங்குட்டுவன். அப்பொழுது இளங்கோவடிகள் அகவை 59 ஆக இருத்தல் வேண்டுமன்றோ!

இமயக் கல்கொண்டு வந்த பின்னர் கண்ணகியார் கோயில் கட்டவும், திருச்சுற்றெடுக்கவும், நடுகல் விழா நடத்தவும், அண்டை நாட்டு

வேந்தர்களுக்கும், அயல்நாட்டு மன்னர்களுக்கும் அழைப்பு அனுப்பி வரச் செய்ததற்கும் ஆண்டுகள் சில கடந்தன. பதிற்றுப்பத்துப் பதிக ஆசிரியர் கூறியவாறு செங்குட்டுவனது 55யாண்டு ஆட்சியில் எஞ்சியிருக்கும் ஐந்தாண்டுகளையும் இப்பணியிலே செலவிட்டான் என்று உறுதி செய்யலாம்.

தமது ஐம்பத்தொன்பதாம் ஆண்டிலே குன்றக்குறவர் கூறிய கண்ணகியார் வரலாற்றையும், அதனை விளக்கிக் கூறித் தூண்டியும் வேண்டியும் நின்ற சாத்தனார் கூற்றையும் உளத்தே தேக்கி ஏறக்குறைய ஒன்பது ஆண்டுகள் எண்ணி எண்ணித் திளைத்த அடிகள் அதன் பின்னரே தம் புலமைச் செறிவும் கலைநலமும் திகழ முத்தமிழ்க் காப்பியமாம் சிலம்பை இயற்றினார் ஆதல் வேண்டும்.

கண்ணகியாரின் வரலாற்றைக் கேட்டவுடனே அடிகள் நூல் தொடங்கிப் பாடியிருக்கக் கூடாதோ எனின் சாத்தனார் வரலாற்றை அடிகளிடம் கூறும் இடமே, வரலாற்றின் வேறொரு திருப்பத்திற்கு உரிய இடமாக அமைந்தது. உடனே எப்படிப் பாடத் தொடங்க முடியும்? மேலும் இலக்கியம் நாட் குறிப்பா? அவ்வாறு இருக்குமாயின் கண்டவுடனோ கேட்டவுடனோ குறித்து விட முடியும். குறிக்கவும் வேண்டும். சீரிய காப்பியம் பாடத் தொடங்குவோர் அதன் முடி நிலை தெளிந்தன்றித் தொடங்குதல் இயல்பு இல்லை. அன்றியும் சிலம்பினைச் சிறிது நோக்கிப் பார்ப்பினும் வஞ்சிக்காண்ட நிகழ்ச்சிகள் பல, புகார் மதுரைக் காண்டங்களிலே சுட்டப் பெறுவதை உணரக் கூடும். ஆகலான் வரலாறு அனைத்தும் நிகழ்ந்த பின்னரே தான் அடிகள் சிலம்பு பாடத் தொடங்கினார் என்பது தெளிவாம்.

ஆகையால் பன்னாட்டு வேந்தரும் பாராட்டுமாறு செங்குட்டுவன் சிலைக் கோயில் எடுத்து வழிபாடு செய்த பின்னரே அடிகள் கலைக்கோயிற் பணி தொடங்கினார். அப்பணி தொடங்கும் காலையில் அடிகட்கு அகவை ஏறக் குறைய 67ஆக இருத்தல் வேண்டும். காப்பியம் எழுதவும், அரங்கேற்றம் செய்யவும் மேலும் சில பல ஆண்டுகளைச் செலவிட்டு நிறைநாட் செல்வராய்ப் பெருவாழ்வுற்றிருக்க வேண்டும் என்பது உறுதியாகும்.

3. செங்குட்டுவன்

குட்டுவன் என்பது குடிப்பெயர்; செம்மை என்பது அடைமொழி. இவ்வடைமொழி வண்ணம் பற்றியதோ? தன்மை பற்றியதோ? இதனை ஆராய்வதே இக்கட்டுரை.

"செம்மை சிறுமை சேய்மை தீமை
வெம்மை புதுமை மென்மை மேன்மை
தீண்மை உண்மை நுண்மை இவற்றெதிர்
இன்னவும் பண்பிற் பகாநிலைப் பதமே"

என்பது பண்புப் பகாநிலைச் சொற்கள் பற்றிய நூற்பா. இந்நூற்பாவிற்கு உரைவரைந்த பெருமக்கள் செம்மைக்குக் கருமை வெண்மை முதலியவற்றை எதிர்ச்சொல் எனக் காட்டினர். இவை இன்னவும் என்பதனுள் அடங்கும். கருமை முதலிய நிறங்கள் செம்மை போன்றவே அன்றி எதிரிடையானவை அல்ல என்பது எவரும் அறிந்ததே. சிறுமைக்குப் பெருமையும், சேய்மைக்கு அண்மையும், தீமைக்கு நன்மையும் போலத் தன்மையால் எதிரிட்டவை அல்ல கருமை முதலியவை ; ***'செம்மை'யின் எதிர்ச்சொல் 'கொடுமை'*** என்பதாம். செங்கோல் என்பதை அறிக.

செம்மையாவது நேர்மை; வளையாத் தன்மை.

"ஆகாத் தோம்பி ஆப்பயன் அளிக்கும்
கோவலர் வாழ்க்கையோர் கொடும்பா டில்லை"

சிலப்.15:120, 121

என்பது அடிகள் வாக்கு. கோவலர் கைக்கண் உள்ள கோல் ஓரொருகால் அலைப்பது ஆகலின்.

"கொடுங்கோல் கோவலர்" – (முல்லைப்பாட்டு) என்கிறார் நப்பூதனார். இனி அவர் கைக்கோல் வளைவுடையது என்பதைச் சுட்டுவதுமாம்.

செம்மை செவ்விய தன்மையால் நேர்மை ஆகலின், ***'நடுவு நிலைமை'*** என்பதாம். நடுவு நிலைமையாவது ***ஒரு பால் கோடாமை.***

"சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி"

என்னும் குறள்மணி, நடுவு நிலைமையை உவமையால் நன்கனம் வலியுறுத்தும். மேலும்,

"நெடுநுகத்துப் பகல்போல
நடுவுநின்ற நன்னெஞ்சினோர்"

என்னும் கடியலூர் உருத்திரங்கண்ணனார் வாக்கும்

"நுகத்துப் பகலாணி அன்னான்"

என்னும் பொய்யாமொழியார் வாக்கும்,

'செம்மையின் ஆணி'

என்னும் கம்பன் வாக்கும் காணத்தக்கன.

ஒருபால் சாயாத நடுவுநிலைச் செம்மை, செப்பம் எனவும் பெறும். செப்பம் உடையான் செவ்வியான் எனப் பெறுவான்.

"சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உட்கோட்டம் இன்மை பெறின்"

என்றும்,

"செப்பம் உடையவன் ஆக்கம்"

என்றும்,

"செப்பமும் நாணும் ஒருங்கு"

என்றும்,

"செவ்வியான் கேடும்"

என்றும் வரும் குறள்மணிகளைத் தெளிக.

நேர் கிழக்கைச் *'செங்குணக்கு'* என்றும், சரிவின்றி நிமிர்ந்தெழுந்துள்ள மலையைச் செங்குன்று *'செங்கோடு'* என்றும், நேரிய கூரிய அம்பைச் *'செங்கோல்'* என்றும், நேரிய பார்வையைச் *'செந்நோக்கு'* என்றும், இருவகை வழக்கினும் உண்மை காண்க. இவற்றை நோக்க *'செங்குட்டுவன்'* என்பது ***செவ்விய நேரிய-நடுவுநிலை போற்றிய குட்டுவன்*** என்பது போதரும். அகச் சான்று காட்டின் அன்றோ ஏற்கும் எனின் காட்டுதும்.

1) மதுரைச் சாத்தனார் மலை நாட்டுக்குச் சென்று செங்குட்டுவனைக் கண்டு கோவலற்கு உற்றதும், கண்ணகி வழக்கும், தென்னவர் கோமானும் தேவியும் பட்டதும், கண்ணகி மலைநாட்டுக்கு வந்ததும் ஆகிய செய்திகளை ஒழிவின்றி உரைத்தார். அதனைக் கேட்டவுடன்,

"எம்மோ ரன்ன வேந்தற் குற்ற...
செம்மையில் இகந்தசொற் *செவிப்புலம் படாமுன்*
உயிர்பதிப் பெயர்ந்தமை உறுக வீங்கென
வல்வினை வளைத்த கோலை மன்னவன்
செல்லுயிர் நிமிர்த்துச் ***செங்கோல் ஆக்கியது"*** 2.25.95-99

என்று செங்குட்டுவன் கூறும் உரைமணி, அவன் செங்கோல் தெய்வத்திற்குத் தலை வணங்கித் தாழாத் தொண்டியற்றும் தனிப் பேரடியான் என்பதைத் தெள்ளிதின் விளக்கும்.

2) மேலும், பாண்டியன் தான் செய்த பழிக்குக் கழுவாய் தானே தேடிக் கொண்டதை வியந்து பாராட்டும் செங்குட்டுவன், ஆள்வோருக்கு உண்டாம் அல்லல்களைக் கூறுமுகத்தான் தன்செங்கோல் நாட்டச் சீர்மையைப் புலப்படுத்துகின்றான்.

"மழைவளங் கரப்பின் வான்பேர் அச்சம்
பிழையுயிர் எய்திற் பெரும்பேர் அச்சம்
குடிபுர வுண்டுங் ***கொடுங்கோல் அஞ்சி***
மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்ப மல்லது தொழுதக வில்"

என்பது அவன் வாக்கு.

3) இனி, வடநாட்டின்கண் நிகழ்ந்த திருமண நிகழ்ச்சி ஒன்றில் நாவினைக் காவாக் கனகன் விசயன் முதலாயவர், *'தென்னாட்டு வேந்தர் இமயத்தில் இலாஞ்சினை பொறித்த நாளில் எம்போலும் வேந்தர் ஈங்கில்லை போலும்'* என்றுரைத்த மொழியைத் துறவோர் வழியாகக் கேள்வியுற்ற செங்குட்டுவன், வடநாட்டின் மேற்படை கொண்டு செல்ல விழைந்திருந்தான். அவ்விழைவைப் *'பத்தினிக் கற்கோள்'* விரைந்து தூண்டிற்று. வஞ்சினங் கூறி வட நாட்டுச் செலவு மேற்கொள்கிறான் செங்குட்டுவன்.

வஞ்சினமாவது நெடுமொழி. *'இன்னது பிழைப்பின் இதுவாகியர் எனத் துன்னருஞ் சிறப்பின் வஞ்சினம்'* (தொல் புறத்.24) என்னும் சிறப்புடையது. வஞ்சினம் உயிரெனப் போற்றும் ஒன்றையோ பலவற்றையோ, சுட்டிக் கூறி வஞ்சினம் கூறப்பெறும் என்பதை இலக்கியம் கற்ற, எவரும் அறிவர். அவ்வாறாகச் செங்குட்டுவன் கூறம் வஞ்சின மொழி யாது?

"கடவுள் எழுதவோர் கற்கொண் டல்லது
வறிது மீளுமென் வாய்வாள் ஆகிற்
செறிகழல் புனைந்த செருவெங் கோலத்துப்
பகையரசு நடுக்காது பயங்கெழு வைப்பிற்
குடிநடுக் குறூஉம் கோலேன் ஆகென"

முழங்குகின்றான். *'குடிநடுக் குறூஉம் கோலை'* எவ்வளவு கொடுமையாகக் கருதினான் செங்குட்டுவன் என்பதை விளக்க வேறு சான்று வேண்டுவதின்றாம்.

4) இனிச் செங்குட்டுவன் வடநாட்டுச் செலவினை மேற்கொண்டு கங்கைக் கரைக்கண் இருந்த காலையில், தென்னாட்டினின்று போந்த மாடலன் என்னும் மறையோன், பாண்டிநாட்டு நிலைமையையும், சோணாட்டுச் செய்தியையும் தானே விரித்துரைக்கின்றான். பொழுது போன பின்னர் செங்குட்டுவன் மாடலனை மீண்டும் தானே அழைத்து,

"இளங்கோ வேந்தன் இறந்த பின்னர்
வளங்கெழு நன்னாட்டு மன்னவர் கொற்றமொடு
செங்கோற் றன்மை தீதின் றோவென"

வினவுகின்றான். தன் மைத்துன வளவனுக்கு இருந்த தாயவுரிமைப் போரைத் தகர்த்து அரசாக்கி செங்குட்டுவன். அச்செயல் முடித்த பின்னர் வடநாட்டுச் செலவு மேற்கொண்டான். ஆகலின் அச்சோணாட்டுச் *'செங்கோற்றன்மை தீதின்றோ'* என வினவுகின்றான்.

இவ்வினாவினால் தன்னாட்டில் மட்டுமன்றி எந்நாட்டிலும் செங்கோற்றன்மை சீருற விளங்க அவாவியவன் செங்குட்டுவன் என்பது விளக்கமாம்.

5) செங்குட்டுவன் மலைவளங் காணச் சென்ற காலையில் 'ஏழ்பிறப்படியோம் வாழ்க நின் கொற்றம்' என வீழ்ந்து வணங்கிய குன்றக் குறவர், *'கான வேங்கைக் கீழ் நின்ற காரிகை வானம் போகிய'* இறும்பூது நிகழ்ச்சியைக் கண்டவாறு கூறினர். கலங்கி நின்ற அக்காரிகை சேரர்

நாட்டகத்து இவ்வாறு *'அல்லற்பட்டு ஆற்றாது'* அழுங்குவார் இலர் என்று உறுதியாகக் கருதினர்.

"எந்நாட் டாள்கொல் யார்மகள் கொல்லோ
நின்னாட் டியாங்கண் நினைப்பிலும் அறியோம்"

என்றனர். குன்றுவாழ் மக்களே கோன்முறை கோடாக்கோன்மை தம் நாட்டில் நிகழ்வதாகக் குறிக்கொண்டு வாழ நெறிப்படுத்திய காவலன் செங்குட்டுவன் என்னின், அவன் செங்கோல் சீர்மை என்னே!

6) வஞ்சி மூதூரில் மகிழ்ந்திருந்தான் குட்டுவன். அப்பொழுது எழுந்த முழுமதியைக் கூறவந்த அடிகட்குக் குட்டுவன் குடிபுறந் தரும் கோன்மையே முன்னின்றது. ஆகலின்,

"குடிபுறந் தருங்கால் திருமுகம் போல
உலகுதொழத் தோன்றிய மலர்கதிர் மதியம்"

என்றார். செங்குட்டுவன் குடி புறந்தரூஉம் செங்கோன்மையை விளக்கும் உவமையாகலின் கருதத் தக்கதாம்.

(7-8) செங்குட்டுவனை விளியாக *'அறக்கோல் வேந்தே'* (28:96) என்றும், *"செங்கோல் வேந்தே" (28:157)* என்றும் அடிகளார் கூறியுள்ளமையும், அவன் அவையத்தைச் *'செங்கோல் வேந்தன் திருவிளங்கு அவையம்'* (2:144) என்று கூறியுள்ளமையும் நோக்குதற்குரியன.

9) செங்குட்டுவற்கும் இளங்கோவடிகட்கும் உழுவலன்பு பூண்ட முத்தமிழ் ஆசான் சாத்தனார், மணிமேகலை வஞ்சி மாநகர் புக்க காலையில் ஆங்கு ஆட்சி புரிந்தவன்,

"செங்குட்டுவன் எனும் செங்கோல் வேந்தன் வேந்தன்" (26:77)

என்று குறிக்கின்றார். இவ்வாற்றால் எல்லாம் செங்குட்டுவன் என்பதும், அவன் செங்கோற் குட்டுவன் என்பதும் தெளிவாம்.

இஃதிவ்வாறாக, 'நம்சேரல் பெருந்தகை குட்டுவன் எனத் தனித்துவம் வழங்கப்படுவன் ; இவனுக்குரிய அடைச் சொல்லாகிய செம்மை **இவனது நிறம் பற்றி வழங்கப்பட்டதாகும்.** இது பற்றியே, மணிக்குட்டுவன் என்றும் இவன் வழங்கப் பெற்றவன் என்று சாசனமொன்றால் தெரிகின்றன என ***சேரன் செங்குட்டுவன்*** ஆசிரியர்

மு. இராகவர் கூறியுள்ளார். மேலும் நாமக்கல் சாசனத்தில் சேரரின் முன்னோருள் *'மணிக் குட்டுவன்'* என்பவனும் ஒருவனாகக் காணப்படுகின்றான் என்றும், அவன் நன்னூல் மயிலைநாதர் உரையில் காட்டப்பெறும் திருமணக் குட்டுவன் ஆகலாம் என்றும் மணக்குட்டுவன் என்றும் கொள்ளத்தகும் என்றும், அதற்கு மணத் தக்காளி மணித் தக்காளி என வழங்குவது சான்று என்றும், மணி என்பது ஈண்டுச் செம்மணியான மாணிக்கமாம் என்றும் கூறியுள்ளார். புறச் சான்றுகளைத் தேடிப் படைத்துச் செங்குட்டுவன் பெயர்க்கு ஆக்கி நிறத்திற்கு நிறுவுதலினும் அகச் சான்றுகள் நிரம்பிக் கிடக்கும் நேர்மை அடையைப் புறக்கணிக்க இயலாது என்பதறிக. மணித்தக்காளியே பெயர்! மணத்தக்காளி என்பது வழுவழக்கு. மணி – சிறியது. மணிக்குடல், மணிக்கொச்சம் அறிக.

மணிக்குட்டுவன் அல்லது மணக்குட்டுவனே என்பதைத் தக்க சான்று இன்றிக் கொள்ளுதற்கு இயலாது. அதனையே கொள்ளுவதற் கியலாத போது, அவன் நிறத்தைக் கோடல் என்பது சிறிதும் இயலாததாம்.

இனி, *'மணி'* என்பது செம்மணி என்று மட்டும் குறிக்கும் என்பதன்று. அது செம்மணியையும் குறிக்கும். கருமணியையும் நீலமணியையும் பச்சை மணியையும் பிற மணிகளையும் குறிக்கும்.

'மணிவண்ணன்' என்பது திருமாலைக் குறிக்கும் பெயர்களுள் ஒன்று. *'மணி'* ஆண்டுச் செம்மணியாமோ? அது கருமணியாம்! *'கருமணியைக் கண்டு கொண்டேன்' 'கருமணியைக் கோமளத்தை'* என்பது ஆழ்வார் உரைமணிகள். *'கருமணியிற் பாவாய்'* என்பது வள்ளுவர் வளமணி. ஆகலின் *'மணி'* செம்மணி என்றே கோடல் சால்பன்று; இடத்தையும் பொருளையும் கருதி ஏற்ற பொருள் தருவதாம் அது. அவ்வாறாகக் குட்டுவனின் உடன் பிறந்தாராய அடிகளாரோ உழுவலன்பராய சாத்தனாரோ தன் மைந்தன் குட்டுவன் சேரற்கு நல்லாசிரியராகத் தேர்ந்து கொண்ட ஐந்தாம் பத்துப் பாடிய பரணரோ செங்குட்டுவன் நிறத்தை அடைமொழியால் கூட– உவமையால் கூட– காட்டினர் அல்லர். செங்கோற்றன்மையைச் செம்மாந்து பல்கால் பாராட்டியுள்ளனர். ஆதலால் செங்குட்டுவன் நிறம் செம்மை கருமை இவற்றுள் யாதாயினும் ஆகுக! அஃதவற்குப் பெருமை தரும் ஒன்றன்று.

அவன் ***செங்கோன்மையே உண்மைச் சான்றுடையதும் பெருமை மிக்கதும் ஆம்*** என்க.

நிற அடை என்றால் தான். அவன் பிள்ளைமைப் பருவத்தே இடம் பெற்றிருக்கக் கூடும். தன்மை அடை எனின், அரசேற்று நாடெல்லாம் செங்கோற்றன்மை பெருகப் பரவிய பின்னரே ஏற்பட்டிருக்கக் கூடும் என்று எண்ணிப்பார்க்க வேண்டுவதும் முறைமை. அதற்குத் தக்க குறிப்பொன்றும் உள்ளது.

பதிற்றுப்பத்தில் உள்ள ஐந்தாம் பத்து பரணரால் பாடப்பெற்றது. செங்குட்டுவன் ஐந்து இடங்களில் 42, 43, 46, 47, 49 குட்டுவன் என்றே குறிக்கப் பெற்றுள்ளான். செங்குட்டுவன் முற்பகுதி வரலாற்றைக் கூறுவது அது என்பதும், சிலப்பதிகாரம் அவன் பிற்பகுதி வரலாற்றைக் கூறுவது என்பதும், இவ்விரண்டையும் தொகுத்துச் சுட்டுவது பதிற்றுப்பத்து ஐந்தாம் பதிகம் சிலப்பதிகாரம் அவன் பிற்பகுதி வரலாற்றைக் கூறுவது என்பதும், *'கிழவர் இளங்கோ'* என்னும் கட்டுரைக் கண் குறிக்கப் பெற்ற செய்தி இவண் நோக்கத் தக்கதாம்.

குட்டுவன் என்னும் குடிப்பெயர் தாங்கியவன் தன் செங்கோற் சீர்மையால் செங்குட்டுவன் ஆகிப் புலவர் பாடும் புகழாளனாகத் திகழ்ந்தான் என்பது உறுதியாம். காந்தி என்று அழைக்கப் பெற்ற பெரியார், பின்னை நாளில் *'மகாத்மா காந்தி'* என்று போற்றப் பெற்றமை கண்கண்ட சான்று அன்றோ!

❖❖❖

4. மங்கல வாழ்த்துப் பாடலின் மாண்பு

முடிகெழுவேந்தர் மூவருக்குமுரிய முத்தமிழ்க் காவியத்தை முறை வழுவாமல் இயற்றிய பெருமை இளங்கோ வடிகட்கு உண்டு என்பது நாடறிந்த உண்மை . மூவேந்தரையும் ஒப்ப மதித்துப் பாடிய உயர்வே அன்றிச் சமயக் கோட்பாட்டிலும் நடுவுநிலை நின்று அவ்வவர்க்கு அவ்வவர் சமயத்தராய்த் தோன்றித் தமக்கென எல்லோருக்கும் ஒப்பும் பொதுச் சமயத்தினைக் கொண்ட பெருமையும் அடிகட்கு உண்டு. இது நூலில் பரந்துபட்டுக் காணக்கிடப்பினும் எடுத்த எடுப்பிலேயே-மங்கல வாழ்த்துப் பாடலிலேயே நிலைநாட்டி விடுகின்றார் அடிகள்.

மங்கல வாழ்த்துப் பாடத் தொடங்கிய அடிகள் இருவகை மங்கல வாழ்த்துகளை நம் முன்னர் வைக்கின்றார். முன்னது தங்கூற்றாகக் கூறும் மங்கல வாழ்த்து; அஃது இயற்கைப் பொருள்களைக் கொண்டு, இறை உண்மை நிலை நிறுத்தும் தொன்மைத் தமிழ்ச் சமயத்தின் உயர் கோட்பாட்டை விளக்குவது. பின்னது கொடியன்னார் கூற்றாகக் கூறும் மங்கல வாழ்த்து. அது, கோவல கண்ணகியரை மங்கல அமளியிலே ஏற்றிவைத்து மலர் தூவி வாழ்த்தும் திருமண வாழ்த்தாய் அந்நாளைத் தமிழக நிலைமையை நிறுவுவது. இவ்விரண்டு வாழ்த்துகளையும் உடைமையால் முதற்பகுதி **மங்கல வாழ்த்துப்பாடல்** என்னும் பெயர் பெற்றதாகும்.

மங்கல வாழ்த்துப்பாடும் அடிகள் திங்கள், ஞாயிறு, மழை, பூம்புகார் ஆகிய நான்கினையும் முறையே வாழ்த்துகின்றார். இம்முறை வைப்பிற்குத் தக்க காரணம் ஏதேனும் இருத்தல் இன்றியமையாததாம். ஞாயிற்று **வணக்கமே** மக்கள் வழிபாட்டில் முதன்மை பெற்று நிற்கின்றது. ஞாயிற்றுக்கிழமையே முதற்கிழமை என உலகம் ஏற்றுக் கொண்டுள்ளது. அறிவியல் உலகமும், ஞாயிற்றினின்று பிரிந்து வந்த கூறுகளே திங்கள் முதலாய அண்டங்கள் என்று ஆய்ந்துரைக்கின்றது. பண்டைப்புலவர்கள் பலரும் ஞாயிற்றுக்கு முதன்மை தந்ததுடன், ஞாயிற்று வணக்கம் உண்மையையும் கூறியுள்ளனர். எனினும்

ஞாயிற்றை முன்னதாகக் கூறாது அடிகள் **தீங்களை முதற்கண் வைத்துப் போற்றியதன் உட்கிடை** என்ன என்பதை நுணுகிப் பார்த்தல் வேண்டும்.

அடிகள் உள்ளத்தே ***கண்ணகியார்*** நீங்கா இடம் பெற்றுவிட்டார். மனித நிலையோடு பிறந்து தெய்வநிலை எய்தும் அளவுக்கு இடம் பெற்றுவிட்டார். அத்துணைப் பெருமையினைக் கோவலனோ, பிறரோ எய்தி விட முடியவில்லை. அக்காரணத்தாலேதான் கண்ணகியார் காற் சிலம்பினையே, நூற்பெயராகக் கொண்டு காவியம் இயற்றினார். பதிகம் இயற்றியவரும் சூழ்வினைச் சிலம்பு காரணமாக, நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள் என்று நூல் யாக்கப் புகுந்தார் அடிகள் என்றே கூறினார். இவ்வாறு சிலம்பினை முதலாகக் கொண்டு அடிகளார் எழுதிய ஒன்றே கண்ணகியார் சிறப்புக்குத் தக்க சான்றாக இருத்தல் உண்மையாகவும் வெளிப்படையாகவே கண்ணகியாருக்கு மங்கல வாழ்த்துக் காதையிலே முதன்மை தந்து விடுகின்றார் அடிகள்.

கோவல கண்ணகியரை அடிகள் அறிமுகப்படுத்தி வைக்கும் போது ***கண்ணகியாரைத் தான் நம்முன் கொண்டு நிறுத்துகின்றார்.***

"மாகவான் நிகர்வண்கை மாநாய்கன் குலக்கொம்பர்
ஈகைவான் கொடியன்னாள் ஈராறாண்டு அகவையாள்;
*..... பெயர் மன்னுங் **கண்ணகி என்பாள்"***

என்று பாடுகின்றார். இதன் பின்னரே கோவலனைக் கொண்டு வந்து நிறுத்தி,

"வருநிதி பிறர்க்கார்த்து மாசாத்து வானென்பான்
இருநிதிக்கிழவன் மகன் ஈரெட்டாண்டு அகவையான்
..... கோவலன் என்பான்"

என்று பாடுகிறார்.

பெண்ணை முற்படக் கூறவேண்டும் என்றோ , ஆணை முற்படக் கூறவேண்டும் என்றோ வரன் முறை ஒன்றும் இல்லை. இருபாலரும் ஒப்ப மதித்து வாழ்ந்த பழந்தமிழ்ப் பண்பாடு இவ்வேற்றுமைக்கு இடம் அளிக்காது எனினும், அடிகள் கண்ணகியாரை முற்படக் கூறியது அவர்

உள்ளகத்தே கண்ணகியார் தெய்வக்கோலம் காட்டியமையாலே தான். "கோவலன் கள்வனல்லன்; என் காற்சிலம்பினைக் கவரும் பொருட்டால் கொன்ற காவலனே கள்வன்" என்று நிலை நாட்டிய தீதுதீர் சிறப்பால் கண்ணகியாரை உள்ளுற எண்ணினார். இதனை எண்ணித் திளைத்தவருள் முதல்வராக அறியப்படுகின்றார் சிலப்பதிகார அரும்பத உரையாசிரியர். அவர் ***"இவளை முற்கூறிற்று; கதைக்கு நாயகியாகலின்"*** என்றார். இச்சொற்றொடரின் ஆழம் எண்ணி எண்ணி இன்புறற்பாலதாம். கண்ணகியாரை முற்படக்கூறிய காரணம் தெளிவாயிற்று. இனி திங்களை முற்கூறியது ஏன் எனக் காண்போம்.

கோவல கண்ணகியர் "மயன் விதித்தன்ன மணிக்கால் அமளிமிசை" அமர்ந்திருந்தனர். இதனை உவமைமுகத்தான் அடிகள் ***"கதிர் ஒருங்கு இருந்த காட்சி போல"*** இருந்தனர் என்றார். ***ஞாயிறும் திங்களும்*** ஒன்றுபட்டு இருந்தது போன்று கோவல கண்ணகியர் இருந்தனர் என்றாராம். இது கொண்டு ஆடவர் பெண்டிரைக் கதிருடன் ஒப்பிட்டுக் கூறும் வழக்குண்மையினை அறியலாம்.

"அஞ்சுடர் நீள்வாள் முகத்தாயிழையும் மாறிலா
வெஞ்சுடர் நீள்வேலானும் போதரக்கண் – டஞ்சி
ஒருசுடரு மின்றி உலகுபா ழாக
இருசுடரும் போந்ததென் றார்"

என்னும் ***இத் திணைமாலைப்பாட்டு.*** (71)

தலைவனும் தலைவியும் காட்டுவழி செல்வதைக் கண்டவர்கள் அவர்களைத் தேடிக் கொண்டு வரும் செவிலித் தாய்க்கு உரைப்பதாக அமைந்ததாம். "உலகு பாழாகுமாறு இருசுடரும் போந்தது போல்வது தலைவன் தலைவியர் ஆகிய இருவர் உடன்போக்கும்" என்றார்கள். இதில் தலைவன் தலைவியர் சுடர்கட்கு ஒப்பிடப்பட்டுள்ளதை அறியலாம்.

உதயணன் வாசவதத்தையுடன் கூடி நின்ற நிலைமையை வருணிக்கும் ***கொங்குவேளிர்.***

"மதியமும் ஞாயிறும் கதிதிரிந்தோடிக்
*கடனிற வானில் **உடனின்றாங்கு**"*

என்றும், தலைவனும் தலைவியும் தலைப்பட்ட நிலைமையை **இறையனார் களவியல்** உரைகாரர் **"வெங்கதிர்க்கனலியும் தண்கதிர் மதியமும்** தம்கதி வழுவித் தலைப்பெய்தாற் போன்று" என்றும் கூறினர். இவற்றால் தலைவன் தலைவியரைச் சுடரொடு ஒப்பிட்டுக் கூறுவது பரவலான ஒரு வழக்கம் என அறியலாம். அவ்வழக்கைக் கொண்டே அடிகள், கண்ணகி கோவலர் திருமணம் கூறும் மங்கல வாழ்த்திலே இரு கதிர்களையும் குறிப்பிட்டு வாழ்த்தினார். இரு சுடர்கட்கும் இணையானவர்கள் தலைவி தலைவர் ஆதலால் என்க.

இங்குக் காட்டிய சான்றுகள் அனைத்தும், தலைவன் தலைவியரை இரு சுடர்க்கும் இணையாகக் காட்டுவதைத் தெளிவாக்குகின்றனவே அன்றி தலைவன் இச்சுடர், தலைவி இச்சுடர் என்று காணுமாறு இல்லை. ஆயின் தலைவன் எச்சுடர்க்கு நிகராவான்? தலைவி எச்சுடர்க்கு நிகராவாள்?

உலகைக் காத்து வருவன இரண்டாம். அவை தண்மையும், வெம்மையும் ஆம். தண்மைக் கூறே இல்லாப் பொருளோ, வெம்மைக்கூறே இல்லாப் பொருளோ உய்யா; பயன்படா; அதுபோல் உயிர் தாங்கும் மனித வாழ்வும் வெம்மையும் தண்மையும் இன்றிப் பயன்படாது. மாந்தர் உடல் வெப்ப தட்ப நிலைச்சமன்பாட்டில் மிகினும், குறையினும் ஊறுபட்டு அல்லல் உறுத்துவதை எவரும் அறிவர். **ஆதலாலே தான் உடலைத் தக்கவாறு பேணி, வெப்ப தட்பக்கூறுகளை ஒரு நிலையில் வைத்தல் தேவை. வெப்ப தட்பச் சமனிலை அமையா உடல் உடலன்று. இச்சமனிலை அமையாத் தனிவாழ்வும், கூட்டு வாழ்வும் வாழ்வு ஆகா.**

பசுங்கதிர் மதியமொடு சுடர் கண்ணாகக் கொண்டவன் தீதற விளங்கும் ***திகிரியோன்*** என்னும் ***பெருந்தேவனார்*** வாக்கும், "சுட்டும் சுடர் விழிதான், கண்ணம்மா! ***சூரியசந்திரரோ?*** " என்னும் ***பாரதியார்*** வாக்கும், ஞாயிறும் திங்களும் தெய்வத் திருக்கண்களாகக் குறிப்பிடுவதைக் கண்டறிக. "தண்மையொடு வெம்மைதான் ஆயினான்" என்னும் திருநாவுக்கரசர் திருவீழிமிழலைத் தேவாரத் திருமொழி இதனை விளக்கி நிற்கின்றது அன்றோ! வெம்மையும் தண்மையும் கலந்து நிற்கும்

இறைவனை ***"அம்மையே அப்பா"*** என்றும், "அம்மையுமாய் அப்பனுமாய்" என்றும் கரைந்துருகிக் கண்ணீர் சிந்தி "அன்பர்கள்" அழைப்பதை அறியார் யார்?

வெம்மையாய்-தண்மையாய்-இரண்டுமாய் நிற்கும் இறைவனை எய்த, மாந்தருக்கும் அத்தன்மைகள் வேண்டற்பாலவாம்.

மக்களுள் வெம்மைத் தன்மையோடு விளங்குபவர் யாவர்? தண்மைத் தன்மையொடு இலங்குவர் யாவர்? முறையே ஆடவர் பெண்டிர் அல்லரோ? ஊக்கமிக்க ஆண்மைக்கு வெம்மையும், உள்ளன்பு மிக்க பெண்மைக்குத் தண்மையும் இயல்பாய் அமைகின்றன அல்லவா! இதற்கு ஏற்ப, வெம்மையாம் ஆண்மை தண்மையாம் பெண்மையை விரும்பி நிற்பதன்றோ திருமணம்! வெம்மையும் தண்மையும் ஒருங்குகூடி, ஒப்பநின்று ஒல்லும் வகையால் கடனாற்றி இல்லறம் இனிது காத்து இறுதியில் பெண்மைப் பிழம்பாக அமைவது அன்றோ கடப்பாடு! இதற்கு வழியென்ன? திருமணத்தின் பெயரால் ஆடவர் பெண்டிரை ஒன்றித்து வைத்தல் வேண்டும். இதுவே மங்கலம். இதற்குரிய வாழ்த்தே மங்கல வாழ்த்து!

மங்கல வாழ்த்தில் இயற்கை வடிவாய் இறைவனை முன்னிறுத்தி சமயப் பொதுமையைக் காட்டும் அடிகள், தலைவன் தலைவியர் தன்மைக்கு இணையாய கதிர்களை எடுத்துக் கொண்டார். இஃது இயற்கை வாழ்த்தாக மணவாழ்த்தாக அமைந்துவிடுகின்றது. "மணம்" இயற்கை தானே!

இது நிற்க, இருசுடர்க்கு இணையாய்க் கோவல கண்ணகியரை மனையறம் படுத்த காதையில் பொதுவாகக் கூறும் அடிகள் வஞ்சின மாலையிலும், ஊர்சூழ் வரியிலும் சிறப்பாகக் குறிப்பிட்டு உரைப்பவை நோக்குதற்குரியவையாம்.

கோவலன் கொலை நிகழ்ச்சியைக் கேட்டறிந்த கண்ணகியார் பொங்கி எழுந்தார்; விழுந்தார்; அவ்வீழ்ச்சி, நிலவினைப் பொழியும் திங்கள் கரியமுகிலோடும் பெரிய நிலத்தின்கண் வீழ்ந்தது போலாயிற்று. (18.30,1) இதன் பின் மதுரை மக்கள் சிலர், கொலையுண்ட கோவலனைக் கண்ணகியாருக்குக் காட்டுகின்றனர். கண்ணகியார் காணுகின்றார்.

ஆனால் கவலையே உருவாய கண்ணகியாரைக் கதிரோன் காணமாட்டானாய்த் தன் கதிர்களைச் சுருக்கிக் கொண்டு உலகுக்கு இருள் ஊட்டி மலையிடை மறைகின்றான்.(19-30-2)

கண்ணகியார் மண்ணிடை வீழ்ந்து புரள்வது திங்கள் வீழ்ந்து புரள்வது போன்றது என்று வஞ்சின மாலையிலே காட்டும் அடிகள், ஊர்சூழ் வரியிலே கோவலன் மறைவைக் கதிர்மறைவுடன் இணைத்துக் குறிப்பிடுகிறார். இவை, அவர் கண்ணகியாரைத் திங்களுக்கும், கோவலனை ஞாயிற்றுக்கும் இணையாகக் கொண்டமையை நிறுவத்தக்க அகச்சான்றுகள் ஆதற்குத் தக்கவையாகும்.

கண்ணகியாரை முற்பட அறிமுகப்படுத்துகின்றார் அன்றோ அடிகள்! அதற்கேற்பத் தண்சுடராம் திங்களை முற்பட வாழ்த்தினார். கோவலனைப் பிற்பட அறிமுகப்படுத்தி வைப்பது போன்று வெங்கதிராம் ஞாயிற்றைப் பிற்படக் கூறினார். இவை மேற்போக்கில் திங்கள் ஞாயிறெனத் தோன்றினாலும் ஊன்றி உணர்வார்க்குப் புலமை நலங்கனிந்த வாழ்த்துக்களாக அமைந்துள்ளன.

திங்களையும் ஞாயிற்றையும் மங்கல வாழ்த்துப் பாடலில் போற்றிய அடிகள், அவற்றை அடுத்து மழையையும் இறுதியில் புகாரையும் போற்றுகின்றார். திங்களையும் ஞாயிற்றையும் அடுத்து மழையைப் போற்றியதற்கும், அதன் பின் புகாரைப் போற்றியதற்கும் செவ்விய காரணங்கள் உளவாதல் வேண்டும். ஏனெனில் இயைபின்றி எடுத்துக் கூறும் இயல்பு உடையரல்லர் அடிகள்.

வெங்கதிர்க் கனலியின் வெப்பத்தால் 'நீர்' ஆவித் தன்மை அடைகின்றது. மண்ணிடை நீராக இருந்த அது தண்காற்றுப்படுதலால் நுண்ணிய நீர்த்துளியாகி மீண்டும் மண்ணிடை மழையாய் வீழ்கின்றது. வெம்மைத் தொடக்கமும் தண்மை முடிவும் உடையது மழை என்பது கண்கூடு. இஃது இலக்கிய உலகமே அன்றி அறிவியல் உலகமும் அறுதியிட்டுரைக்கும் உண்மையாகும்.

'மழைக்கருவுயிர்க்கும் அழல்' (10:143) என்று சுருக்கியுரைத்துப் பெருக்கமாகச் சிந்திக்கத் தூண்டுவார் அடிகள். கதிரோனால் எழுந்து படர்ந்த மேகம் 'மலைவெம்மையுள்ளது. அவ்வெம்மையை நீரால்

தணிவிப்போம்' என்று கருதிச் செல்வது போன்றுளது என்று நயத்துடன் நவில்வார் **கம்பர்** (பால:28)

தண்மை, வெம்மையுடைய திங்கள், ஞாயிற்றைத் தனித்தனியே வாழ்த்திய அடிகள். அவ்விரண்டு தன்மைகளும் இணைந்ததாம் மழையினை அடுத்து வாழ்த்துதல் தகவுடையதாம்.

அடிகளின் மழை வாழ்த்தினையும் புகார் வாழ்த்தினையும் நினையுந்தொறும் குறுந்தொகைப்பாடல் ஒன்று (40) நெஞ்சிடை முகிழ்த்து எழுதல் உண்டு. முகிழ்த்தெழக் காரணம் என்ன எனின், இவற்றிடை அமைந்துள மாறா இணைப்புகளேயாம். அவ்வுயர்பாட்டு:

"யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக்கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே"

என்பது. இவ்வொள்ளிய பாடல். அன்புக்கலப்பினை, நீர் நிலக்கலப்புடன் இணைத்து விளக்கி நிற்றலை இனிதின் அறியலாம்.

தலைவன் தலைவியர் இருவரும் தாம் இன்னார் என அறிந்து கொண்டார் அல்லர். ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளாமலே அன்பு மிகப் பெற்ற அவர்கள், பெற்றோர்களை அறிந்திருக்க வாய்ப்பு இல்லை. எனினும் இடைவெளி சிறிதுமின்றி அன்புச் செறிவு அமைந்துவிட்டது. எப்படி? செம்புலப்பெயல் நீர் போல ஒன்றுபட்டுவிட்டன உள்ளாங்கள். வானிடைப் பரவிக்கிடந்த பெயல், செந்நிலத்திடை வீழ்ந்து அச்செந்நிலத்தின் நிறத்தைப் பெற்றுத் தனக்குரியதாம் நீர்மையுடன் செந்நீர் ஆகின்றது. ளங்கோ இருப்பது பெயல்; ளங்கோ இருப்பது நிலம்; எனினும் இயற்கையாய் ஒன்றி இணைவு பெற்றன–பிரிக்க முடியா இயைபு பெற்றன! அக்கலப்பு அன்புடை நெஞ்சக் கலப்புக்கு நிகராகின்றது. இத்தகைய மழையை, அன்புள்ளாங்கள் ஒன்றுதலாம் திருமண வாழ்த்துப் பகுதியிலே போற்றுவது மிகப் பொருந்துவதாகின்றது. இனிச் செம்புலம் பண்படுத்தப்பட்ட நிலமாம்! உள்வாங்கி வளமாக்கல் உண்மையால்!

இவ்வாழ்த்தில் மண்ணினை முற்கூறி மழையினைப் பிற்கூறக் கூடாதோ எனின், படைப்பு முறைமையும் உண்மைக் கூறும் உற்று நோக்கிப் பார்க்கும் போது அடிகளின் முறைவைப்பு, தனிச்சிறப்பினதாதல் தெளிவாகும்.

ஐம்பூதங்களின்-(விண், வளி, தீ, நீர், நிலம்) தோற்றமுறைப்படி நிலத்திற்கு முன்னையது நீராம். இதனை "நெருப்பாகி நீர் பயந்தனை, நீராகி நிலம்படைத்தனை" (பெருந்தொகை 125) என்பதும், "நிலத்திற்கு முன்னாகிய நீர்" என்பதும் (புறம் 9 உரை)."உருவறி வாரா ஊழியும், உந்து வளி ஊழியும், செந் தீ ஊழியும், தண்பெயல் ஊழியும், இருநிலத்து ஊழியும்" என்பதும் (பரிபாடல் 2) நிலத்திற்கு முன்னையது நீர் என்பதைத் தெளிவுபடுத்தும். இப்படைப்பு முறையன்றி, இயல்முறையும் நீரை முன்னிறுத்திக் காட்டுதற்கே இடம் தருகின்றது.

"நீர் நெகிழ்தலைக் குணமாகவுடையது; நிலம் செறிதலைக் குணமாகவுடையது" (சிலம்பு 3-26 அடியார்) இவ்விரு தன்மைகளும் வாழ்வில் புகுவார்க்கு இன்றியமையாத் தன்மைகளாம். புதுவாழ்வில் புகுவார்க்கு வற்புறுத்திக் கூறத்தக்கவையும் ஆம். உள்ள நெகிழ்ச்சி அன்பு; உள்ளத்திண்மையாம் செறிவு கற்பு. அன்பும் கற்பும் அமையா வாழ்வு வாழ்வாகாது. வாழ்வில் பொதுவாக ஒன்றியிருக்க வேண்டிய நெகிழ்வையும், செறிவையும், எப்பொழுது உரைப்பது? வாழ்க்கைத் துவக்கத்தில் தானே!

"அன்பு-அருட்கு முதலாகி மனத்தில் நிகழும் நேயம்" என்றார் ***பேராசிரியர்.*** (தொல்-மெய்-12) "தான் வேண்டப்பட்ட பொருளின் கண் தோன்றும் உள்ள நெகிழ்ச்சி" என்றார் ***களவியல் உரைகாரர்.*** (இறை-1) "அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு" என்றார் ***வள்ளுவர்.*** களவியலோ 'அன்பின் ஐந்திணை' என்றே முதல் ஒலியை எழுப்புகின்றது.

"உள்ள நெகிழ்வே அன்றிச் செறிவும் வேண்டும்; ஒன்றுக்கு ஒன்று குறையா அளவில் வேண்டும்" என்று கருதும் அறநூல் வள்ளல், **பெண் கற்பென்னும் திண்மை** உண்டாகப் பெறவேண்டும் என்றும், தற்காத்தலும், தகை சான்ற சொற்காத்தலும் வேண்டும் என்றும் நிறை காக்கும் காப்புத் தேவை என்றும் பரக்கக் கூறுகின்றார்.

விட்டுக் கொடுத்து விளங்கச் செய்யும் நெகிழ்ச்சி எவ்வளவு தேவையோ, அவ்வளவு தேவை கட்டுக்குலையா உளத்துடன் இருந்து கவின் பெறுதல் என்பதாம். வாழ்வு நடக்க உள்ள நெகிழ்வும், வாழ்வு சிறக்க உள்ளச் செறிவும் வேண்டத்தக்கனவாகலின் நெகிழ்வுடைய மழையை முற்கூறி வாழ்த்தி, செறிவுடைய நிலத்தினைப் பிற்கூறி வாழ்த்தினார் என்று ஏற்படுகின்றது.

அன்றியும், ஐம்பெரும் பூதங்களிலே கட்புலனாம் தன்மையன மூன்றாம் அவை; தீ, நீர், நிலம். இவற்றுள் தீ மூன்று தன்மைகளையும், நீர் நான்கு தன்மைகளையும், நிலம் ஐந்து தன்மைகளையும் பெற்றிலங்குவது எவரும் அறிந்ததே. விண்ணுக்கு ஒலியும், காற்றுக்கு ஒலியுடன் ஊறும், தீயிற்கு ஒலி, ஊறுகளுடன் ஒளியும், நீருக்கு ஒலி, ஊறு, ஒளிகளுடன் சுவையும், நிலத்திற்கு ஒலி, ஊறு, ஒளி, சுவைகளுடன் மணமும் உண்டு. இத்தன்மைகள் இவற்றுக்கு உளவாதலை விளக்கமாக இரண்டாம், மூன்றாம் ***பரிபாடல்கள்*** கூறுவது காண்க.

முப்பண்புகளையுடைய ஒளியை வாழ்த்தி, நாற்பண்புகளையுடைய ***மாமழையைப்*** போற்றி, ஐந்து பண்புகளையுடைய ***மாநிலத்தை ஏத்தி*** வரன் முறையாக்கிக் கொண்டுள்ளார் அடிகள் என்றாகின்றது.

திருமணத்திற்கும் ஐம்பெரும் பூதப்பண்புகளுக்கும் தொடர்பு என்ன எனில் காண்போம். ஐம்பூதங்களின் மயக்கமே உடல். மாந்தர் உடலின் கால்பகுதியில் நிலத்தன்மையும், குடல் பகுதியில் நீர்த்தன்மையும், மார்புப் பகுதியில் நெருப்புத்தன்மையும், கழுத்துப் பகுதியில் வளித்தன்மையும், தலைப்பகுதியில் விண் தன்மையும் சிறப்பு நிலை பெற்றுத் திகழ்ந்து, பூதங்களின் மயக்கமே உடல் என்பதைத் தெளியக் காட்டும் ஐம்பூத மயக்கமாம் உடலில் ஐம்பூத இயல்பும் (சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்) செறிந்திருத்தல் தானே இயல்பு. இவ்வியல்பினை வளர்க்குமாறும், சிறக்கச் செய்யுமாறும் அன்றோ வாழ்க்கை அமைப்பு இருத்தல் வேண்டும்! இவ்வியல்புகளை வளர்க்குமாறு வாழ்க்கை உளதா? மணவாழ்க்கை உளதா?

"கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலனும் ஒண்டொடி, கண்ணே உள" என்று வள்ளுவர் பேசிய பின் *'சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம்'* ஐந்தென அவர் வகுத்துக் காட்டியபின் பெண்மையினிடத்தே ஐம்புலவின்பமும் அமைந்துள்ளது எனல் தேவையற்ற ஒன்று.

மாந்தர் எவருக்கும் உரியதாம் சுவை நிலைக்களத்தைச் சுட்டிக் காட்டினார் அறநூலார். அஃது அவர்க்கு இயல்பு. ஆனால் அடிகளோ தம் காவியச் சிறப்புக்கேற்ப மண வாழ்வின் செறிநிலை இன்பத்தை உரைக்கின்றார் கோவலன் வாயிலாகக் கண்ணகியைப் பாராட்டு முகத்தான்!

மனையறம் புகுந்து மங்கல அமளியிலே இருக்கும் கண்ணகியை

"மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே"

என்று பாராட்டுகின்றான். இப்புகழ் உரையிலே ***ஐம்புலச் சுவையும் உளவாதலை*** "கட்கு இனிமையான் மாசறவோடிய பொன்னை ஒப்பாய், ஊற்றின் இன்பத்தான் முத்தை ஒப்பாய், உயிர்ப்பின் இனிமையால் குற்றமற்ற விரையை ஒப்பாய், சுவையின் இனிமையால் கரும்பை ஒப்பாய், இனிய மொழியை உடைமையால் தேனை ஒப்பாய் என்றும், இவற்றைச் சொல்லியது ஒளியும், ஊறும், நாற்றமும், சுவையும், ஓசையுமாகலின் *"கண்டு கேட்டுண்டுயிர்த் துற்றறியுமைம்புலனும் ஒண்டொடி கண்ணே யுள"* என நலம் பாராட்டப்பட்டன என்றும், ***அடியார்க்கு நல்லார்*** பொருளும் விளக்கமும், எழுதிச் செல்வது அவரது புலமையை விளக்கா நிற்கும்.

மணம் மலருக்கு இயற்கை! மலர் தோன்றும் இடம் மண். மண்ணின் தனிச் சிறப்புத் தன்மை மணம். மணம் செறிந்து கூடி நிற்குமிடம் மலர். ஆதலால் மலருக்கு மணம் இயல்பாகிவிட்டது. மணமில்லா மலரை மலரென மதிப்பதும் வழக்கில் இல்லை .

இம்மலர்களைப் போலவே மக்களையும் மலர் எனக் கொண்டது தண்டமிழ் உலகம். *'அவன் அரும்பினான்'* என்று பேசும் வழக்கு ஆண் ஒரு மலர் என்பதை மெய்ம்மைப்படுத்தும். *'அவள் பூப்படைந்தாள்'* என்னும் நடைமுறை பெண் ஒரு மலர் என்பதை உறுதிப்படுத்தும். அரும்புதலும், பூத்தலும் மலருக்குத் தானே உண்டு! அரும்பிய ஒன்று மணம் பரப்பாதிருப்பின் பயன் என்ன? மணத்தின் பிறப்பிடமாம் மண்ணிடைத் தோன்றியதன் பயன் தான் என்ன? மலரில் மணம் இருத்தல் இயற்கை போலவே மாந்தர் மணம் செய்து இன்புற்று வாழ்தலும் இயற்கை! மாற்று வழிகள் இயற்கையல்லா வழிகள் செயற்கை வழிகள். மணத்திற்கு உறையுளாம் மண்ணை வாழ்த்துவதும், மலரையும் மணத்தையும் பெருக்கும் மழையை (ஐங்குறு. 328) வாழ்த்துவதும் இயற்கை வாழ்த்தாம்.

மழை என்னும் சொல்லுக்கு *'இன்பம்'* என்னும் பொருள் உளதாதலைப் ***பெருந் தொகை*** மழைநாள் நமக்கு எனக் காட்டும்

(2200-2) இன்பப் பொருளாம் மழையை வாழ்த்துதல் இன்ப வாழ்த்தாக, மங்கல வாழ்த்தாக அமைதல் நோக்கத்தக்கது.

திங்கள், ஞாயிறு, மழை எனப் பொதுமை வாழ்த்துக் கூறிய அடிகள் *"மாநிலம் போற்றுதும்"*என்றோ *"நானிலம் போற்றுதும்"*என்றோ கூறாது *"பூம்புகார் போற்றுதும்"* எனச் சிறப்பு முறைமையால் கூறினாரே, ஏன் எனில் அதன் காரணம் வெளிப்படையாகவே அறியக் கிடக்கின்றது.

புகார் *"பொதுவறு சிறப்பிற் புகார்"* என்று அடிகளாலேயே குறிக்கப்படுவது ஆகலானும், காவியத் தலைவன் தலைவியர் தோன்றிய இடம் புகார் ஆகலானும், தாம் எடுத்துக் கொண்டு பாடப் புகுந்த பகுதி புகார்க் காண்டம் ஆகலானும், மூவேந்தரையும் ஒப்பமதிக்கும் உளநலம் அடிகட்கு உண்டு ஆகலானும், வாழ்த்துக்கும் வரலாற்றுக்கும் தொடர்பு காட்ட வேண்டிய இடம் அஃது ஆகலானும் *"பூம்புகார் போற்றுதும்"*என்று போற்றினார் என்க.

இங்குக் காட்டிய அனைத்தும் திங்கள், ஞாயிறு, மழை, புகார் என வரன் முறை கொண்டமைக்காகக் கண்ட குறிப்புக்களாம். இனி இவ்வாழ்த்திலே அடங்கியுள்ள அறநெறிக் கூறுகள் சிலவற்றைக் காண்போம்.

அருள் செய்தலும், அறங்காத்தலும், கொடைபுரிதலும், குடி தழுவலும், செங்கோல் வேந்தர்களது கடமைகளாம். இவற்றைக் கடமைகளாகக் கொண்டிருக்குமாற்றைத் தமக்கும் பிறருக்கும் அறிவிக்குமாறே குடையையும் திகிரியையும் கருவிகளாகக் கொண்டனர். கொடையையும் குடியோம்பலையும் குணங்களாகக் கொண்டனர்.

பொறுப்பு மிகக் கொண்டு கடனாற்றுவோர் வாழ்வில் களிப்புக்கு இடம் குறைவே. நேரிடைக் களிப்பும் அவர்கட்கு வாய்ப்பது இல்லை. தம் கடனாற்றலால் பிறர் வாழ்வில் இன்பம் மல்கிற்றேல் அவரின்பம் நோக்கி இவரின்பங் கொள்வர். அதுவே இவர் பெறும் இன்பமாம். அன்றிக் களியாட்டம் ஆடிக் கண்டவாறு பொழுதைக் கழித்துத் திரிவோர் உளரேல் அவர் அறவகையால் கடப்பாடு ஆற்றுதலைத் துறந்தோராதல் வேண்டும். ஆயின் மக்களை உயிரெனக் கருதும் மன்னவன் வாழ்வு வெளித் தோற்றத்திற்குப் பல்வேறு நலங்கள் கனிந்ததாக இலங்கினாலும் உள்நோக்கி அறிவார்க்கு இன்னல் பல பயப்பதே என்பது தெளிவாகும்.

இதனாலே *"பொன்முடியன்று மன்னவன் சூடுவது முண்முடியே"* என்று மொழிந்தோரும் உளர்.

இளங்கோவடிகளார் வடவாரியர் படை கடக்க நிற்கும் அண்ணன் வாயிலாக,

"மன்பதை காக்கும் நன்குடிப்பிறத்தல்
துன்ப மல்லது தொழுதக வில்"

என்று திட்டவட்டமாய் உரைத்து, மழை உரிய காலத்தில் பெய்யாவிட்டாலும், மக்கள் பல்வேறு துயர்கட்கு ஆட்பட்டாலும் உலகம் மன்னனையே பழிக்கும்; ஆகலின் மன்னவர் நன்குடிப்பிறத்தல் துன்பந்தருவதே அன்றி இன்பஞ் செய்வது இல்லை என்று வற்புறுத்துகிறார்.

செங்கோல் மன்னனுக்குத் தன்னுயிர் என்று ஒன்றில்லை. மக்களே அவன் உயிர். அவ்வாறாயின் மக்களாம் உயிர்க்குத் துயர் வருமாயின் அத்துயர் நேரிய மன்னனைக் கூரிய வாள் போல் வாட்டுதல் உறுதி.

மன்னுதல் என்னுஞ் சொல்லுக்கு நிலை பெறுதல் என்பது பொருளாம். உலகில் நிலைபெற்றவனே மன்னவன் ஆவான். அரசு ஏற்றவர் அனைவரும் அரசர் ஆகலாம். ஆனால் உலக ஏட்டில் மன்னினோர் அன்றி மற்றையோர் மன்னவர் ஆகார். இவ்வுலகம் நிலையிலாத் தன்மையுடையது. நிலையிலா உலகில் நிலைப்பதும் எளிதோ? எல்லோருக்கும் கூடுவதோ? சிலர்க்கே கைகூடும்! கூடுதற்கும் வழிவகை வேண்டும்.

நிலையிலா உலகில் நிலைக்க வேண்டுமாயின் புகழ்மிக்க செயல்களைச் செய்தாக வேண்டும். புகழ் ஒன்றே அழியாதது. *"ஒன்றா உலகத்துயர்ந்த புகழல்லால் பொன்றாது நிற்பதொன்றில்"* என்றார் அறநெறி அண்ணல். *"மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர் தம்புகழ் நிறீஇத் தாமாய்ந்தனர்"* என்றார் புறநானூற்றுப் புலவர். புகழால் நிலைக்குமொன்றே புவியாள்வோர் கடனாம்.

புகழ்க் கோயிலுக்குப் புகு வாயில்கள் எத்தனை? ஒன்றா, இரண்டா? பலப்பல. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை நான்காம். அவை ***கொடை, அளி, செங்கோல், குடியோம்பல்*** என்பவை.

"அடுக்கிய மூவுலகும் கேட்குமே கொடுத்தார் எனப்படுஞ்சொல்" என்று கொடைச் சிறப்பை எடுத்துரைக்கின்றது நாலடி. "பொருள் அற்றார் அப்பொருளை முயற்சியால் மீண்டும் பெறக் கூடும்; ஆனால் அருள் அற்றார், அருளை மட்டுமோ அற்றார்? அனைத்தும் அற்றார்" என்கின்றது குறள். *"கொடும்புலி வாழும் காட்டினும் கொடிது கொடுங்கோல் மன்னர் வாழும் நாடு"* என்று கூறிச் செங்கோலின் இன்றியமையாமையை வற்புறுத்துகின்றது பிற்கால நூல். "மன்னவ! வெயில் மறைக்குமாறு பிடிக்கப் பெற்றதோ நின் வெண்குடை? குடிகளைக் காத்தற்காக அன்றோ எடுக்கப்பட்டது" என்று பன்னுகின்றது தொன்மை – நூல். இவ்வனைத்தையும் இறைமாட்சியிலே,

"கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி"

என்று தொகுத்துரைக்கின்றார் பொய்யில் புலவர். கண்ணாகிய உறுப்பு இருந்தும் அதனிடை அருள் வரப்பெறார் கண்ணுடையர் ஆகார். அதுபோல் அரசுப் பொறுப்பு இருந்தும் இந்நான்கு பண்புகளும் இல்லார் அரசர் ஆகார்; உடையரே அரசர்; அரசருள் ஒளியுடைய (புகழுடைய) அரசர். ஆகலின் தகை மாண்ட புகழ்க் கோயிலுக்குச் செல்லும் வகை மாண்ட வாயில்கள் பலவற்றுள்ளும் கொடையளி செங்கோல் குடியோம்பல் என்னும் நான்கும் நற்கலை கவினிய பொற்புறு கோபுர வாயில்கள் எனல் தகும். இனி, இதற்கும் சிலப்பதிகார மங்கல வாழ்த்திற்கும் உரிய தொடர்பென்ன எனில் காண்போம்.

"முடிகெழுவேந்தர் மூவர்க்குமுரிய தொடர்நிலைக் காவியத்தை அடிகள் பாடவேண்டு" மென்று தண்டமிழ்ச் சாத்தன் வேண்டிக் கொண்டதற்கு ஏற்பச் சிலம்பு பாடும் சேரர் வழிவரும் அடிகள் வேந்தருக்கு ஒளியாம் வழிகளைத் தெளிய உரைத்துப் போதுகின்றார். அவர் தம் காவியத்தில் பல இடங்களில் அவ்வாறு உரைக்கினும் தலையாய இடம் மங்கல வாழ்த்தாகவே புலப்படுகின்றது.

"யாம் திங்களைப் போற்றுவோம்–சோழனது வெண்குடை போன்று ***தண்ணளி செய்தலால்;*** யாம் ஞாயிறு போற்றுவோம்–சோழனது திகிரிபோல் (சக்கரம்) மேரு மலையை வலஞ் சுற்றி வருதலால்; யாம் மாமழையைப் போற்றுவோம்– ***சோழன் அருள் போல்*** பொழிந்து வளம்

பெருக்குதலால்; யாம் பூம்புகார் போற்றுவோம்–சோழன் ***குலத்துடன் தோன்றி உயர்ந்து*** விளங்குதலால்; என்பதனை,

"திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்
கொங்கலர்தார்ச் சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ்
வங்க ணுலகளித்த லான்"

"ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
காவிரி நாடன் திகிரிபோல் பொற்கோட்டு
மேரு வலந்திரித லான்"

"மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்
நாமநீர் வேலி உலகிற் கவணளிபோல்
மேனின்று தான்சுரத்த லான்"

"பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்
வீங்குநீர் வேலி உலகிற் கவன்குலத்தோ
டோங்கிப் பரந்தொழுக லான்."

என்று இசைநலம் பொலியப் பாடுகின்றார் அடிகள். இப்பாடல்களிலே திங்களால் குடிக்கு நிழலாம் அளியும், ஞாயிற்றால் செங்கோலாம் ஆளுமையும், மழையால் வளஞ்சுரக்கும் கொடையும், பூம்புகாரால் குடியோம்பலும் குறிக்கப் பெற்றமை ஊன்றி உணர்வார்க்குத் தெளிவாகாமற் போகா.

அரசர்க்கென்று அறநூல் வகுப்பனவற்றையே தாமும் கூறுவான் எடுத்துக் கொண்ட அடிகள் நூலின் தொடக்கப் பகுதியிலேயே இயற்கை வாழ்த்துரைக்கு முகத்தான் இவற்றை இனிதின் ஓதுகின்றார். தொடக்கமும் முடிவும் எவருள்ளத்தையும் எளிதில் ஈர்த்து நிலை பெறுத்தும் பெற்றி கொண்டிலங்குவனவாம். ஆதலின் அரச நெறி முறையறிந்து நூல் தொடங்கும் அடிகள் மாந்தர் நல்வாழ்வுக்குரியனவாம் பொருளறங்களை விரித்துக் கூறும் வரந்தருகாதையுடன் காப்பியத்தை முடிக்கின்றார்.

மங்கல வாழ்த்துப் பகுதியில் கூறும் குறிப்புரைகளை நூலினகத்து விரித்தும் விளக்கியும் செல்வது அடிகட்கு இயல்பாதலை நூலினை மேற்போக்காக நோக்குவோரும் உணர்வர் என்பது ஒருதலை.

திங்களை வெண் கொற்றக்குடையுடன் இணைத்த அடிகள் *"தண்மதி யன்ன தமனிய வெண்குடை"* (28:1-2) என்று வடிவுக்கும், மண்குளிரச் செய்யும் தண்குடை (19:21) என்று பண்புக்கும் ஒப்புமை காட்டியுள்ளார்.

ஞாயிற்றைச் செங்கோல் சிறக்கச் செய்யும் அறத்திகிரியுடன் ஒப்பிட்டுக் காட்டும் அடிகள் *"விரிகதிர் பரப்பி உலக முழு தாண்ட ஒரு தனித்திகிரி உரவோன்"*(2:1-2) என்று வடிவுக்கும் *"பொற்கோட்டுழையதா எப்பாலும், செருமிகு சினவேற் செம்பியன் ஒரு தனியாழி"* என்று தொழிலுக்கும் உவமை காட்டியுள்ளார்.

மழையினைக் கொடையுடன் ஒப்பிடும் அடிகள், சோழன் கொடைச் சிறப்பையும், சேரன் கொடை மாண்பையும் கேட்போர் நயப்பும் வியப்பும் ஒருங்கெய்தக் கூறுவதே அன்றி, *"மன்னவர் பின்னோர்"* என்று குறிக்கப்படும் வணிகருள் உயர்ந்தோங்கிய மாநாய்கன் *"மாகவான் நிகர்வண்கையன்"* என்றும், கோவலனைச் *"செம்பொன் மாரி கொள்கையிற் பொழிந்தோன் "*(15:41) என்றும் கூறுகின்றார்.

குலந்தொடங்கிப் பரந்தொழுகும் நிலச் சிறப்பினைக் கூறும் அடிகள் *"பதியெழுவறியாப் பழங்குடி கெழீஇய பொதுவறு சிறப்பிற் புகார்"*(1:15-6) என்றும் குறிப்பிடுகின்றார்.

இவற்றை நோக்குங்கால் திங்களும், ஞாயிறும், மழையும், மண்ணும் தந்தொழில் திரியாத் தகைமையவாக் கடனாற்றினாலும் கொடையளி செங்கோல் குடியோம்பல் ஆகிய நான்கும் பேணாத அரசும், ஆட்சியும் கேடு பயப்பனவன்றி நன்மை பயவா என்றும், கோன் நிலைதிரியின் கோல் நிலை திரிந்து கோள் நிலையும் திரியும் என்றும், ஆள்வோர் செம்மையால் தான் ஆட்சிக்கு உட்பட்டோருக்கு நலம் விளையும் என்றும் அடிகள் உணர்த்துகின்றார் என்றாதல் வேண்டும். அரசியல் பிழைத்தோரை அறம் கூற்றாக இருந்து மடியச் செய்யும் என்பது அடிகள் நூல் பாடுவான் புகுவித்த முப்பெருங்காரணங்களுள் ஒன்றன்றோ! இத்தகைய அடிகள் நூலின் தொடக்கத்திலேயே *"அறநெறி முதற்றே அரசின் கொற்றம்"* என்று எண்ணுமாறு செய்வித்தல் ஏற்புடையதே என்று அறியலாம். ஆதலின் மங்கல வாழ்த்து, மன்னர் கடைப்பிடிக்க வேண்டிய அறநெறிகளை வாழ்த்து முறையால் கூறும் பகுதி என்பது விளக்கமாகும்.

அடிகள் அறத்தை உயிரெனக் கொண்டவர். அறத்தின் வழியே அரசியல் இயங்க வேண்டும் என்று கருதுபவர்; அவ்வாறு இயங்கினால் மாந்தரும் அறநெறி வழியே செல்வர் என்னும் அசையா உறுதி உடையவர்; அறத்தை நிலைபெறுத்துமாறும், மறத்தைக் கடிந்து ஒதுக்குமாறும் செய்தற்கு இலக்கியமே உயரிய கருவி என்று தெளிந்தவர். இவற்றுக்கு ஏற்ப ***அறவாழ்த்துப்பாடி*** நூலைத் தொடங்குகின்றார்.

"கோள் நிலை தவறாது! அப்படி ஒரோர் வேளை அது தவறுபடினும் கோன் நிலை தவறவே கூடாது, தவறுமாறு நேரின் குற்றமற்ற கோவலன் போல்வோர் கொலைக்களம் குறுகி-மடிவர் என்று எதிர்கால உலகம் உணரவேண்டும்" என்று அறநெறி தவறியது பற்றி விவரிக்கும் காப்பியத்தின் தொடக்கத்தில் அறநெறியை அழகுபெற வைக்கின்றார் அடிகள்; உணர்வார்க்கு இன்பம் பயவாமற் போகாது அடிகளின் மாங்கல வாழ்த்து!

❖❖❖

5. கலைத் திருப்பமும் கதைத் திருப்பமும்

தமிழ் என்பதை முத்தமிழ் ஆக்கிய முதல்வர் இளங்கோவடிகளே! அவர்க்கு முன்னரே நரம்பின் மறை, ஆடுநர்க்கழியும் உலகம், பெரும்பாண் சிறுபாண் பொருநர் கூத்தர் ஆற்றுப்படைகள் மெய்ப்பாட்டியல் நாடகக் காட்சியமைந்த கலி, பரி பாடல்கள் இருப்பினும் முத்தமிழ்க் காப்பியமாக ஆக்கிய பெருமையர் இளங்கோவடிகளே ஆவர். அவரே தமிழ்க்காப்பிய இலக்கணம் தந்த பெருங்காப்பியப் படைப்பாளி. அன்றியும் மண்ணின் மைந்தரையும் மண்ணின் ஆட்சியரையும் கொண்டு மண்ணின் மணம் கிளரச் செய்தவர். அவர் தம் காப்பியத்தை ஓர் உத்தியைத் தேர்ந்து அதனைக் கொண்டே கதையை வளர்த்துச் சென்று நிறைவிக்கிறார்.

அவ்வுத்தி, *"கலைத் திருப்பமே கதைத் திருப்பம்"* என்பதாம்.

திங்கள் ஞாயிறு மழை பூம்புகார் என வாழ்த்தித் தொடங்கும் அவர் மங்கல விழா நிகழ்த்தி, மங்கல வாழ்த்தும் பாடி, மன்னவன் வாழ்த்திலேயே முடிக்கிறார்.

கோவலன் மாசாத்தனுக்கு ஒரே ஒரு மகனாக இருந்தும் கண்ணகி மாநாய்கனுக்கு ஒரே ஒரு மகளாக இருந்தும் தனி மனைப்படுத்தி வாழச் செய்கின்றனர். கலைத்திறம் வல்ல அவன்,

தீராக் காதலில் திருமுகம் நோக்கி,

43 அடிகளில் (38-80) 24 வகையாகப் பாராட்டுகிறான். ஆனால் கண்ணகி ஒரு சொல்தானும் சொன்னாள் அல்லள்! பேசா மடந்தையா அவள்?

அடுத்து அவன் காண்பது ஆடல் பாடல் அழகு ஒன்றும் குறையா தலைக்கோலியின் அரங்கேற்றம்! மனையறம் கண்ணகியொடு கொண்டவன் மணமனை புக்கு மாதவியோடு விடுதல் அறியா விருப்பினனாகி, மனையகம் மறந்தான்.

மாதவி கலைத்திறம் மனையறம் விடுத்து, மணமனை போக வைத்துவிட்டது கலைத்திருப்பமே கதைத் திருப்பம் ஆகி அல்லது ஆக்கி விடவில்லையா?

கதை, மணமனையிலேயே கட்டுண்டு கிடந்து விடலாமா? பூம்புகாரில் இந்திரவிழா நிகழ்கின்றது. ஊரெல்லாம் கடலெனக் கடற் கானலை அடைகின்றது.

கோவலனும் மாதவியும் கூட்டத்தோடு சென்றாரும் அல்லர்; நின்றாரும் அல்லர்; புன்னை நீழல் புதுமணல் பரப்பில் ஓவிய எழினி சூழ, அமளிமிசை கோவலன் தன்னொடும் இருக்கும் வகையில் இருந்தாள் மாதவி.

தோழி வசந்தமாலை கையில் இருந்த யாழை வாங்கினாள். யாழோ குற்றம் நீங்கியது. மாதவி மகிழக் கோவலன் கானல்வரி பாடுகின்றான். பின்னர் அவளும் பாடுகின்றாள்.

"கானல்வரி யான்பாடத் தானொன் றின்மேல் மனம்வைத்து
மாயப் பொய் பலகூட்டு மாயத்தாள் பாடினாள்" எனத்

தழுவிய கையை விடுத்துப் பொழுது கழிந்தது போகலாம் என்று கூறித் தன் ஏவலாளருடன் புறப்பட்டனன். காதலனை இன்றி மாதவி தன் மனை புகுந்தாள்!

கலையால் இணைந்தவன் கலையால் பிரிந்தான்-கதை தொடர வேண்டுமே!

வருபவன், காவலனோ என ஐயுறத்தக்க தோற்றப் பொலிவமைந்த கோவலன், கண்ணகியாரைக் கண்டதும் வஞ்சகியோடு ஆடி வான் பொருள் குன்றம் ஒழிந்தது என்று நாணினான்; அப்பொழுதும் புலவாமல் புன்முறுவல் செய்து *'சிலம்புகள் உள்ளன கொள்க'* என்றாள்!

"எல்லாம் இழந்ததாக எண்ண வேண்டா; இன்னும் தருதற்குச் சிலம்புகள் உள்ளன" என்னும் குறிப்பொடு கண்ணகி கூறியது, கோவலனுக்குப் பொறி தட்டுதலாயிற்று!

*"இச்சிலம்பையே முதலாகக் கொண்டு இழந்த பொருளை ஈட்டலாம் மதுரைக்குச் செல்வோம் புறப்படு"*என்றான்.

இங்கே அடிகள் சொற்கலையைக் கதைத் திருப்பமாக்கும் திறம் புலப்பாடாகின்றது.

நெடிய நெடிய நாடுகாண்காதை, காடுகாண்காதைகள் நடையிடுகின்றன. ஓட்டம் தடுத்து ஓய்வு தந்து மீண்டும் கதையை ஓட்ட வேண்டும்.

ஐயை கோட்டம் ஒன்று எய்துகின்றது. வேட்டுவர் கோட்டம் அது. கொற்றவைத் தெய்வம் சாலினிமேல் ஏறிக் கண்ணகியை,

"இவளோ, கொங்கச் செல்வி குடமலை யாட்டி
தென்றமிழ்ப் பாவை செய்த தவக்கொழுந்து
ஒருமா மணியாய் உலகுக் கோங்கிய
திருமா மணியென"

உரைக்கிறது. அவளோ அரும்பெறற் கணவன் பெரும்புறத் தொடுங்குகின்றாள். புன்முறுவல் பூக்கின்றாள். கோவலனுக்குக் கலை விருந்தாகின்றது. பெண்ணணி கோலம் பெயர்ந்தபின் காவுந்தி ஐயையை அடைகின்றான்.

இயற்கைக்கேடும் செயற்கைக்கேடும் நெருங்காத

"செங்கோல் தென்னவர் காக்கும் நாடு"

ஆதலின்

"நிலவொளி விளக்கில் நீளிடை இரவே செல்லலாம்"

என நடக்கின்றனர்.

"மலையத் தோங்கி மதுரையின் வளர்ந்து
புலவர் நாவிற் பொருந்திய தென்றலொடு"

நடக்கின்றனர்.

கண்ணகியின் நடைத்துயர் மாற்றத் தெளிந்த துறவி காவுந்தி ஐயை,

கண்ணகியின் கையைக் கோவலன் தோளில் போட்டுக் கொண்டு நடக்க ஏவுகிறார்!

இளங்கோவடிகளின் உருக்க மெய்ப்பாட்டின் வெளிப்பாடாகிச் சிறக்கும் காட்சி ஈது.

மதுரையை அடுத்துத் துறவர் வாழும் புறஞ்சேரியை நெருங்குகின்றனர். அதன் முன் விடியல் பொழுதாகின்றது. கோவலன் கண்ணகியையும் காவுந்தியையையும் பாதுகாப்பான ஓரிடத்து இருக்கச் செய்து நீர்க்கரை ஒன்றன் பக்கம் செல்கிறான். ஆங்கே கோசிகன் என்பான் எதிர்ப்படுகின்றான். அவன் உருகி உருகி மாதவி எழுதிய ஓலையைக் கோவலனிடம் கொடுத்தற்கென வருபவன். கோவலன் தானோ வருபவன் எனத் தெளிய, குருக்கத்திக் கொடி ஒன்றனை நோக்கிக்,

"கோவலன் பிரியக் கொடுந்துயர் எய்திய
மாமலர் நெடுங்கண் மாதவி போன்றிவ்
வருந்திறல் வேனிற்கு அலர்களைந் துடனே
வருந்தினை போலும் நீ மாதவி"

என்றான். கோவலன் ஏறிட்டான்; என்ன கூறினை என்றான். இவன் கோவலனே எனத் தெளிந்த கோசிகன் மாதவி நிலையைக் கூறி அவள் வரைந்து தந்த ஓலையைத் தந்தான். உடனுறை காலத்துப் பூசிய வாசம் கமழ அமைந்த ஓலையைப் படித்தான்.

"அடிகள் முன்னர் யானடி வீழ்ந்தேன்
வடியாக் கிளவி மனக்கொளல் வேண்டும்
குரவர்பணி அன்றியும் குலப்பிறப் பாட்டியோடு
இரவிடைக் கழிதற்கு என்பிழைப் பறியாது
கையறு நெஞ்சம் கடியல் வேண்டும்
பொய்தீர் காட்சிப் புரையோய் போற்றி"

என்பதைப் படித்தான். உருகினான்.

"தன்தீதிலள்" என்றான். அதன்மேலே,

"என் தீதென்றே" கொண்டான்; அதன் மேலே, என் பெற்றோர்க்கு யான் எழுதும் கடிதமாகவே இஃதமைந்துள்ளது என உள்கினான்.

"மாசில் குரவர் மலரடி தொழுதேன்;
கோசிக மாணி காட்டு" எனக் கொடுத்தான்.

ஒரே முடங்கலைக் கோவலன் தன் குறையுணரவும், கோவலன் பெற்றோர் கோவலன் நிலையுணரவும் செய்த *முடங்கல் கலை, கதைத் திருப்பமாய்* அமைகின்றது.

கோவலன் பூம்புகார் விட்டு நீங்கிய பின் உண்டாகிய நிகழ்வுகளை யெல்லாம் கோசிகன் எடுத்துரைக்கவும் கோவலன் அறியவும் இத் திருப்பம் உதவியது.

கோசிகனை விடுத்த கோவலன் கண்ணகி, கௌந்தியர் இருந்த இடத்தை அடைந்தான்.

அங்கே துர்க்கையாகிய கொற்றவையின் வெற்றியைப் பாடும் பாணரொடு கோவலனும் கலந்துகொண்டு ஆடிப்பாடினான். அப்பாணரிடம் *'கூடற்கு உரிய காதம் எத்தனை'* என்று வினவுகிறான். அவர்கள் மதுரை வளத்தை எடுத்துரைத்து,

"மதுரைத் தென்றல் வந்தது காணீர்
நனிசேய்த் தன்றவன் திருமலி மூதூர்
தனிநீர் கழியினுந் தகைக்குநர் இல்லை"

என்றனர். பகலில் தங்கி இரவில் புறப்பட்டனர். வையையைக் கட்டுமரமேறிக் கடந்து

"அறம்புரி மாந்தர் அன்றிச் சேராப்
புறஞ்சிறை மூதூர் புக்கனர்"

அறம் புரிமாந்தராவார் துறவர்; இல்லறத்தார் தங்கக் கூடாப்பகுதி அது; அதில் *'புகுதல் கூடும்; தங்குதல் ஆகாது'* என்பதைப் புரிந்த கோவலன் ஊருள் சென்று தன் தந்தையை அறிந்தார் எவரையேனும் கண்டு தங்க வேண்டும் நிலையைக் குறிப்பால் உணர்ந்தான்.

கோவல கண்ணகியர் பற்றிக் கவுந்தியடிகள் முதற்கண் கண்ட பொழுதில் வினவியதற்கு *"உரையாட்டில்லை"* என்றவன், தானே தன் குறை இயம்புகிறான். கவுந்தியடிகளோ விரிவாக ஆறுதல் கூறுகிறார். கண்ணகியை அவர் காவலில் வைத்து ஊர் காணப் போகிறான். ஊர்காணல் வழியாக மாமதுரையை விரிக்கிறார் அடிகள். இவற்றுக்கு மூலத் திருப்பம் என்ன?

'அறம்புரி மாந்தர் அன்றிச் சேராப்
புறஞ்சிறை மூதூர்'

என்னும் சொற் கலைத் திருப்பமே கதைத் திருப்பமாய் அமைவதாம்.

கவுந்தியடிகள் முன்னரே மதுரைக்கு வந்தவராகத் தோன்றுகிறார். ஏனெனில் மதுரைக்குச் செல்லும் வழியைக் கோவலனுக்குச் சோலை வழியில் காண்பன வயல்வழியில் காண்பன என்பனவற்றை விரியக் கூறி,

"வயலும் சோலையும் அல்லது யாங்கணும்
அயல்படக் கிடந்த நெறியாங் கில்லை"

என்கிறார். புறஞ்சேரியில் தங்குகிறார். ஆங்குவந்த மாதரியைத் தெளிவாக அறிமுகம் செய்கிறார். ஆனால் அவர்க்குக் கோவலன் கூறுவதை,

"தீதுதீர் மதுரையும் தென்னவன் கொற்றமும்
மாதவத் தாட்டிக்குக் கோவலன் கூறுழி"

என்கிறார் இளங்கோவடிகள். அப்பொழுது மாடலன் கவுந்தியடிகள் இருக்கும் இடத்தை அடைகிறான். கோவலனைக் கண்டு அவன் நல்லியல்புகள் அனைத்தையும் கவுந்தி முன்னர்க் கூறுகிறான். அப்பொழுது கோவலன் தான் கண்ட கனவொன்றைக் கூறுகிறான். அற்றைக் காலைக் கனவாதலின் உடன் நிகழும் என உட்கொண்ட கவுந்தியும் மாடலனும்.

"அறத்துறை மாக்கட் கல்லது இந்தப்
புறச்சிறை இருக்கை பொருந்தாது ஆகலின்"

கதிர் செல்வதன்முன் மாநகர் புகுக என்கின்றனர்.

கனவுக் காட்சித் தூண்டல் கருதவும் விடாமல் ஏவத் தானே அருட்பேறு வந்தது போல் ஆயின மாதரி அவணுற்றாள்.

"தீதிலள் முதுமகள் செவ்வியள் அளியள்
மாதரி தன்னுடன் மடந்தையை இருத்துதற்கு
ஏதம் இன்று என்று"

கவுந்தியடிகள் எண்ணுகிறார். கண்ணகி பெருமையை 'இத்தெய்வம் அல்லது பொற்புடைத் தெய்வம் கண்டிலம்,' என்று கூறுவதுடன் தவத்தோர் அடைக்கலப் பேற்றையும் விரித்துரைத்து மாதரியிடம் கண்ணகியை அடைக்கலப்படுத்துகிறார்.

மாதரி கோவல கண்ணகியரைத் தனிமனைப்படுத்துத், தன் மகள் ஐயையை நாத்தூண் நங்கையாய் அமைத்துத் தாம் வழிபடும் கண்ணனும் நப்பின்னையும் எனப் போற்றிய பெற்றியை விரித்துரைக்கும் அடிகள், கண்ணகி கையறி மடைமையில் ஆக்கிய உணவை உண்டு, அம்மென் திரையல் மென்று உடன் புறப்படுதலைச் சுட்டுகிறார். ஆதலால் ஓரிரவு தங்கிக் காலையில் புறப்படுதலாகின்றது.

பல்லாண்டு பிரிந்தும் செல்வமெல்லாம் இழந்தும் *'எழுக'* என்றவுடன் கண்ணகி மதுரைக்கு எழுந்ததும், மண்மகள் அறியா வாழ்வினள் ஆறைங்காதம் நடந்ததும் தோழியும் ஆயமும் இன்றித் தனியே விடுத்துச் சிலம்பொடு செல்லும் நிலையில் ஆழ்மனம் திறந்தது. வருந்தியும் திருந்தியும் வளரும் உள்ளம் காவுந்தியையையிடம் கூறி ஆறுதல் பெறினும் கண்ணகியிடம் கதறியழுது கழுவாய் தேடும் நிலையை அடிகள் படைக்கிறார். அங்கே மனவளக் கலை பெரு வேலை செய்கிறது. 41அடிகளில் 28 அடிகள் அவனும் 13 அடிகள் அவரும் பேச விடுகிறார்.

அப்பொழுதும் கண்ணகியார் அறமும் ஆறுதலும் அன்றி ஆற்றாமை கூறினார் அல்லர்.

நூற்றுவர் பின்வர நடையிடும் கைக்கோல் கொல்லனிடம் "காவலன் தேவிக்கு ஆவதோர் காற்கணி நீ விலை இடுதியோ" என்கிறான்.

'கோப்பெருந்தேவிக் கல்லதை இச்சிலம்பு யாப்புறவில்லை' என்று கூறி கரந்து கொண்ட சிலம்பு வெளிப்படாமுன் இப்புதுவன் வழியே போக்குவேன் என உளங்கொண்டான்.

இங்கே பூண் கலையின் ஒப்புமை புதுவனைக் கள்வனாக்க உதவுகின்றது.

காவலனும் தேவியும் ஆடல் அரங்கில் இருந்த பொழுது அது. காவலன் உள்ளம் ஆடல்மேல் செல்லாமல் ஆடுவார்மேல் செல்ல ஊடல் கொண்ட தேவி *'தலைநோய்'* என்று புறப்பட்டாள். உண்மை புரிந்த காவலன் தேவியின் ஊடல் தணிக்கச் செல்லுங்கால் ஊடே புகுந்து பொற் கொல்லன் கோயிற் சிலம்பு கொண்ட கள்வன் என் குடிலகத்தான் என்ன, ஊடல் போக்க உரிய வாய்ப்பாய் எண்ணிய காவலன், ஊர்காப்பாளர்களைக் கூவி,

"தாழ்பூங் கோதை தன்காற் சிலம்பு
கன்றிய கள்வன் கைய தாயின்
கொன்றச் சிலம்பு கொணர்க ஈங்கு"

என்றான். இங்கேயும் ஆடலும் ஊடலும் கதைத் திருப்பமாய் அமைகின்றன.

ஊர்காவலர் கோவலனை நோக்கிய அளவில் அவன் தோற்றமும் ஏற்றமும் கள்வனியல்பொடு பொருந்தாமை கண்டு மறுக்க, ***'கரவடக் கலை'*** விரித்துக் கூறப்பட்டுக்

"கல்லாக் களிமகன் ஒருவன் கையில்
வெள்வாள் எறிந்தனன் விலங்கூடு அறுத்தது
காவலன் செங்கோல் வளைஇய வீழ்ந்தனன்"

குடத்துப்பால் உறையாமை, காளையின் கண்ணில் நீர் வழிதல் முதலாய தீய குறிகளைக் கண்டு, கண்ணகியும் தான் காணக் கண்ணனும் நப்பின்னையும் ஆடிய குரவையாடித் துயர் நீங்குக என வேண்டுவோம் என ஆய்ச்சியர் குரவை ஆடுகின்றனர்.

"குரவை முடிவிலோர் ஊர் அரவம்"

கேட்டுத் துன்பமாலை தொடர்கின்றது. பொங்கி எழுந்தாள் விழுந்தாள் எங்கணாஅ என அரற்றுகிறாள்.

காய்கதிர்ச் செல்வனே கள்வனோ என் கணவன்?

என்கிறாள். ஊரைச் சுற்றிச் சுற்றி அல்லல் உற்று ஆற்றா தழுதாள்! மல்லல் மதுரையார் எல்லாரும் மயங்கினார். கதிர் சாயும் பொழுதில்

"கண்டாள் அவன்றன்னைக் காணாக் கடுந்துயரம்"

உயிரூசலாடிக் கொண்டிருந்த அவனோ *'இருந்தைதக்க'* (நீ இரு) எனப் போனான். போனாள் வழக்குரைக்க! உண்மை உணர்ந்த அரசனோ,

"யானோ அரசன்; யானே கள்வன்"

என்று மயங்கி வீழ்ந்தனன்!

"கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்"

என்று கோப்பெருந்தேவியும் அவனொடு வீழ்ந்தனள்! வஞ்சினமாலை, அழற்படுகாதை, கட்டுரை காதை என்பவை விரைகின்றன.

"எழு நாள் இரட்டி எல்லை சென்றபின்
கோவலன் தன்னொடு வானவூர்தி ஏறினள்!"

கோவல கண்ணகியர் கதை முடிந்தது; முடியாமல் ஆகக் குன்றக் குரவை முந்துவந்து நிற்கிறது.

குன்றவாணர் கண்ணகி விண்ணகம் சென்ற காட்சியைக் காண நேர்ந்ததே அது. அவர்கள் கண்ணகியைத் தெய்வமாகக் கொண்டனர். குரவையாடிப் பரவினர்.

வஞ்சி மாநகரில் இருந்த சேரன் செங்குட்டுவன் மலைவளங் காணப் பரிவாரங்களொடு புறப்பட்டான். தேவியும் உடன் வந்தாள்; இளங்கோவும், மதுரைக் கூலவாணிகன் சாத்தரும் உடனிருந்தனர். குன்றக் குறவர் அடியுறை படைத்தனர்.

"கான வேங்கைக் கீழோர் காரிகை...
வானவர் போற்ற வானகம் பெற்றனள்"

அவள்,

"எந்நாட்டாள் கொல்லோ யார்மகள் கொல்லோ
நின்னாட்டு யாங்கள் நினைப்பினும் அறியேம்"

என்றனர்.

உடனிருந்த சாத்தனார், மதுரையில் நிகழ்ந்தவற்றையெல்லாம் முழுதுறக் கூறினார்.

இங்கே ஆய்வுக்கலையைப் பயன்படுத்துகிறார் அடிகள்.

க) செங்குட்டுவன் தன் தேவி வேண்மாளை நோக்கி, கணவன் இறந்ததும் தானும் இறந்த கோப்பெருந்தேவி, கணவன் கள்வன் அல்லன் என்பதை மெய்ப்பித்துக் கணவனொடு விண்ணகம் புக்க கண்ணகி இவர்களுள் எவர் உன் நலத்தோர்? என்று வினாவினான். தேவி வேண்மாள்

"காதலன் துன்பம் காணாது கழிந்த
மாதரோ பெருந்திரு வுறுக வானகத்
தத்திறம் நிற்கநம் அகல்நா டடைந்த இப்
பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்"

என்றாள்.

உ) நூலறி புலவரை நோக்கினான் செங்குட்டுவன்; நூலறிபுலவராவார் அமைச்சர். அவர்,

"ஒற்கா மரபிற் பொதியில் ஆயினும்
விற்றலைக் கொண்ட வியன்பே ரிமயத்துக்
கற்கால் கொள்ளினும் கடவுள் ஆகும்
கங்கைப்பேர் யாற்றினும் காவிரிப் புனலினும்
தங்கிய நீர்ப்படை தகவோ உடைத்து"

என்றனர்.

பொதியத்துக் கால் கொள்ளல் காவிரியில் நீராட்டல் எமக்குச் சிறப்பன்று. இமயத்துக் கல் கொண்டு கங்கை நீராட்டல் சிறப்பாம் என்றான்.

அப்பொழுது,

ங *இமிழ்கடல் வேலியைத் தமிழ்நா டாக்கிய*
இதுநீ கருதினை யாயின் எதிர்ப்பவர்

முதுநீர் உலகின் முழுவதும் இல்லை

என அழும்பில்வேள் சொல்ல, வடவர்க்கு வரைக இச் செய்தியை என்னத், தூதர் ஓலை வேண்டா; அயல்நாட்டு ஒற்றர் இவண் இருத்தலால் பறையறைதல் சாலும் என்றான் அழும்பில்வேள். அணிநகரில் அறைபறை எழுந்தது.

இவ்வாய்வின் பின் கால்கோள், நீர்ப்படை, நடுகல் எனத் தொல்லோர் மரபில் தொடரும் காதை வாழ்த்து, வரந்தரல் என நிறைகின்றது.

கோவலன், கவுந்தியடிகள் இருந்த புறஞ்சேரிக்கு முன்னே வந்தவன் மாடலன். கோவலன் மாதவியொடு வாழ்ந்து மணிமேகலை பிறந்த நாள் கொடை முதலாகப் பலவும் சொல்லிப் பாராட்டினான். அம்மாடலன் வழியாக அதுகாறும் சொல்லாச் செய்திகள் பலவும் அறிய வந்தன. அதே மாடலன், கங்கைக் கரையில் பத்தினிக் கல்லை நீர்ப்படை செய்து செங்குட்டுவன் இருந்தபோது,

"வாழ்க எங்கோ ! மாதவி மடந்தை
கானற் பாணி கனக விசயர்தம்
முடித்தலை நெரித்தது"

என்றான். "கானல் பாணியால் கனகவிசயர் கல் சுமந்தனர்" என்பது செங்குட்டுவன் முதலோர்க்குப் புதிராக இருந்தது. கை-கயிறு-பட்டம் எனத் தொடர்பு வேண்டுமே!

"யாது நீ கூறிய" தென்றான் செங்குட்டுவன்.

கடலாட மாதவியும் கோவலனும் கடற்கானல் சென்றது, கானல்வரிப் பாடலால் கருத்து வேறுபட்டுக் கோவலன் பிரிந்தது, வணிகம் செய்யக் கோவலனும் கண்ணகியும் வந்தது; கள்வனென்னைக் காவலனால் கோவலன் கொலையுண்டது, கண்ணகி மலைநாடு வந்து விண்ணகம் போனதறிந்து பூம்புகாரில் நிகழ்ந்தவை ஆகிய எல்லாமும் கூறினான். புகாரில் நிகழ்ந்தவற்றையும் மதுரையில் நிகழ்ந்தவற்றையும் கூறுவதற்கு அடிகள் கொண்ட உத்தி இஃதாம்!

அப்பொழுது கதிர்மறைய மதியம் தோன்றியது கண்ட கணி, வஞ்சியில் இருந்து புறப்பட்டு முப்பத்து இரண்டு மாதங்கள் ஆயின என்றான். வஞ்சிமாநகர் செல்ல ஏவலாயிற்று அது.

வஞ்சி மாநகர் சேர்ந்தான்; சோழனுக்கும் பாண்டியனுக்கும் வடவரைவென்று கற்கொணர்ந்த செய்தி அறிவிக்கத் தூதரை விடுத்தான். அவர்கள் இருவரும் புதுமையான வெற்றி என எள்ளினர். அதனைத் தூதர்வழி அறிந்த செங்குட்டுவன் சீற்றங் கொண்டான். மாடலன் எழுந்தான்.

"இகழாது என்சொல் கேட்டல் வேண்டும்
வையங் காவல் பூண்டநின் நல்யாண்டு
ஐயைந் தீரட்டி சென்றதற் பின்னும்
அறக்கள வேள்வி செய்யாது யாங்கணும்
மறக்கள வேள்வி செய்வோய் ஆயினை"

வேள்வி செய்தலே இனி உன் கடன் என்றான்.

"பூப்பலி செய்து காப்புக்கடை நிறுத்தி
வேள்வியும் விழாவும் நாள்தொறும் வகுத்துக்
கடவுள் மங்கலம் செய்கென ஏவினன்"

வாழ்த்துக் காதையோ கூற்றுவகைகளும் வாழ்த்துவரி, அம்மானைவரி கந்துகவரி, ஊசல்வரி, வள்ளைப்பாட்டு என வருவன! கண்ணகி வரம் தரல் வரந்தரு காதை; அதில்,

வேள்விச் சாலையுள் வேந்தன் செல்லத் தாமும் சென்றதை உரைத்து இக்கதைக்கு மூலமாம் தம் துறவும், கதை கேட்டவர் செய்யத்தகு கடைப்பிடிகளும் கூறி நூலை நிறைவிக்கிறார்.

கலைத் தொடக்கம்-கலை வழியே கதைத் திருப்பங்கள் கலையாலேயே கதையை நிறைவித்தல் என்னும் நிலைப் பாட்டைக் கலையுள்ளம் வாய்ந்த இளங்கோவடிகளார் மேற் கொண்டார் என்பது புலனாம்.

❖❖❖

6. உருபு செய்த உயிர்க்கொலை

பழிச்செயல் புரியார் பாண்டியர்; பழியொன்று நேரின் உயிர் வாழார். இத்தகைய பாண்டியர் குடியிலே வந்தவன் வெற்றிவேற்செழியன். ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் மதுரையிலே இருந்து அரசு புரிந்தபோது, கொற்கையிலிருந்து தென்பாண்டி நாட்டைக் காத்தவன் இவ்வெற்றிவேற்செழியனே. நெடுஞ்செழியன் மாண்ட நிகழ்சியை அறிந்து இவன் மதுரைக்கு வந்து 'காலை கதிர்க்கடவுள்' என்ன அரசு கட்டில் ஏறினான்.

ஆரியப்படை கடந்தான் ஆராயாமல் கோவலனைக் கொன்றதால் பழிக்கு ஆளானான். அப்பழியை அறிந்த பின் "கெடுக என் ஆயுள்" என்று அரியணையிலிருந்து வீழ்ந்து இறந்தான். கோப்பெருந்தேவியும் "தன்னுயிர் கொண்டு அவனுயிர் தேடினாள் போல்" அரசனுடன் மாண்டாள். இந்நிலைமையிலே ஆட்சி ஏற்கின்றான் வெற்றிவேற் செழியன். அவன் பொறுப்பு ஏற்ற காலையில் பாண்டியநாட்டின் நிலைமை இஃது எனவும், ஆட்சி ஏற்றவன் செயல் இஃது எனவும் சிலம்பு தெரிவிக்கின்றது. அஃது, "அன்று தொட்டுப் பாண்டியநாடு மழைவறங் கூர்ந்து வறுமை யெய்தி வெப்பு நோயும் குருவும் தொடர, கொற்கையிலிருந்த வெற்றிவேற்செழியன் நங்கைக்குப் **பொற்கொல்லர் ஆயிரவரைக் கொன்று களவேள்வியால் விழவொடு சாந்தி செய்ய,** நாடுமலிய மழை பெய்து நோயுந் துன்பமும் நீங்கியது" என்பது. இஃது **உரைபெறு கட்டுரையிலுள்ளது.** மங்கல வாழ்த்துக்கு முன்னாகவே இருக்கும் இக்கட்டுரை, அடிகள் எழுதியதுதானா? இவ்வுரையின் உண்மைதான் என்ன? இவற்றைக் காண்போம்.

பாண்டியன் பழிகாரன் ஆனதற்குக் காரணமாக இருந்தவன் பொற்கொல்லன் ஒருவன். ஆதலால் அரசுரிமை ஏற்ற வெற்றிவேற்செழியன் அக்கொல்லன் இனத்தவர் ஆயிரவரைக் கொன்று களவேள்வி செய்தான். இது **குளிக்கப் போய் சேற்றைப் பூசிக்கொண்டது போன்றது அல்லவா!** பழியைப் போக்கப் பெரும் பழியா புரிவது? செங்கோல் தென்னவர் செயலா இது?

உரைபெறு கட்டுரை அடியார்க்கு நல்லார், அரும்பத உரையாசிரியர் ஆகிய இருவருக்கும் முன்னரே இடம் பெற்றுவிட்டது என்பதை அவர்கள் உரை உண்மையால் தெளியலாம். அவர்கள் கொல்லர் ஆயிரவர் பலியை ஐயுற்று எழுதினர் அல்லர். ஆனால் சிலப்பதிகாரப் புத்துரை ஆசிரியர் **நாட்டாரவர்கட்கு ஐயந் தோன்றியது.** பழையதை மறுக்காமலே **"மாவினால் ஆயிரம் பொற்கொல்லர் உருச் செய்து பலியிட்டான் போலும்"** என்று எழுதினார். மாவினால் இடும்பலி உயிர்ப்பலியாகுமா? பூப்பலி போல மாப்பலி ஆகுமே அன்றி **உயிர்ப்பலி ஆகாது!**

ஒரு பொற்கொல்லன் செய்த தவற்றுக்காக... அவன் இனத்தவர் என்ற ஒரே ஒரு காரணத்திற்காக... ஏதும் அறியாத ஆயிரவரைக் கொன்ற கொடுமையை "அறநெறி முதற்றே அரசின் கொற்றம்" எனக் கொண்ட பாண்டிய நாட்டு அரசின் மேல் ஏற்றுதல் இழுக்காகும்.

வெற்றிவேற்செழியன் "அரசு கெடுத்து அலம் வரும் அல்லற் காலையிலே" கொற்கையிலிருந்து மதுரைக்கு வந்தான் என்று நீர்ப்படைக் காதையிலே பாடினார் அடிகள். அரசினை இழந்து மயங்கும் துன்பமிக்க காலம் பாண்டிய நாட்டுக்கு இருந்ததே அல்லாமல், **வெப்பும் குருவும் தொடர்ந்ததாகக் குறிப்பு இல்லை.** வெப்பும் குருவும் தொடர்ந்தால் – கண்ணகியாரின் வஞ்சினத்தால் தொடர்ந்தால் – அதற்கு மன்னனும், அவனைப் பழிவழிச் செலுத்திய ஒரு பொற்கொல்லனுமே காரணமாவர் அன்றி **மற்றையோர் யாது செய்வர்?**

"நுண்வினைக் கொல்லர் நூற்றுவர் பின்வர" அரண்மனைக்குப் பொற்கொல்லன் சென்று கொண்டிருக்கும் பொழுது கோவலன் அவனைக் கண்டான். "இச்சிலம்பினை விலையிடக் கூடுமோ?" எனக் கேட்டான். "பாண்டிமா தேவிக்குரிய சிலம்பினை நான் கவர்ந்து கொண்டது வெளிப்படு முன் இவனே கள்வன் எனக்காட்டித் தந்து என்மேல் ஐயம் ஏற்படாதவாறு காப்பேன்" என உறுதி செய்துகொண்டு, காவலனைக் காணுகின்றான். தக்க உரையால் தன் எண்ணத்தையும் முடித்துக் கொள்கின்றான்.

நூற்றுவர் பின் தொடர்ந்துவரினும் எவரிடத்திலும் அவன் **கரவு எண்ணத்தைக் கூறினான் அல்லன்.** அவரும் கேட்டாரல்லர். அதுபற்றிய சிந்தனை எதுவும் அற்றவராய் அவரவர் பணிக்கு ஏகினர்.

காவலனிடம் பொற்கொல்லன் கரவாகப் பேசியதும், அதன் விளைவால் கோவலன் கொலை செய்யப் பெற்றதும் அவர் அறியார். ஒருவேளை, உண்மையைத் தெளிவாய் அறிந்திருந்தும், வஞ்ச உள்ளத்தாலோ, அச்ச நடுக்கத்தாலோ தடுத்து உரையாமல் இருந்திருப்பின் அவர்கள் மீது பழி சூட்டவும் கூடும். அதற்கும் வழியில்லை. அன்றிக் கொல்லப்பட்டவர்கள் என்று குறிக்கப்படுவர்களும் **அந்நூற்றுவர் அல்லர்; ஆயிரவர்.** இது பெரும் பழியல்லவா! காவலன் கடமையா இது?

வெற்றிவேற்செழியன் அரசனையும் அரசியையும் இழந்த துயரத்தால் அறிவிழந்து, வெறிகொண்டு இச்செயலைச் செய்தான் என்றே கொள்வோம். அக்காலையில் அமைச்சர், ஆன்றோர், அறிஞர் எவரும் இலரா? அவர்களெல்லாரும் தடுக்காமல் வாளாவிட்டு விட்டனரா? அன்றி இத் தண்டம் தரவேண்டியது முறையே என்று அவர்கள் உள்ளமும் ஒப்புக் கொண்டு விட்டதா? அவ்வாறாயின் **பாண்டியனுக்கு மட்டுன்று – தமிழகப் பண்பாட்டுக்கே பெருங்களங்கம் ஆகும்.**

தனிமகன் ஒருவன் உரையை அறிவு பிறழ்ந்த நேரத்தே ஏற்றுக்கொண்டு, பிறர் அறியாமல் இட்ட கட்டளையால் நிகழ்ந்தது கோவலன் கொலை. அதுபோல்வதா ஆயிரம் பொற்கொல்லர் கொலை? **ஊர் அறியாமல் ஏன் நாடே அறியாமல் செய்துவிட இயலுமா?** ஆயிரவர்களை எவரும் அறியாமல் ஒன்று சேர்க்கவோ பலியிடவோ கூடுமோ? அவர்களும் உவப்புடன் முன்வந்து தங்களைத் தாங்களே பலியிட ஒப்பினரா? அவர்கள் மனைவி மக்களும் உடந்தையாகி விட்டனரா? எப்படி ஒப்புவது?

மலையமான் மக்களை யானைக்காலின் கீழிட்டுக் கொல்லத் துணிந்த கிள்ளிவளவனைத் தடுத்து நிறுத்தியவர் எவர்? ஒற்று வந்தான் என்று இளந்தத்தன் என்னும் புலவனைக் கொல்ல நின்ற நெடுங்கிள்ளியைத் தெருட்டி நிறுத்தியவர் எவர்? மைந்தரொடு மாறுபட்ட மன்னரை, மனைவியொடு வேறுபட்ட வேந்தரைத் திருத்தி நிலை நிறுத்தியவர் யாவர்? முடிவேந்தர்கள் ஆயினும் முறை கெட்டுச் செல்லுங்கால் இடித்துக்கூறி நன்னெறி காட்டியவர்கள் யாவர்? **தமிழ்வளம் கொழித்த தகைசால் புலவர்கள் அல்லரோ?** அவர்களுள் எவருமே சங்கம் இருந்து **புலவர் கூட்டுண்ட தமிழ் மதுரையிலே இல்லாமல் போய்விட்டனரா?** இருந்தும் தடுக்க முன் வந்தாரில்லை என்றால் பழி! **மாபெரும் பழி! தமிழ்த்தாய்க்கே இழிவு!**

நூலுள், நீர்ப்படைக் காதையிலே,

"கொற்கையி லிருந்த வெற்றிவேற் செழியன்
பொற்றொழிற் கொல்லர் ஈரைஞ் தூற்றுவர்
ஒருமுலை குறைத்த திருமா பத்தினிக்கு
ஒருபக லெல்லை உயிர்ப்பலி யூட்டி"

என்று வரும் வரிகளை உட்கொண்டு உரைபெறுகட்டுரை எழுதப் பெற்றதாம். இந்நீர்ப்படைக்காதை வரிகளை மாடலன் என்னும் மறையோன் செங்குட்டுவனிடம் உரைக்கின்றான். "மன்னன் இறந்தபின் வளங்கெழு சிறப்பின் தென்னவன் நாடு செய்தது ஈங்கு உரை" என்ற செங்குட்டுவன் வினாவுக்கு விடையாகவே இதனைக் கூறுகின்றான். இப்பகுதி ஆயிரவரை உயிர்ப்பலி ஊட்டிய நிகழ்ச்சியாயின் சொல்லுபவன் கவலைக்குரல் காட்டியிருக்கக் கூடும். அன்றிக் கேட்பவனும் கவலை பெருக்கியிருக்கக் கூடும். இரண்டுமே இல்லை!

முன்பு செங்குட்டுவனை மலைநாட்டிலே கண்டு கண்ணகி வரலாற்றைச் சாத்தனார் கூறுங்காலையில், பாண்டியன் செய்த தவற்றினையும் அதன்பின் அவன் மாண்டதனையும் கேள்விப்பட்டு, "வருந்தினன்; மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல் துன்பம் அல்லது தொழுதகவு இல்" என உரைத்துக் கவலை கொண்டவன், இங்கே ஆயிரவர் பலியினைக் கேள்வியுற்று வாளா இருப்பனோ? இருக்கவும் உள்ளம் விடுமோ? "இது பெரும் பழி" என்று கொதித்துரைத்திருக்க மாட்டானோ? இவற்றுள் எதுவும் இல்லை, இவ்வாறு சொல்பவனும் கேட்பவனும் சிறிதும் கவலையற்றவர்களாய்க் காணப்பெறுவதால் ஆயிரவரை உயிர்ப்பலியிட்ட நிகழ்ச்சி அங்குக் கூறப்பெற்றது இல்லையாம். அவ்வாறு பலியிட வேண்டியதும் இல்லையாம்.

கண்ணகியார் கணவனை இழந்த கவலையிலே,

"பார்ப்பார் அறவோர் பசுபத்தினிப் பெண்டிர்
மூத்தோர் குழவி யெனுமிவரைக் கைவிட்டுத்
தீத்திறத்தோர் பக்கமே சேர்க"

என்று தீக்கு ஆணையிடுகின்றார். அவர் ஆணைப்படியே தீத்திறத்தோர் அனைவரும் ஒழிந்திருக்க வேண்டுமே! அதனை விடுத்து ஆயிரவர் பொற்கொல்லரைப் பலியிட்டது தெய்வமும் ஏற்கத்தகாத செயல்தானே!

கண்ணகியாரே தீயவர்களுக்குத் தெய்வத்தின் பெயரால் தண்டனை தந்தார். தீயவர் அழிந்து போயிருக்க வேண்டும். எஞ்சியிருந்தவர் எவரும் தீயரல்லர்! நல்லோரே! நல்லோர் ஆயிரவரைக் கொன்றது அறநெறிக்கு ஏற்குமா? அதனை ஏற்றுக்கொண்டது எனின் கண்ணகியார் கூறியதுபோல் மதுரை மாநகரில்,

"சான்றோரும் உண்டு கொல்?"

"தெய்வமும் உண்டு கொல்?"

கோவல "கண்ணகியரைக் கண்டு புன்சொல் கூறிய தூர்த்தனும் பரத்தையும் கவுந்தியடிகள் சாபத்தால் முள்ளுடைக் காட்டில் முதுநரியாகி ஊளையிட்டது கேட்டு நடுங்கி, "நெறியின் நீங்கியோர் நீரல கூறினும், அறியாமை என்றறியல் வேண்டும்" என்று கோவலன் வாயிலாகக் கூறும் அடிகள், களை பறிப்போர் பறித்து வரப்பிலே போட்ட குவளைப் பூவின் மேல், தளர்ச்சி மிகுதியால் கண்ணகி கால்களை வைத்துவிடக்கூடும், அதனால் அப்பூவிலேயுள்ள தேனை எடுக்குமாறு புகுந்த வண்டு இறக்கவும் கூடும் என்று கவுந்தியடிகள் வாயிலாக அருளறங்கூறும் அடிகள் கோவலன் இறப்புக்குக் "காவலன் செங்கோல் வளைய வீழ்ந்தனன், கோவலன் பண்டை ஊழ்வினை உருத்து" என்று இரங்கும் அடிகள் ஆயிரவர் பொற்கொல்லரைத் தெய்வத்தின் பெயரால் உயிர்ப்பலி ஊட்டிய கொடுமையைச் சிறிதும் அசைவின்றிக் கூறிச் செல்வாரோ?

செங்குட்டுவனிடம் கண்ணகியார் வரலாற்றைக் கூறும் சாத்தனாரேனும் உயிர்ப்பலி ஊட்டிய வரலாற்றைக் கூறுகின்றாரோ? இல்லை. அவர் கோவலன் கொலையுண்ட உடனேயே சேரநாடு போய்விட்டார் என்று கூறவும் இயலவில்லை. கண்ணகியாரே, கோவலன் இறந்த பதினான்காம் நாள் விண்ணுலகு சென்றார். செல்லுங் காலையில் தான் மலை வேடர்கள் கண்டனர். தற்செயலாக மலைவளங் காண எழுந்த சேர வேந்தனிடம் தாம் கண்ட வியப்புமிக்க நிகழ்ச்சியைக் கூறினர். அதற்கு விளக்கம் தருவதாகத்தான் சாத்தனார் பேசினார். இவையனைத்தும் விரைந்து நடந்தவை அல்லவாம்! மதுரையிலே வாழ்ந்த சாத்தனார் இந்நிகழ்ச்சியை அறியாமல் இருந்தார் என்பதும் சால்பில்லை. ஆதலின், உயிர்ப்பலியாகக் கொல்லரையிட்ட நிகழ்ச்சி உண்மையன்றாம். உரைபெறு கட்டுரைக் கூற்றும் பொய்யாம். அடிகள் கருத்துக்கு மாறுபட்ட உரைபெறு கட்டுரை எப்படி அடிகள் எழுதியது ஆகும்?

சமணரைக் கழுவேற்றிய நிகழ்ச்சி ஒன்று உண்டே ! அது போல் இதுவும் நடந்திருக்கக் கூடாதோ-எனின் **தென்னாட்டுத் தென்றல் திரு.வி.க.** சமணரைக் கழுவேற்றியது பற்றி உரைப்பது காண்க.

"தன் மனச்சான்றால் ஒரு மன்னனை மாள்வித்த அறம் வளர்ந்த ஒரு நாட்டில் சமணரைக் கழுவேற்றிய மறம் வளர்ந்த தென்னை என்று சிலர் கருதலாம். சமணரைக் கழுவேற்றிய வரலாற்றிற்குப் போதிய அகச்சான்றாதல் புறச்சான்றாதல் உண்டா என்பது முதலாவது சிந்திக்கத் தக்கது. அச்சான்றுகள் கிடைக்கும் வரை சமணரைக் கழுவேற்றிய வரலாற்றை யான் கொள்ளேன்; கொள்ளேன்! தேவாரத்தில் போதிய அகச்சான்றில்லை. அந்நாளில் பாண்டிய நாடு போந்த வெளிநாட்டார் சிலர் எழுதிய குறிப்புக்களிலும் அவ்வரலாறு காணோம். திருஞான சம்பந்தருக்கும் பின்னே பன்னூறு ஆண்டு கடந்து எழுதப் பெற்ற சில புராணங்களில் சமணரைக் கழுவேற்றிய கதைகள் சொல்லப்படுகின்றன. அக்கதைகளும் ஒருமைப் பாடுடையனவாயில்லை. ஒரு புராணக் கதைக்கு மற்றொரு புராணக்கதை முரண்பட்டு நிற்கிறது. **இப்புராணக் கூற்றுக்களைச் சரித்திர உலகம் ஏற்குங்கொல்! சரித்திர உலகம் ஏற்றுக் கொள்ளும் முறையில் அல்லவோ சான்றுகள் இருத்தல் வேண்டும்.**

"இப்பொழுது ஞானசூரியன் என்னும் ஒரு நூல் தமிழ்நாட்டில் உலவுகிறது. அந்நூற்கண் எடுத்துக்காட்டப்பட்ட திருஞானசம்பந்தர் திருப்பாக்களுள் ஒரு மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. "அந்தணாளர் புரியும் அருமறை சிந்தை செய்யா அருகர் திறங்களைச் சிந்தவாது செயத் திருவுள்ளமே" என்பது தேவாரம். இதன்கண் போந்துள்ள **'தீறம்'** என்னும் சொல் ஞானசூரியனில் **'சீரம்'** என்னும் சொல்லாக மாற்றப் பட்டிருக்கிறது... **அறிந்தோ அறியாமலோ உறும் மாற்றங்கள் பின்னே சரித்திர உலகிற்குப் பெருந்தொல்லை விளைக்கின்றன.**"

இவ்வுரை மணிகளும் மேற்கொள் விளக்கமும் உயிர்ப் பலியூட்டிய இந்நிகழ்ச்சிக்கும் முற்றிலும் பொருந்துவனவாகும்.

உயிர்ப்பலியிடல் உண்டு என்பதைப் பழந்தமிழ் இலக்கியங்கள் பற்பல இடங்களில் சாற்றிச் செல்கின்றன. பலிபீடம், பலிபீடிகை, பலிமுன்றில், பலிப்புதவு, பலிபெறுவியன்களம். உயிர்ப்பலிமுரசு என்றெல்லாம் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. பூவினைத்

தெய்வப்பலியாக இடுவது பூப்பலி. அதுபோல் உயிர்களை முரசங்களுக்கும், தெய்வங்களுக்கும் பலியாக இடுவது உயிர்ப்பலி, ஆனால் மக்களைப் பலியிடும் வழக்கு இல்லை. அது செய்யப்படின் கொலையாம். வீரங் கருதித் தாமே தம்மைப் பலியிட்டுக் கொள்ளும் இலக்கிய வழக்கினை இவ்வுயிர்ப் பலியூட்டுள் வைத்து எண்ணுவது முறைமையன்றாம், அதனினும் ஆயிரவரை ஒருங்கு பலியிட்டதாகக் கூறும் இந்நிகழ்ச்சியுடன் பேசவே தகுதியற்றதாம்.

"எல்லாவிடத்தும் கொலை தீது" (நான்மணி.93)

என்றும்,

"ஆருயிரைக் கொல்வதிடை நீக்கி வாழ்தல்" (திரிகடுகம் 25)

"நன்குணர்ந்தார் என்பெறினும் கொல்லார்" (சிறுபஞ்ச 48)

என்றும் அறநூல்கள் கூற, அறத்தின் தலைமணியாம் திருக்குறள் தோன்றிய நாட்டிலே ஆயிரவரைக் கொன்ற கொடுமை உண்டென்பதே பெரும் இழுக்காகும்.

இது நிற்க. பழமொழி நானூறு என்னும் நூலிலே "இனங் கழுவேற்றினாரில்" என்று ஒரு பழமொழி சுட்டப்பெறுகின்றது. (பழமொழி 188) இது "மாறுகொண்டவர் என்று கருதி ஓர் இனத்தையே கழுவேற்றினார் இல்லை" என்று உறுதியளிக்கின்றது. இல்லையா?

"பொற்றொழிற்கொல்லர் ஈரைஞ் தூற்றுவர் பத்தினிக்கு ஒரு பகல் எல்லை உயிர்ப் பலியூட்டி" என்ற வரிக்குத் தவறாகப் பொருள் கருதிக் கொண்டு விட்டமையால் நேர்ந்த பிழைபாடே இது. ஈரைஞ்நூற்றுவர். ***"ஆயிரவரை"*** என்றார் அரும் பதவுரைகாரர். ***"இரண்டன் உருபு விரிக்க"*** என்றார் நாட்டார். நீர்ப்படைக் காதை வரிகளுக்குக் கருத்தினைப் - பிறழக்கொண்டு உரைபெறு கட்டுரைகாரர் எழுதிய வரிகள் அரும்பத உரைகாரரையும், புத்துரைகாரரையும் மயங்கச் செய்து அவர் வழிக்கே இட்டுச் சென்றுவிட்டன. ஆனால் **'ஈரைஞ்ஞூற்றுவர் பொற்கொல்லரும் பத்தினிக்கு ஒரு நாள் அளவும் உயிர்ப் பலியூட்டினர்'** என்று பொருள் கொள்வோமாயின் எவருக்கும் பழி இல்லையாம்.

தம் இனத்தவன் ஒருவன் செய்த தவற்றுக்கு இரங்கி அவ்வினத்தவர் ஆயிரவர் கூடி, இக்கூடாத நிகழ்ச்சிக்காக ஒருநாள் முழுவதும் 'உயிர்ப்பலி' யிட்டு வாழ்த்தி வழிபட்டனர் என்று கொள்ளல்

தக்கதாம். கற்புக் கண்ணகியாரின் கடுஞ்சினம் தங்கள் இனத்திற்குக் கேடு செய்து விடாமலும், அவர் உள்ளத்தைச் 'சாந்தி' செய்யுமாறும்; தங்கள் இனப் பழிக்குக் கழுவாய் தேடுமாறும் இவ்வுயிர்ப் பலி இட்டனர் எனின் குற்றமாகுமோ?

இவ்வாறு பொருள் காணுவதைத் தடுத்தது முன்னிற்கும் ஒரு வரியாம். அதனைக் காண்போம்.

"கொற்கையி லிருந்த வெற்றிவேற் செழியன்
பொற்றொழிற் கொல்லர் ஈரைஞ் நூற்றுவர்
ஒருமுலை குறைத்த திருமா பத்தினிக்கு
ஒருபக லெல்லை யுயிர்ப்பலி யூட்டி
உரைசெல வெறுத்த மதுரை மூதூர்
அரைசுகெடுத் தலம்வரு மல்லல் காலைத்
தென்புல மருங்கில் தீதுதீர் சிறப்பின்
மன்பதை காக்கும் முறைமுதல் கட்டிலின்
நிரைமணிப் புரவி யோரேழ் பூண்ட
ஒருதனி யாழிக் கடவுட் டேர்மிசைக்
காலைச் செங்கதிர்க் கடவுள்ஏ றினனென
மாலைத் தீங்கள் வழியோன் ஏறினன்" சிலம்பு.2. 727-38

என்பதற்கு வெற்றிவேற்செழியன் ஈரைஞ்ஞூற்றுவரை உயிர்ப்பலியூட்டி அரசுகட்டில் ஏறினன் எனக் கொண்டு விட்டனர். அவ்வளவே இதற்கு முதல் வரியும் இரண்டாம் வரியும் அமைந்துள்ள நிரலும், உயிர்ப்பலி நிகழ்ச்சியும், உரைபெறு கட்டுரைக் குறிப்பும் பின்னிப் பிணைந்து மாறுபொருள் காணுமாறு செய்துவிட்டன. ஆனால் பொற்கொல்லர் ஆயிரவர் பத்தினிக்கு ஒரு பகற்பொழுதளவு உயிர்ப்பலியூட்டிப் புகழ் ளங்கும் பரக்கும்படி மிக்க மதுரை மூதூர் தன் அரசினை இழந்து மயங்கும் துன்பமிக்க காலத்தே கொற்கையிலிருந்த வெற்றிவேல் செழியன் தென்னாட்டின்கண் குற்றந்தீர்ந்த சிறப்பினையுடைய உயிர்த் தொகுதி யினைக் காவல் செய்யும் முறையானே முதன்மையமைந்த சிங்கா தனத்தின்கண் ஏறினான் என்று உரைகொள்ளின் எவர்மீதும் பழிபோட வேண்டியது இல்லை.

வெற்றிவேற்செழியன் மதுரை மூதூர் அரசு கெடுத்து அலம்வரும் அல்லற் காலையில் முறை முதல் கட்டில் ஏறினான் என்பது பொருந்தும்.

அவன் அரசேற வருமுன் இருந்த மதுரை நிலைமையைக் காட்டும் அடைமொழியே உயிர்ப்பலியிட்ட நிகழ்ச்சியாகும்.

"வெற்றிவேற்செழியன்... அல்லற்காலை" என இடை வெளிப்படு கின்றதே என்ற ஐயம் இலக்கியம் பயின்றோர்க்குக் கிளைக்க மாட்டாது. ஏனெனில் இவ்வாறு வருவதற்கு எண்ணிறந்த சான்றுகள் உளவாதலை அறிவர். இவ்வாறு உரைகொள்ளாவிடின், பழிமிக்க ஒரு கொலையால் அரசனும் அரசியும் இறந்துவிட்ட நிகழ்ச்சியை அரியணை ஏறுமுன்னரே மறந்து ஆயிரவர்களை அறமற்றுக் கொன்றான் வெற்றிவேற்செழியன் என்ற பெரும் பழிக்கு ஆளாக நேரிடும். பாண்டியன் அத்தகைய பழிகாரனா? அல்லன்! அல்லன்! அவனைப் பழிகாரன் ஆக்கியது **'ஐ' என்னும் ஓர் உருபே.** ஆதலால் ஆயிரம் பேர் கொலை **ஓர் உருபின் கொலையேயாம்!**

இங்குக் கூறியவற்றால் உரைபெறு கட்டுரை அடிகளார் எழுதியது அன்று என்றும், அக்கட்டுரை சிலப்பதிகார உரையாசிரியர் காலத்திற்கு முற்பட்டே எழுதப்பெற்றுவிட்டது என்றும், அது நீர்ப்படைக்காதை வரிகளைப் பிறழக் கருதிக்கொண்டு கூறப்பட்டது என்றும், அப்பிறழ்ச்சியால் விளைந்தனவே பின்னைய உரைகாரர்கள் உரைகள் என்றும், பாண்டியன் நெடுஞ்செழியன் இறந்த பின் நாடு அல்லலுற்ற நிலைமையிலே வெற்றிவேற்செழியன் அரைசு கட்டில் ஏறினான் என்றும், அவன் வரு முன்னரே மதுரையிலே வாழ்ந்த பொற்கொல்லர் ஆயிரவர் கூடித் தம் இனத்தினன் புரிந்த பிழைக்குக் கழுவாயாக ஒரு பகல் எல்லை உயிர்ப்பலி ஊட்டினர் என்றும், இனங்கழுவேற்றல் பெரும்பழி என்றும், பாண்டியன் பழிகாரன் அல்லன் என்றும், அப்பழி ஓர் உருபால் விளைந்தது என்றும் ஒருவாறு கூறப்பெற்றன.

குறிப்பு : "கொற்கையில் இருந்த வெற்றிவேற்செழியன் நங்கைக்குப் பொற்கொல்லர் ஆயிரவரைக் கொண்டு களவேள்வியால் விழவொடு சாந்தி செய்ய நாடு மலிய மழைபெய்து நோயுந் துன்பமும் நீங்கியது. "என்பதாயின் பிழை தவிர்க்கப்பெற்றதாம். **கொண்டு என்பது கொன்று** எனத்திரிவது ஏடெழுதுவோரால் நிகழத்தக்கதேயாம். இவ்வாறு கருதின் உரைபெறு கட்டுரைச் செய்தியும் தவறின்றாம். ஆனால், செழியன் தூண்டலால் கண்ணகியார்க்குப் பொற்கொல்லர் உயிர்ப்பலி ஊட்டியதாகப் பொருள் கொள்ள வேண்டிவரும்.

❖❖❖

7. கொற்கை

"கொற்கையில் இருந்த வெற்றிவேற்செழிய"னைச் சிலம்பு பாடுகின்றது. "வெற்றி வேற்கை வீரராமன் கொற்கையாளி குலசேகரன் புகல்" நூல், இளஞ்சிறுவரும் அறிந்தது! பழங்கொற்கை, பரவை அலைப்பால் பட்டழிந்தாலும், அக்கொற்கைச் சிறப்பும், கொற்கைப் பெயர் தாங்கியுள்ள ஓர் ஊரும், ஏட்டு வழக்கிலும் நாட்டு வழக்கிலும் இன்றும் விளாங்கி வருகின்றன.

கொற்கையின் சிறப்பை முதற்கண் ஆய்வின் வழியே உலகுக்கு உணர்த்தியவர் முனைவர் **கால்டுவெல்!** "கோநகர்கொற்கை" என்னும் நூல் வழியே கொற்கையைத் தடம்பதித்துக் காட்டியவர் நுண்கலைச் செல்வர் **அ.இராகவன்.**

அறிஞர்கள் கொற்கையின் இடமும் தடமும் கண்டு தெளிவித்துள்ளனர்; ஊர்ப் பெயர்க் கரணியம் பற்றியும் அறியத் தலைப்பட்டுள்ளனர். கொற்கைப் பெயராய்வே இக்கட்டுரையின் உள்ளீடு.

கொற்கை என்பது, **'கொல்கே', 'கொல்கீஸ்'** என்று கிரேக்க நாட்டவராலும் உரோம நாட்டவராலும் குறிக்கப் பெற்றுள்ளதாம்! திருச்செந்தூர் கல்வெட்டு ஒன்றில் 'கொல்கை' என்ற குறிப்புள்ளதாம். ஆதலால் கொல்கை என்னும் பெயரே கொற்கை ஆகியிருக்க வேண்டும் என்று அறிஞர் கால்டுவெல் ஒரு முடிவுக்கு வந்தார்.

கொல்கை என்பதைக் 'கொல் – கை' எனப் பிரித்துக் 'கொலை செய்யும் கைபோன்றது' என்று பொருள் கண்டார். தொன்முது மாந்தன் கொல் கருவி கையாகவே இருந்ததாகலின், அப்பெயர்ப் பொருத்தத்தால் 'கொற்கை' யாகி இருக்க வேண்டும் என்று விளக்கினார்! கொற்கையில் இருந்தவர் மட்டுமோ கொல்கையர்? இக்கொடுமைப் பெயரையோ தம் ஊர்க்குச் சூட்டி உவகையுறுவர்?

முனைவர் கால்டுவெல் வரைந்த திருநெல்வேலி வரலாற்று நூலை மொழி பெயர்த்தவர் முனைவர் திரு.ந.சஞ்சீவி. அவர் இவ்வாய்வுக்கு, ஒரு மேல் விளக்கக் குறிப்பு காட்டினார். கடற்கரைப் பட்டினமாகிய

அந்நகர்க்கும் கடல் அலைப்புக்கும் உள்ள தொடர்பை உன்னி, 'அலைகள் கொல்லும் (தாக்கும், தகர்க்கும்) இடம்' என்று பொருள் கண்டார். அதற்குக் "கடற்கரை மெலிக்கும் காவிரிப் பேரியாறு" என்னும் சிலம்பின் அடியையும் மேற்கோள் காட்டினார். இஃது அலைத் தாக்குதலை நிறுவும் சான்றேயன்றி ஊர்ப்பெயர் அமைதிக்கு உரிய சான்றாகாது என்பது வெளிப்படை. கால்டுவெல் காட்டிய 'கொல்' என்னும் சொல்லுக்கு வேறு நயம் காட்டி விளக்கிய விளக்கமே இஃது என்ற அளவில் அமையலாம்; அவ்வளவே! பொருளொடு பொருந்துவது அன்றாம்.

'கை' என்பது இடப்பொருட்சொல் என்று முனைவர் சஞ்சீவியார் கூறுவது ஏற்கும் இனிய குறிப்பு. குறுக்கை, திருவதிகை, திருக்கடிகை, வேளுக்கை, திருத்தணிகை என்னும் இன்ன ஊர் பலவும் இவ்வியலால் அமைந்தனவேயாம். ஆனால், 'கொல்' என்னும் சொல் பற்றி ஆய்ந்தே ஒரு முடிவுக்கு வரவேண்டும்!

கொல் என்பதன் பொருள் **கொலைத்** தொழிலொடு தொடர்பு கொண்டதோ? **கொல்லுத்** தொழிலொடு தொடர்பு கொண்டதோ? முதற்கண் ஆய்வுக்குரிய செய்தி ஈதே.

ஒரே சொல் மூலத்தின் வழியே அமையும் பல பொருட்புணர்ச்சியை முட்டுறா வகையில் அமைத்தலே சங்கச்சான்றோர் வழக்கு, அவ்வழக்கினைக் கொண்டு ஆய்தலே முட்டறுத்து முடிவுறுத்த வல்லதாம்!

கொல்லுதல் தொழில் சுட்டும் புணர்ச்சிகள் எல்லாம் இயல்பு வழிப்பட்டன. கொல்குறும்பு, கொல்படை, கொல்பிணி, கொல்புனம், கொல்களிறு என்றே பழ நூல்களில் பயின்றுள. கொற்குறும்பு, கொற்படை, கொற்பிணி, கொற்புனம், கொற்களிறு என எங்கும் **'ல' கரப்புள்ளி, 'ற' கரப்புள்ளியாய்த் திரிந்தன அல்ல.**

"பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு" திருக்குறள்.735

"சொல்லுறழ் மறவர்தம் கொல்படைத் தானையர்" பதிற்.58

"கொல்படை தெரிய வெல்கொடி நுடங்க" பதிற்.67

"கொல்பிணி திருகிய மார்புகவர் முயக்கம்" பதிற்.50

"கொல்புனக் குருந்தொடு கல்லறைத் தாஅம்" அகம்.133

"இருஞ்சே றாடிய நுதல கொல்களிறு" நற்.51

"கொல்களிற்று ஒருத்தல்" நற்.92

"கொண்டி மறவர் கொல்களிறு பெறுக" பதிற்.43

"கொல்களிற்று உரவுத்திரை பிறழ" பதிற்.50

"கொடி நுடங்கு நிலைய கொல்களிறு மிடைந்து" பதிற்.52

"கொல்களிறு மிடைந்த பஃறோல் தொழுதி" பதிற்.83

"கொல்களிற்று மிமிசைக் கொடிவிசும்பு நிழற்றும்" புறம்.9

"கடுஞ்சினத்த கொல்களிறும் கதழ்பரிய கலிமாவும்" புறம்.55

"உயர்ந்தோங்கு மருப்பிற் கொல்களிறு" புறம்.153

'கொல்' எனும் இவையெல்லாம், **கொலைத் தொழிற்பாற்பட்டு, வல்லின வருமொழிமுன் இயல்பாய் நின்றன.** இனி கொல்லுத்தொழில் தொடர்பினவற்றைக் காண்போம்.

தொண்டைமானுழைத் தூது சென்ற ஔவையார் பாடிய புறப்பாட்டில் படைக்கலங்களைச் சுட்டிக்காட்டி,

"இவ்வே, பீலி யணிந்து மாலை சூட்டிக்
கண்டிரள் நோன்காழ் திருத்தினெய் யணிந்து
கடியுடை வியனக ரவ்வே; அவ்வே
பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து
கொற்றுறைக் குற்றில மாதோ"

என்பதில் கொல்லுத்துறை 'கொற்றுறை' யாதல் அறிக.

"கொண்டுழிப் பண்டம் விலையொரீ இக் கொற்சேரி"

என்னும் ஐந்திணை ஐம்பதும் (21),

"கொற்சேரித், துன்னூசி விற்பவர் இல்"

என்னும் பழமொழியும் (5) 'கொல்லுச்சேரி' யைக் கொற்சேரி என்றது அறிக.

'கொற்பழுத் தெறியும் வேலர்' என்று வேலும் (435) 'கொற்புனைந்தியற்றிய கொலையமை கூர்வாள்' என்று வாளும் (1.46:89) சிந்தாமணியிலும் பெருங்கதையிலும் வந்தமை அறிக.

இனி, ஆசிரியர் தொல்காப்பியனார்,

"நெல்லும் செல்லும் கொல்லும் சொல்லும்
அல்லது கிளப்பினும் வேற்றுமை இயல"

என்றும், (37)

பவணந்தியார்,

"நெல்லும் செல்லும் கொல்லும் சொல்லும்
அல்வழி யானும் றகர மாகும்"

என்றும் (232) விதி வகுத்தலையும், இவற்றுக்கு உரை கண்டோர் காட்டிய எடுத்துக்காட்டுகளையும் நோக்குக.

"கொல் என்பது சூர் என்றாற்போல, 'கொல்லன்' என்னும் உயர்திணைப் பொருளைக் காட்டி நின்ற அஃறிணைச் சொல் என்று சங்கர நமச்சிவாயரும், முகவை இராமாநுசக் கவிராயரும் நன்னூலின் உரைக்கண் விளக்கியதை உன்னுக.

இவற்றால், கொலைத் தொழில் கொண்டு கொற்கைப் பெயர் பெற்றிருக்க இயலாது என்றும், **கொல்லுத் தொழில் கொண்டே கொற்கைப்பெயர்** பெற்றிருக்க வேண்டும் என்றும் துணிக.

கொல்லுத் தொழில், பயில வழங்கும் தொழிலாயிற்றே, அதன் பெயரால் ஓர் ஊர்ப்பெயர் அமைதல் சாலுமோ எனின், ஆய்ந்து கொள்ளத் தக்கதேயாம்.

அலைவாய்க் கரையில் அமைந்த ஊரெல்லாம் அலைவாய் என்னும் பெயர்க்கு உரியவையாயினும் 'திருச்சீரலைவாய்' எனத் திருச்செந்திலும், அலைக்கரை வாயெல்லாம் ஒலியெழுப்புதல் உண்டு எனினும், 'தரங்கம் பாடி' என ஓர் ஊரும், கடல் முனைக் கோடியெல்லாம் கோடிக்கரை எனினும், 'கோடிக்கரை' என ஓர் இடமும் உளவாதல் போல பலப்பல இடங்களிலும் கொல்லுத் தொழில் நிகழுமாயினும் யாதானும் ஒரு தனிச்சிறப்பு உண்மையால் அத்தொழில் தொடர்பாக ஊரின் பெயர் இடம்பெற்றிருத்தல் வேண்டும் என்க. அவ்வாறு தனிச் சிறப்பாகக் கொல்லுத் தொழில் நடந்ததேயாமாயின், 'அதுதான் யாது' என்பதை அறிவதே, நிறுவும் சான்றாகும்.

பொன்வகை ஐந்தென முந்தையோர் கண்டனர். அவை இரும்பு, ஈயம், செம்பு, தங்கம், வெள்ளி என்பன. அவற்றைக் கொண்டு பணிசெய்வோர் "பொற்கொல்லர்" எனப் பெற்றனர். பொன் செய்கொல்லர்(ன்) எனச் சிலம்பு கூறும் (5:31:20:74) கொல்லுத் தொழில் செய்து கொண்டு கொழுந்தமிழும் வளர்த்த சான்றோர்கள் தங்கால் பொற்கொல்லன் வெண்ணாகனார், மதுரைக் கொல்லன் புல்லன், மதுரைக் கொல்லன் வெண்ணாகனார், மதுரைப் பெருங்கொல்லன் என்பார் என்பது பெயரளவானே புலப்படும்.

படைக்கலம் முதலாம் கருவிகள் செய்தல், அணிகலம் உண்கலம் முதலாம் கலங்கள் செய்தல், தெய்வத் திருவுரு செய்தல் என்பவை சீறூர் பேரூர் இடங்களிலெல்லாம் நடைபெறும் கொல்லுத் தொழில்; ஆனால், இவ்வாறு பொதுமைக் கொல்லு நீங்கிய தனிமைக் கொல்லு ஒன்று உண்டு. அது 'காசு' என்னும் **நாணயம் செய்யும் கொல்லுத் தொழிலாம்.** காவலரால் நிறுவப் பெற்றுக் கட்டுக்காவலுடன் செய்யப் பெறுவது அத்தொழில். அரசர் இருந்து கோன்மை செலுத்தும் கோநகர்க் கண்ணே செய்யப் பெறுவதாம் தொழில் அதுவேயாம். இதனை எந்நாட்டு வரலாறும் தெள்ளிதிற் காட்டுதல் அறிந்ததே!

ஆங்கிலர் ஆட்சிக்காலத்தில் பொற்காசு அடித்த இடம் தங்கசாலைத் தெருவாக இன்றும், சென்னையில் விளங்குதல் கண்கூடு. பண்டை நாளில் தங்கசாலையை **'அக்கசாலை'** (அஃகசாலை) என வழங்கினர். இந்நாளில் இரும்பாலை, செக்காலை, நூற்பாலை என்று விளங்குவன போலத் தங்கசாலை விளங்கியது. தங்க வேலை நடைபெறும் இடத்தை 'அக்கசாலை' என்பது முந்தையோர் வழக்கு.

கோவலன் பொற்கொல்லனை முதற்கண் கண்ட இடத்தைக் குறிக்கும் இளங்கோவடிகளார்.

"கோவலன் சென்றக் குறுமகன் இருக்கையோர்
தேவகோட்டச் சிறையகம் புக்கபின்"

என்றார். இதனை அக்கசாலை என்றார் அரும்பதவுரையார். அக்கசாலைப் பள்ளி என்றார் அடியார்க்கு நல்லார் (19-125-6).

கொற்கை என்பது கொல்லுத்தொழில் சிறக்க நடைபெற்ற இடம் என்பதைச் சுட்டும் என அறிந்தோம். பொற்கொல்லர் வாழும் தெருவும்,

பொன்வேலை நடைபெறும் தெருவும், 'அக்கசாலை' எனப் பெயர் பெறும் என்பதையும் அறிந்தோம். கொற்கையில் கொல்லுத் தொழில் சிறப்பாக நடைபெற்றது என்பதை இச்சொல்லைக்கொண்டு மட்டுமே முடிவு செய்து விடுதலினும், பிற பிற சான்றுகளும் உண்டாயின் வலுவாம் அன்றோ : ஆம்: இதனை நிலைப்படுத்துதற்கு மறுக்கொண்ணாச் சான்றுகள் கொற்கைப் பழநகரில் ஒன்றிரண்டல்ல; பல. இன்றும் உண்மை ஆய்வார்க்குத் தனிப்பெரு மகிழ்வு ஊட்டுவதாம். அவற்றை முறை முறையாய் முழுதுறக் காண்போம்.

கொல்லுத் தொழில் வழியாகப் பெற்ற பெயரே **'கொற்கை'** என்பதை முன்னர்க் கண்டோம். அதனை நிறுவத்தக்க சான்றுகளைக் காண்போம்.

கொற்கையில் விநாயகர் கோயில் ஒன்றுள்ளது. அதனைச் 'சுந்தர விநாயகர் கோயில்' என்று வழங்குகின்றனர். **'அக்கசாலை** விநாயகர் கோயில்' என்னும் பெயரும் அதற்கு உண்டாம்! குளக்கரையில் வளமான வயல்வெளியின் ஊடே அமைந்துள்ள அப்பழங்கோயில் எண்ணற்ற கல்வெட்டுகளைத் தன்னிடத்தே கொண்டு உள்ளது.

திங்களூரில் அப்பூதியடிகள் அமைத்த தண்ணீர்ப் பந்தலில் "திருநாவுக்கரசு எனும் பேர், சந்தமுற வரைந்ததனை எம்மருங்கும் தாம் கண்டார்" என்று சேக்கிழாரடிகள் குறிப்பது போல அக்கசாலைப் பிள்ளையார் கோயிலில் எம்மருங்கும் கல்வெட்டுகள்! முகப்புப் பக்கமா? பின் பக்கமா? இடப்பால் வலப்பால் பக்கங்களா? சுவரின் எழுதப் பகுதியா? எப்பகுதியும் உள்ளன கல்வெட்டுகள்? இவையெல்லாம் படிக்கப் பெற்றனவா? படியெடுக்கப் பெற்றனவா? பதிப்பிக்கப் பெற்றனவா? வரலாற்றுக்கு வளமான குறிப்புகள் இக்கல்வெட்டுகளில் இருக்கும் என்பது உறுதி.

கோயில் வாயிலில் நிற்கிறோம். இதோ... ஒரு கல் பளிச்சிடுகிறது. தெளிவாகப் படிக்குமாறு தீந்தமிழில் அமைந்த கல்வெட்டு; **"மதுரோதைய நல்லூர் அக்கசாலை ஈசுவரமுடையார் கோயில் தானத்திற்காக"** – கல்வெட்டு தொடர்கிறது. கல்லெழுத்தைக் காணும் நாம் அக்கசாலை விநாயகர் என்றும் வழங்கும் பெயரைக் கேட்டுத் திகைக்கிறோம். கல்வெட்டில் **'ஈசுவரர்'** என்று இருக்க **'விநாயகர்** பெயரைக் கேட்டு, விநாயகரே வீற்றிருக்கவும் கண்டால்

திகைப்படையாமல் இருக்க முடியுமா? பிள்ளையாரை 'ஈசுவரர்' என்று வழங்கும் வழக்கம் இல்லையே!

கருவறைக்குள் எழுந்தருளியுள்ள பிள்ளையாரைக் குனிந்து வணங்கிய அளவில் அசையாமல் நிமிர்ந்து பார்க்கிறோம். நிலை வாயிலின் மேற்கல்லில் **'அக்கசாலை ஈசுவரமுடையார்'** என்னும் கல்லெழுத்து விளங்குகிறது; மீண்டும் திகைத்துப் பார்க்கிறோம். "திகைப்புடன் பார்க்கிறீர்களே! என்ன?" என்கிறார் அக்கோயில் அறங்காவலர் திரு.சண்முக சுந்தரனார்.

"இது முன்னே ஈசுவரன் கோயிலாக இருந்திருக்க வேண்டும். பின்னே பிள்ளையார் கோயிலாக மாறியிருக்க வேண்டும்" என்கிறோம். சண்முக சுந்தரனார் வியப்படைந்து, "இதோ ஈசுவரர் இருக்கிறார்" என்று காட்டுகிறார். மூலவரைக் கருவறைக்கு வெளியே தள்ளி, மூத்த பிள்ளையாருக்கு இடந்தந்தவர்கள் மூலவரைக் கோயிலுக்கு வெளியேயே தள்ளிவிடாமல், கருவறைக்கு முன்னே இடப்பக்கத்தில் முருகன் வள்ளி தேவயானை ஆகியோர் வரிசையிலேயாவது வைத்தார்களே என்று அமைதியடைகிறோம். அக்கசாலை ஈசுவரர் கோயில் என்பதன் உண்மை உணர்ந்த உணர்வால் அவ்வீசுவரர் பொன்னார் திருவருளை வியந்து வாழ்த்துகிறோம்.

கோயிலின் முன்னே பெரும் பரப்புடைய குளம் ஒன்று காட்சி வழங்குகின்றது. அது கொடுங்கணி, கொற்கை நிலங்களைப் புரக்கின்றது. நீர் நிரம்பி வழியும் காலத்தே அதனைப் பார்க்க வேண்டும்! பச்சைப்பசேல் என நெல்லும் வாழையும், தென்னையும் இடைவெளியறச் சூழ்ந்து விளங்கும் சூழலின் இடையே, பரந்து கிடக்கும் நீல நீர்ப்பரப்பு எத்தகு எழிற்காட்சி வழங்கும்.

கரைமேல் நின்று காண்கிறோம். குளத்தின் இடையே ஒரு கோயில்! நம் குறிப்பை அறிந்து அன்பர் ஐயாத்துரை 'செழிய நங்கை' கோயில் என்கின்றனர். இது **'செழிய நங்கை கோயில்' 'வெற்றிவேல் அம்மை'** என்று வழங்குவதும் உண்டு என்கிறார். சிலம்பின் மெல்லொலி நம் செவிக்குள் பட்டுச் சிந்தையுள் அள்ளூறி மகிழ்கிறோம்! ஆம்! ஆம்! "கொற்கையில் இருந்த வெற்றிவேற் செழியன்" பெயர் விளக்கும் அம்மை என்பதை எண்ணி இளங்கோவடிகளார் பொன்னடிகளைப் பூரிப்புடன் நினைந்தேத்துகிறோம்.

கோயிலின் முன்னர் உடைந்து கிடக்கும் சிலைகளைக் காண்கிறோம். கடற்பாசியும் சங்கும் பிறவும் கல்லாகிப் போக

அக்கல்லைக் கொண்டே வடித்த சிலைகள், உடைந்து கிடக்கின்றன. அவை பேணுவாரற்று, கோயிலின் உள்ளேயும் இருக்க வகையற்று, வெளியில் கிடப்பதைப் பார்த்துத் துன்புறுகிறோம். ஒரு முலை இழந்த திருமா பத்தினி சிலையொன்று முன்னே உடைந்து கிடந்த செய்தியை உள்ளூர் அன்பர்கள் உரைக்கின்றனர். நெக்குருகுகின்றனர். "படைக்கத் திறம்கெட்ட கைகள், உடைத்துக் கெடுக்கின்றனவே! இவற்றைத் தடுத்துப் போற்றிக் காக்கவும் நாடு திறனற்றுப் போயிற்றே" என்று நோகின்றோம்.

கோயில் சூழலைப் பார்க்கிறோம். சூழலெல்லாம் பழங்கட்டடப் பகுதிகள்! கட்டடச் சான்றுகள், பெரிய பெரிய செங்கல் தளங்கள்! ஆழத்தில் பதிந்து கிடக்கும் சுவர்கள்! இவையெல்லாம் அக்கசாலைத் தெருக்கள். பதின்மூன்று தெருக்கள் இங்கு இருந்தனவென்று செவிவழிச் செய்தி என்கிறார் அன்பர் சண்முக சுந்தரம். அக்கசாலை ஈசுவரர் கோயிலுக்கு முன்னுள்ள பரப்பைப் பார்த்து 'இருக்கலாம் இருக்கலாம்' என ஏற்கிறோம். அப்பொழுது குளத்தின் வடபாற்கரையோரம் உள்ள ஊரைக் காண்கிறோம். அதன் பெயரை வினாவுகிறோம். **'அக்காசாலை'** என்கிறார்கள். அக்கசாலை அக்காசாலை யாகியதை உணர்கிறோம். நமக்குப் பட்டொளி வீசிப் பறப்பதுபோல உணர்வு ஏற்படுகின்றது. "அந்தோ! பழந்தமிழ்க் கொற்கையே, பாராண்ட கொற்கையே! முத்துப்படு பரப்பின் கொற்கையே, முன்னைப் பழமைக்கும் முன்னைப் பழமையாய் மூத்த கொற்கையே! உலக நாகரிகத்தின் உயர் பெருந்தொட்டிலே! கடல் மகள் கவின் முகமே! வாணிகத்தின் வைப்பகமே! காலத்தின் கோலத்தால் உன் நிலைமை இருந்தவாறு என்னே! என்னே! இந்நாட்டவர் நிலைமைதான் இருந்தவாறு என்னே! என்னே !" என ஏங்குகிறோம்.

"ஏக்கம் மாறாத நிலையில் நாம் நிற்க நம் கையை அன்பர் நாராயணர் பற்றுகிறார். தென்பக்கம் அழைத்துச் செல்கிறார். குளத்தின் தெற்குக் கோடிக்கே கொண்டு செல்கிறாரே! அங்கே கோயில் ஒன்று இருந்த சான்றைக் காண்கிறோம்; ஈசுவரர் பீடம் கிடக்கிறது; கோயிலும் அதன் சுற்றும் இல்லை! ஆனால் அவற்றின் அடித்தளம் புதையுண்ட சான்றாகப் புலப்படுகின்றது. "இதன் பெயர்" என்னுமுன், 'தென்னகேசர் கோயில்' என்கிறார் நாராயணர். நம் உள்ளத்தில் ஒண்டமிழ்

ஒளியூட்டுகின்றது. **'தென் அக்கஈசுவரர் கோயில்'** என்பது புரிகிறதா, என்கிறது 'தென்னகேசுவரர் கோயில்'.

மேற்கே அக்கசாலை ஈசுவரர் கோயில்; வடக்கே அக்கசாலை என்னும் ஊர்; தெற்கே, தென்னகேசுவரர் கோயில்; ஊடே அக்கசாலைத் தெருக்களின் அடித்தளம்; கிழக்கே செழிய நங்கை என்னும் வெற்றிவேலம்மை கோயில்! இவற்றையெல்லாம் இணைத்துப் பார்த்ததும் 'இன்னும் ஐயம் என்ன' எனத் தெளிவு பெறுகிறோம். பழங்காலப் பாண்டியர்கள் நாணயம் அடித்த அக்கசாலை இதுவே என்றும், அக்கொல்லுத் தொழிலால் சிறப்புற்ற கொற்கை இதுவே என்றும் முடிவு செய்கின்றோம். நம் முன்னோர் ஊர்களுக்குப் பெயர் வைத்த பெருமையும், அப்பெயர்க் கரணியமும் அறிய முடியாமல் தடம் மறைந்து போன காலக்கேட்டையும் எண்ணுகிறோம். இப்பொழுதில் 'அக்கசாலை ஈசுவரர் கோயிலில் **பொற்கொல்லரே வழி வழியாக அறங்காவலராக இருந்து வருகின்றனர்**" என்னும் செய்தியையும் கேள்விப்பட்டு, அறங்காவலர் சண்முக சுந்தரத்தைப் பார்க்கிறோம். "ஆம் உண்மைதான்! நான் பொற்கொல்லர் குடிவழியைச் சேர்ந்தவனே; ஏரலில் காசுக்கடை வைத்துள்ளேன்" என்கிறார். அதே மூச்சில், "இவ்வக்கசாலையில் இருந்து திருநெல்வேலிக்குக் குடிபெயர்ந்து போயுள்ள பொற்கொல்லர்கள், தம் பண்டையரை மறவாராய் **அக்கசாலைத் தெரு என ஒரு தெருவைத்** திருநெல்வேலியில் அமைத்துக் கொண்டு வாழ்கின்றனர்; அத்தெரு தொண்டை நாயனார் கோயிலின் வடக்கில் உள்ளது என்று மொழிகிறார். வள்ளிக்கிழங்கு எடுக்கப்போன ஒருவன் கையில், வயிரமும் மணியும் முத்தும் வளமாகக் கிடைத்தது போல மகிழ்கின்றோம்.

அறிஞர் அ.இராகவன் அவர்கள் எழுதிய 'கோநகர்–கொற்கை' என்னும் நூலைத் திருப்புகிறோம். (கொற்கை) "அஃகசாலையில் பொன் வெள்ளி செம்புக் காசுகள் பல அச்சிடப்பட்டு வந்தன. இந்த அஃகசாலையில் உருவாக்கப்பட்ட காசுகள் பல என்னிடம் உள்ளன" என்று உரைப்பதுடன், 91 காசுகளை இருபக்கமும் புலப்பட அச்சிட்டும் காட்டியுள்ள அருமையையும் காண்கிறோம். கைம்மேல், கிடைத்த கனியெனச் சான்றுண்மை கண்டு களிகூர்கின்றோம்!

"தத்துநீர் வரைப்பிற் கொற்கை",
"முத்துப்படு பரப்பிற் கொற்கை",

"பாண்டியன் புகழ்மலி சிறப்பிற் கொற்கை",
"நற்றேர் வழுதி கொற்கை",
"மறப்போர்ப் பாண்டியர் அறத்திற் காக்கும் கொற்கை",
"பேரிசைக் கொற்கை",
"கனிகெழு கொற்கை",

எனச் சங்கச் சான்றோரொடும் கூடி நின்று பாடுகிறோம்.

கொற்கையில் ஒரு வன்னிமரத்தைக் காண்கிறோம். மதுரையில், புகழ் வாய்ந்த வன்னிமரம் உண்டு! வன்னியடி விநாயகர் ஆங்கு வீற்றிருக்கின்றார். வன்னியும் கிணறும் இலிங்கமும் வரவழைத்த திருவிளையாடலொடு அதனைத் தொடர்புபடுத்திக் கூறுகின்றனர். ஆனால் கொற்கை வன்னியின் பழைமையை அறுதியிட்டுரைக்க மரநூல் வல்லார்க்கே இயல்வதாம்.

கொற்கை வன்னி, சில ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்த சீர்மை, அதன் தோற்றத்திலேயே புலப்படுகிறது. நிலத்தொடு நிலமாய்ப் படிந்து நெடிமுடியண்ணலெனக் கிடந்து, நிமிர்ந்தோங்கிப் பசுமைக்கோலம் காட்டும் அதன் அருமை, பார்ப்பவர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும்! உள்ளீடற்ற கூடென அடிமரம் பட்டையொடு கிடப்பினும் அது வழங்கும் வளமைக்காட்சி காண்பாரை வயப்படுத்த வல்லதாம்!

"கொற்கை வன்னி, குரங்கணி ஆல் ஆழ்வார் திருநகரிப்புளி" என வழங்கும் பழமொழியைக் கொற்கை அன்பர்கள் கூறுகின்றனர். மேலைத் தொடர் சார்ந்த குரங்கணியோ என நாம் நினைக்க இடம் வைக்காமல், 'குரங்கணி கொற்கை சார்ந்ததோர் ஊர்' என்பதையும் சுட்டுகின்றனர்.

வன்னிமரச் சூழலைப் பார்க்கிறோம். அதன் அருகில் 6X6 அடி அளவில் ஒரு செங்கல் தளம் தன் பழைமை காட்டிக் கொண்டு உள்ளது. அதன் பக்கத்தில் கொற்கைக் காசுகளில் காணப்படுகின்ற 'காவடி தூக்கும் வானர' வடிவச் சிலை ஒன்றுள்ளது! அதுவும் பீடமின்றி நிலத்தின் மட்டத்திலேயே உள்ளது.

கொற்கை வன்னிக்கு நேர் வடக்கில் 7, 8 மீட்டர் தொலைவில் 'முழுமதி முக்குடை அச்சுதன்' அமர்ந்த கோலத்தில் அருமையாய்க் காட்சி வழங்குகிறார். இதுகாறும் ஏற்பட்டுள்ள சிதைவுகளுக்கெல்லாம் ஈடுதந்து,

சிதையாத சீரிளமையுடன் செம்மாந்து வீற்றிருக்கும் அப் பெருமகனார் திருவுருவம் நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்கிறது! அப்படியே அவர் அழகை அள்ளிப் பருகுவார் போல அமைந்து நிற்கிறோம்! சிற்பத் திறனை வியப்பதா? அதன் பழைமையை வியப்பதா?

அறிவர் அமர்ந்துள்ள அழகுக்கோலம் நிலத்தின் மட்டத்தில் உள்ளது. அவர் அமர்ந்துள்ள பீடத்தை அகழ்ந்துதான் காணவேண்டும். அது, புதைந்து மண் மேடிட்டுப் போயுள்ளது நன்கு தெரிகின்றது! "1971இல் அங்கு அகழ்வு செய்யப்பெற்றது என்பதையும், அசோகர் காலத்துப் பிராமி எழுத்து அமைந்த தாழி ஒன்று அகப்பட்டது என்பதையும்" அன்பர்கள் உரைக்கின்றனர். கொற்கைப் பழமைக்கு இவ்வன்னியும் இம்முக்குடைச் செல்வரும் செவ்விய சான்றுகள் என்று நாம் நினைக்கும் போதே கொற்கைத் தமிழ்மன்றத் தலைவர் திரு.சிவசங்கு அவர்களும், செயலாளர் புலவர் திரு.ஐயாத்துரை அவர்களும் அச்சிடப்பெற்ற அறிக்கை ஒன்றை நம் கையில் சேர்க்கின்றனர்.

கொற்கை மண்ணின் கொழுமணம் அவர்கள் கொடுத்த அறிக்கையில் மிளிர்கின்றது. இலக்கியத்தாலும், வரலாற்றாலும், உலகைவலம் வந்த பெருமக்கள் குறித்து வைத்த குறிப்புகளாலும் அறியப்பெறும் செய்திகளையெல்லாம் ஒருங்கு தொகுத்துரைக்கும் அவ்வறிக்கையைக் கண்டு களிப்படைகிறோம். தொல்பொருள் ஆய்வாளர் செய்த அகழ்வு ஆய்வு, கொற்கையைச் சூழ்ந்துள்ள ஊர்கள் ஆகியவற்றையும் அறிகிறோம்.

கொற்கைத் துறையின் காவல் கடவுளராக விளங்கிய துறையப்பர் கோயில் கொண்டுள்ள அகரம்!

அறிவன் அமர்ந்து அருளுரை வழங்கிய அறிவன் புரமாகிய அரியபுரம்!

இத்தாலி நாட்டில் இருந்து சுற்றுலாக் கொண்டு வந்த மார்க்கபோலோ இறங்கிய பழைய காயல்!

சங்கப் பெண்பாற் புலவருள் ஒருவராகிய நப்பசலையார் தோன்றிய மாறோகம் ஆகிய மாறன் மங்கலம்! தொல்காப்பிய உரையாசிரியராகிய சேனாவரையர் விளங்கிய ஆற்றூர்!

பழங்காலக் காட்டரணாக விளங்கிய இடைக்காடு, காவற்காடு, கோவன்காடு, குமரிக்காடு, தெக்காடு கோட்டைக்காடு! ஏமமாக

(பாதுகாப்பாக) அமைந்த ஏமராசன் கோயில்! ஊர்க்காவல் கடனேற்ற ஊர்காத்த பெருமாள் கோயில்! கோட்டைக்காவல் கடனேற்ற கோட்டாளமுத்து கோயில்! தென்னெல்லைக் கோட்டையாக விளங்கிய தென்பேரெயில் என்னும் தென்திருப்பேரை!

பாண்டியனின் சிறுபடைப் பிரிவின் தங்கலாக இருந்த சிறுத்தண்டநல்லூர் என்னும் சிறுத்தொண்டநல்லூர்!

அவன் பெரும்படைப் பிரிவின் தங்கலாக இருந்த பெரும்கடை, பெரும்படைச் சாத்தன் கோயில்! தவசக் கிடங்காக (கொட்டாரமாக) இருந்த கொட்டாரக்குறிச்சி!

குற்றவாளிகளைக் கழுவில் ஏற்றுதற்கு இடமாக இருந்த கழுவன் தீரடு!

சங்கு-கிளிஞ்சில்-என்னும் பெயரே தன்பெயராய் எழிலுடன் விளங்கும் ஏரல்!

இத்தகு பெயரிய பெருமைமிக்க ஊர்களை நினைத்து வியப்படைகிறோம்!

கொற்கைப் பழைமைக்கு இன்னும் சான்று வேண்டுமோ எனப் பூரிக்கிறோம்! அப்பூரிப்பின் இடையே எண்ணற்ற எண்ணங்கள் பொங்கி வழிகின்றன!

உலகறிந்த கொற்கையை ஊரும் அறியாமல் செய்து கொண்டிருப்பது எத்தகைய கொடுமை!

நேற்றை நிகழ்ச்சியை 'வாணம்' விட்டுக் காட்டிக் கொண்டிருக்கும் வையகத்தில், தொன்முது நாகரிகத்தொட்டிலைப் பற்றி நாம் சொல்லளவில் கூட வெளிப்படுத்தவில்லையே!

சுற்றுலாத்துறையும் அகழ்வாய்வுத்துறையும் தொல்பொருள் ஆய்ஞரும் இருந்தும்-இப்பழங் கொற்கையைப் புறக்கணித்துக் கொண்டிருக்க இந்த இருபத்தொன்றாம் நூற்றாண்டிலும் எப்படித்தான் எண்ணம் வருகின்றதோ?

அக்கசாலை ஈசுவரர் கோயிலுக்கு முன்னே இருக்கும் வளமான குளத்தில் படகுத்துறையமைத்துச் செழியநங்கை கோயிலைச் சூழ நீராழி மண்டபம் அமைத்து சுற்றுலா மையமாக்கிவிட்டால் முழுமதி எழிலுற

விளங்கும் நாளில் அவ்வெள்ளி நீர் உருக்கின் மேல் ஓடம்விட்டால் போட்டதொகையையும் கூடப், போகவிடாமல் ஒன்றுக்கு இரண்டாய் அள்ளிக் கொண்டிருக்கலாமே!

பூம்புகார்ப் பெருமையைப் புதிய அமைப்பாய் உருவாக்கிப் புகழ்செய்த அரசு, பழங்கொற்கைப் பகுதியை எளிய முயற்சியால் பெரிய பயன் கொள்ளக் கருதவில்லையே!

அறிவனார் அழகுத் திருமேனியைக் கண்ணாரக் கண்டும் அகழ்வாய்வு மேற்கொண்டும், பழந்தடயங்கள் பற்பல எடுத்தும் தொல்பொருள் துறை அயர்ந்து போய் அமைந்து விட்டதே!

பழங்கொற்கை புதுப்பொலிவு பெறுவதாக!

❖❖❖

8. கோவலன் பெற்ற விருதுகள்

எந்தக் கோவலன்? சிலப்பதிகாரக் கோவலன் தானா அவன்?

ஆம் அவனே தான்!

அவன் போற்றா ஒழுக்கம் புரிந்தவன் தான்!

கண்ணகியைப் போற்றாமல், தாய் தந்தையைப்

போற்றாமல், மாமன் மாமியரைப் போற்றாமல்,

மாதவியைப் போற்றித் திரிந்து பல்லாண்டுகள் பிரிந்தவன் தான்!

இடையே வந்தானா? போனானா? எதுவும் நாமறிய வாய்ப்பு இல்லை!

கண்ணகியாரிடம் அவனே ஒருமுறைக்கு இருமுறை தன் குற்றத்தைத் தானே கூறுகிறான்.

முதல்முறை, மாதவியாரைப் பிரிந்து வந்து கண்ணகியாரைக் கண்டபோது.

இரண்டாம் முறை, மதுரை மாநகரில் சிலம்பு விற்கப் போகும் போது!

முதல்முறையில் வருந்திய அவனைப் புன்முறுவலோடு தான் பார்த்தார்! எழுக என்றதும் எழுந்தார் மதுரைக்கு!

'சிலம்புள கொண்ம்' என்றும் அவரே வழிகாட்டினார்.

இரண்டாம் முறையில் அவன் தன் குறையை விரிய விரியக் கூறியபோதும் தமக்கெனக் கூறாமல் பெற்றோர் "உள்ளகம் வருந்தப் போற்றா ஒழுக்கம்" புரிந்ததைக் கூறினார். தாம் மாற்றா உள்ள வாழ்வு கொண்டமையால் உடனே ஒருப்பட்டு எழுந்ததாகக் கூறினார். போற்றா ஒழுக்கம் என்பது என்ன?

போற்றுதல் என்பது கூடிய நேயத்தரைப் பிரியாது இருத்தல் என்பதே. ஆதலால் போற்றா ஒழுக்கம் உடனிராமல் பிரிந்தது என்பதே! இப்பொருள் எப்படிக் கொள்ளலாம். சிலம்புக்கு முந்திய கலித்தொகை,

"போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை" என்று பொருள் பொருந்தக் கூறுவது இவண் கொள்ளலாம்.

குற்றம் செய்தவன் உணர்கிறான்! உரைக்கிறான்!

தன் சிறுமைகளைப் பட்டியல் இடுகிறான் அவனே!

தன்குற்றம் உணர்வான், தன் குற்றம் தானே உரைப்பான், பொறுத்துக்கொள்ள மன்றாடுவான் குற்றத்திற்குக் கழுவாய் தேடியவன் அல்லனோ! தடித்த இயல்பனிடம் தணிவும் பணிவும் வருமா?

'போற்றா ஒழுக்கம் புரிந்தீர்' என்பது விருதா?

அவன் விருது, அடைக்கலக் காதையிலே மாடலன் வாக்காக அடிகள் வழங்குகிறார்.

கள்வன் அல்லன் கோவலன் என்பதைக் கண்ணகியார் நிறுவு முன்னரே, கோவலன் மாண்பை உரைப்பது மாடலன் சொல்! அடிகளாரின் அரிய உத்தி அது! திருடன் அல்லன் கோவலன் என்பதையன்றித் **தீயனும் அல்லன்**; பெருந்தகை வாழ்வன்; வண்மை மிக்கான்; அருளாளன்; எவர்க்கும் முன்னுற ஓடி ஓடி உதவும் உரவோன்! என்பதை நிலைநாட்டக் குறுகுறு நடக்கும் சிறுநடைச் சீரடியால் கூறுகிறார்.

'கருணை மறவன்'

'செல்லாச் செல்வன்'

'இல்லோர் செம்மல்'

என்பவை அவை.

பூம்புகாரில் வாழ்ந்த நாளில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் மூன்றனைக் கூறி ஒவ்வொன்றன் நிறைவிலும் இவ்விருதுகளை வழங்குகிறார். மணிமேகலைக்குப் பெயர் சூட்டுவிழா!

வேண்டுவார் வேண்டுவ பெற உதவுகிறான் கோவலன். முதியன்; வேதியன்; தண்டூன்றித் தளர் நடையிட்டுக் கொடையைப் பெற வருகிறான்!

பாகனுக்கு அடங்காமல் பாய்ந்துவரும் யானை! பற்றுகிறது முதியனை! கோவலன் பற்றுகிறான் யானையின் கையை! முதியனை விடுவித்துத் தான் அக்கையைத் திருகி அடக்கிக் கொம்பைப் பற்றிப் பிடரில் ஏறுகிறான்!

கருணையாம் அருள் இல்லையேல், முதியனைக் காக்க விரைவனா? வாங்கிச் செல்ல வந்த கூட்டத்திடையே எவருக்கும் வாராத இரக்கம் கோவலனுக்கு வந்ததே! அவன் தவிர்த்து எவரும் இலரா? ஆம்!

அவன் தவிர்த்துப் பலர் இருந்தாலும் அருளிரக்கம் இருந்தாலும் துணிந்து செல்லும் வீறு இலர் அவர்! **அருள் மட்டும் போதாது!** வெல்லுதற்கு அரிய **வீரமும் வேண்டும்!** இரண்டும் ஒருங்கே இருந்தமையால் கோவலன் **'கருணை மறவன்'** எனப்பட்டான்.

ஒரு பெண்மணி; குழந்தையைத் தொட்டிலில் இட்டு விட்டுக் குடம் கொண்டு, தண்ணீர் எடுக்கச் சென்றாள்! குழந்தையைக் காக்கக் கீரி ஒன்றும் இருந்தது அவளிடம்! எப்பொழுதும் குழந்தைக்குக் காவலன் போல இருந்தது. பாம்பு ஒன்று தொட்டிலை நோக்கி வந்தது; கீரி, விடுமா? பற்றிப் பிடித்துக் கடித்துக் குதறியது! பகையழித்த மகிழ்வில், நங்கை வருவழி நோக்கி வாயில் பக்கம் வந்தது. அதன் வாயிலும் கழுத்திலும் குருதிக்கறை! பெற்றதாய்க்குக், குழந்தையைத் தான் கீரிகொன்றுவிட்டது என்ற அதிர்ச்சி! இடுப்பில் இருந்த குடத்தைவிட்டாள்! கீரியின் தலையில் பட்டுச் செத்தே போனது!

உள்ளே போனால், தொட்டிலில் குழந்தை அமைந்து உறங்கிக் கொண்டிருக்கக் கண்டாள்; பாம்பு கடியுண்டு கிடப்பதும் கண்டாள்! தன் தலையிலே அடித்துக் கொண்டு செய்யாதது செய்த சிறுமையை எண்ணி நைந்தாள்!

வெளியே இருந்து வீட்டுக்கு வந்த வேதியன் 'கொலைகாரி' தன் மனைவி என எண்ணினான்! இப்பாவம் தொலையாமல் இங்கிரேன் என வெளியேறிவிட்டான். ஓர் ஏட்டை எடுத்துக் "கொலைக்குக் கழுவாய் செய்தலை, யாரைக் கொண்டேனும் செய்" எனப் போய்விட்டான்! அவள் நகரோரிடம் முறையிட்டாள்!

கோவலன் தவிர எவரும் இலரா? கோவலனே முன் வந்தான்! வடமொழி வாசகம் அறிந்தானிடம் காட்டிக் கழுவாய் அனைத்தும் செய்ததொடு, போன வேதியன் வீடு திரும்புமாறும் வேண்டுவ செய்தான்! ஏன் அவளுக்கு அல்லது அவன் கணவனாம் அவனுக்கு உற்றார் உறவே இல்லையா? அள்ளி அள்ளி அறம் செய்து அக்குடும்பத்துயரை அகற்றினான் கோவலன்! அதனால், "செல்லாச்செல்வன்" எனப்பட்டான்.

அவன் என்ன செல்லாச் செல்வனா?

"குலந்தரு வான்பொருட் குன்றந் தொலைந்த
இலம்பாடு நாணுத் தரும்"

என்று தன் முன்னோர் தந்த பொருளையும் மலைபோல் இருந்ததையும் இழந்தமை நாணமாம் என்றல்லவோ சொல்கிறான்!

ஒருவேளை மணிமேகலை பிறப்புக்கும் – பெயர் சூட்டுக்கும் வழங்கியே வறியன் ஆகிவிட்டானா? செல்லாச் செல்வன் என்கிறாரே! தொலையாச் செல்வ என்கிறாரே அரும்சொல் உரையார்; அதை வழிமொழிகிறாரே அடியார்க்கு நல்லார்! அவன் செல்வத்தால் அழியாச் செல்வன் என உயிர்க்கு ஊதியமாம் செல்வத்தைப் பெற்றான் என்பதை,

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு"

என்பதால் அறியலாமே! அழியும் செல்வம் செல்லாச் செல்வம் அன்று! ஒன்றா உலகத்து உயர்ந்த புகழ்ச் செல்வம் பெற்றமை, அழிவது கொண்டு அழியாமை பெற்றதால் செல்லாச் செல்வன் எனப்பட்டான்! பொய்யன் ஒருவன்! நல்லவள் ஒருத்தியை அவள் கணவனிடமே பழிகூறினான்! அந்தப் பாவியும் நம்பினான்! பொய்ச்சான்று சொல்வானைப் புடைத்துக் கொல்லும் பூதம் ஒன்று பூம்புகாரில் உண்டாம்! அது அப்பொய்யனைப் பற்றிக் கொல்லப்போக, அப்பொய்யன் தாய் புலம்பி அழுதாள்! ஊரைக் கூட்டிவிட்டாள்! கோவலன் என்ன என்று கேட்டு அறிந்தான்! அப்பொய்யன் தாயின் துயரைத் தாங்க மாட்டானாய்க் கோவலன் பேயினிடம் போய் இவனுக்குத் தரும் தண்டனையை எனக்குத்தா இவனை விடு" என்றான்.

அறங்கூற வல்ல அப்பேய்,

"நரகன் உயிர்க்கு நல்லுயிர் கொண்டு
பரகதி இழக்கும் பண்புஈங் கில்லை"

என்று சொல்லிக் கோவலன் முன்னாலேயே பொய்யனைப் புடைத்தது! கோவலன் அவ்வளவில் கையைப் பிசைந்து கொண்டு நின்றானா?

அவன் தாய்க்கும் உற்றார் உறவுக்கும் தானே காவல் கடவுள் போல வேண்டுவவெல்லாம் செய்து இல்லோர் செம்மல் எனப்பட்டான்.

"வறியோர் தலைவன்" என்பார் அரும்சொல் உரையார். அவரே "இல்லறத்தார் தலைவ" என்றுமாம் என்கிறாரே!

இல்வாழ்வார் கடன், "துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும், இல்வாழ்வான் என்பான் துணை" என்றும் இல்லறப் பேணற் குறளை நினைவில் கொண்டு வரவில்லையா? இருந்தும் இல்லாமலும் இருக்கும் நிலையா, செம்மல்? செம்மல் செறிந்து இடையீடு இன்றிக் கிடக்கும் இயல்பு அல்லவா!

தூய துறவர் இளங்கோவடிகள் சொல்லால்
இவ்விருது கிடைக்கப் பெற்ற கோவலன் பேறு
ஒரு வகையால் **பெரும்பேறேயாம்!**

❖❖❖

9. குற்றம் உணரும் குணம்

தம் குற்றம் உணர்வார் அரியர்; அறியவல்லார் பெரியர்!
நற்குணங்களுக்கு உரியரும் அவர்.

அந்நாள் முறையில் பன்மணமுறையும், வைப்புமுறையும் பெருக இருந்தமை பிரிவுகளில் ஒன்றாகப் பரத்தையிற் பிரிவு கூறியது புலப்படுத்தும். வேந்தர், செல்வர் மனைவியர் ஒருவரே எனல் எண்ணித்தான் பார்க்கவேண்டும்.

கோவலன் மாதவியிடம் சேர்ந்தமை குற்றமாக அந்நாளில் கருதினார் அல்லர். மாதவியைப் பிரிந்ததும் பிறர்க்குக் குற்றமாகத் தோன்றுதல் இல்லை. ஆனால் மாதவியைக் குற்றம் காட்டித் தான் குணவான் போலப் பழித்தமையும் பிரிந்து வந்தமையும் குற்றமேயாம் என்பதை அவன் பின்னே உணர்கின்றான்.

கோசிகமணி என்பான் வழியாகக் கடிதம் கண்ட கோவலன் அக்கடிதத்தையே தான் தன் பெற்றோர்க்கு விடுத்தது அவள் குற்றமற்றவள்; தானே குற்றவாளன் என்பதை ஒப்பியதாம்! அன்றியும்,

"தன்தீது இலனெனத் தளர்ச்சி நீங்கி
என்தீது என்றே எய்தியது உணர்'ந்தான்!

இவ்விடம் ஒன்றுமட்டுமா? கவுந்தியடிகளிடம்,

"நெறியின் நீங்கியோர் நீர்மையேன் ஆகி
நறுமலர் மேனி நடுங்குதுயர் எய்த
அறியாத் தேயத் தாரிடை யுழந்து
சிறுமை யுற்றேன்" (14:17-20)

என்று தன் குறையுணர்ந்து பணிந்துருகி மொழிகின்றான். கண்ணகியாரிடம்,

'வறுமொழி யாளரொடு வம்பப் பரத்தரொடு
குறுமொழிக் கோட்டி நெடுநகை புக்குப்
பொச்சாப்பு உண்டு பொருளுரை யாளர்
நச்சுக் கொன்றேற்கு நன்னெறி யுண்டோ?

இருமுது குரவர் ஏவலும் பிழைத்தேன்
சிறுமுதுக் குறைவிக்குச் சிறுமையும் செய்தேன்
வழுவெனும் பாரேன்"

எனக் கனிந்துருகி மொழிகின்றான்!

இவ்வாறு தம் குற்றம் உணர்வார் மாந்த நிலையில் ஓங்கிய பண்பினராம்!

தேவியின் காற்சிலம்பு நீ கூறிய கள்வன் கையகத்தது எனின்

"கொன்றச் சிலம்பு கொணர்க"

என்று அறங்காக்க வேண்டிய அரசன் பெரும்பழி செய்தவனே!

ஆனால்,

'தேரா மன்னா'

என்று கூறி நிற்கும் ஒருத்தியைக் குற்றமாக நோக்காமல் அவள் கூறுதற்குரிய செவ்வியும் – செவியும் – தந்து

"தேமொழி உரைத்தது செவ்வை நன்மொழி
யாமுடைச் சிலம்பு முத்துடை அரியே"

என்று முடிமன்னன் ஒருவன்வாய் மொழியுமா? உடனே சிலம்பை வருவித்துக் குற்றம் சாற்றியவரிடமே அச்சிலம்பை ஒப்படைத்து உண்மை அறிய ஒவ்வுமா?

உடைத்த சிலம்பில் மணியைக் கண்டு உடனே,

"யானோ அரசன் யானே கள்வன்
கெடுக என் ஆயுள்"

என்று தனக்குத் தானே தண்டனை தந்து கொள்வானா?

"இழைத்த திகவாமைச் சாவாரை யாரே
பிழைத்தது ஒறுக்கிற் பவர்"

என்பது வள்ளுவ மாணறம் ஆயிற்றே!

பாண்டியன் இழைத்த குற்றத்திற்கு அவனே உணர்ந்து தன்னைப் பலியிட்டுக் கொண்டதும், தேவி வீழ்ந்து அவனொடு தொடர்ந்ததும் கண்ணாரக் கண்டும் வஞ்சினம் கொள்ளலும் ஊரை அழற்படுத்தலும் தகும் செயலா? தான்படு துயர்க்காக எரியுண்ணச் செய்தல் நடுவுநெறி என உலகம் கொள்ளுமா?

ஆனால் அவரே உணர்ந்து தாம் செய்ததற்கு வருந்தித்

"தீத்தொழி லாட்டியேன்"

என்று வேலான் குன்றில் வேங்கையின் கீழ் நின்று உரைத்தது அவர் குற்றம் உணர்ந்தது அல்லவா! அவரே,

"தென்னவன் தீதிலன் தேவர்கோன் தன்கோயில்
நல்விருந்து ஆயினான் நானவன் தன்மகள்"

என்று செங்குட்டுவர்க்குச் சொல்வாரா?

வஞ்சி மகளிர்,

"தென்னவன் தன்மகளைப் பாடுதும் வம் எல்லாம்"

என்று பாடும் சிறப்பு, குற்றம் உணர்ந்த குணத்தின் சிறப்புத்தானே!

தம் குற்றம் நோக்கவே நோக்காமல் பிறர் குற்றமே நோக்கி அதனைப் பருக்க வைத்து விண்ணில் புடைப்பானாய்ப் பருக்கவிடும் அரசியலாரும் அறிவாளியரும் பொதுமக்களும் தீராக் கேடாக நலிந்துவரும் காலநிலையில், சிலம்பில் வரும் இம் முப்பெருங் காட்சிகள் எவ்வளவு அரியவை.

குடிநலன் காப்பார் கோவல கண்ணகியர் போல்

தம் குற்றம் உணர்ந்து திருந்துவரா?

ஆட்சிக் கட்டிலில் உள்ளார் மனச் சான்று கொண்டு தங்கள் கொலை கொள்ளை கொடுவினை ஆகியவற்றை விட்டொழித்துத் தாம் இருக்கும் இருக்கைக்கும் கொள்ளும் பதவிக்கும், ஆளும் ஆட்சிக்கும் பெருமை சிறிதாவது உண்டாகச் செயல்படுவரா?

ஏங்குதற்காகவா இலக்கியம்?

ஏற்பதற்காகவா இலக்கியம்?

❖❖❖

10. ஊடகன்

செங்குட்டுவன் தன் பரிவாரம் சூழ நெடுவேலான் குன்றம் எய்தினான். அவனுடன் தேவியும், இளங்கோவடிகளும் மதுரைச் சாத்தரும் இருந்தனர்.

குன்றக்குறவர் செங்குட்டுவனை வணங்கிப் பரிசுகள் பற்பல வழங்கினர்.

மலைவேங்கை மரநிழலில் நின்ற கண்ணகியாரை, யாவிரோ? என அவர்கள் வினவியதையும்,

"மணமதுரையோ டரசுகேடுற வல்வினைவந் துருத்தகாலைக்
கணவனையங் கீழந்துபோந்த கடுவினையேன் யானென்றாள்"

என்றதையும் நாடாள் வேந்தனிடம் உரைத்தனர்.

வானவர் மலர்பொழிந்து விண்ணகம் கொண்டு சென்றதையும் உரைத்தனர். அவர்களே,

"எந்நாட் டாள்கொல் யார்மகள் கொல்லோ
நின்னாட் டாங்கண் நினைப்பினும் அறியேம்"

என வினாவினர்.

ஆங்குநின்ற சாத்தனார் மதுரையார் ஆதலால்,

ஒண்டொடி மாதர்க் குற்றதை யெல்லாம்
தின்டிறல் வேந்தே செப்பக் கேளாய்

எனத் தொடங்கி மதுரை நிகழ்ச்சிகளைக் கூறினார்.

சிலம்பால் கோவலன் கொலை, கண்ணகி வழக்குரை, மன்னனும் தேவியும் ஒருங்கே இறத்தல் ஆயவற்றைச் சொல்லி,

"கொற்ற வேந்தன் கொடுங்கோல் தன்மை
இற்றெனக் காட்டி இறைக்குரைப் பனள்போல்
தன்னாட் டாங்கண் தனிமையில் செல்லாள்
நின்னாட் டகவயின் அடைந்தனள் நங்கை"

என்று தாம் அறிந்த செய்திகளை உரைத்தார்.

மதுரை நிகழ்வுதான் கோவல கண்ணகியர் செய்தியா? மற்றவையெல்லாம் இளங்கோவும் பிறரும் அறிய வாய்த்த வாய்ப்பாக – கதைப் பரப்பாளியாக – ஒருவன் சிலம்பில் இடம் பெறுகிறான். அவன் 'மாடலன்' என்பான்.

மாடலன் மறையோன்; தலைச்சங்காடு என்னும் ஊரினன்; இமயம் தொட்டுக் குமரிவரை 'யாத்திரை' செல்பவன். அவன் வழியாகவே சிலப்பதிகாரக்கதை கிடைக்க வாய்த்ததாம். கொலைப் பகுதியொடு தலைப்பகுதியும் கடைப்பகுதியும் அறிந்தவன் அவனே. இளங்கோவடிகள் அவனைக் கொண்டே கதையைப் பெரிதும் நகர்த்துகிறார்.

கோவல கண்ணகியர் கவுந்தியடிகள் துணையொடு மதுரையைச் சார்ந்த புறஞ்சேரியில் தங்கியுள்ளனர். குமரிக்குச் சென்று ஆங்கிருந்து வடபால் மீளும் மாடலன் கவுந்தியடிகள் இருந்த புறஞ்சேரிப்பகுதியை அடைந்து வழி நடந்த களைப்பை ஆற்றச் செல்கிறான். ஆங்குக் கோவலனைக் காண்கின்றான். கோவலன் மாடலனை அறிந்தவன் ஆதலால் அவனை வணங்குகின்றான். அப்பொழுது மாடலன் கூறுகின்றான்.

அரசு பாராட்டும் வணிகச் செல்வன் கோவலன் முன்னோர் என்பதையும், தலைக்கோல் சிறப்புடைய மாதவியுடன் கோவலன் கூடி வாழ்ந்து மணிமேகலையைப் பெற்றதையும், அக்குழந்தைக்குக் கோவலன் முன்னோன் ஒருவன் மணிபல்லவத்தில் கப்பல் கவிழ மணிமேகலை என்னும் தெய்வம் காத்ததை எண்ணிப் பெயரிட்டதையும், அப்பெயர் சூட்டு நாளில் அவன் பெருங்கொடை புரிந்ததையும் அவன் கொடையைப் பெற வந்த மறையோன் ஒருவனை மதங்கொண்ட யானை கையால் பற்றிக் கொள்ள, உடனே கோவலன் அவ்யானையை அடக்கி அது கைப்பற்றிய மறையோனைக் காத்த அருளொடு கூடிய புறமாண்பினையும்,

பார்ப்பனி ஒருத்தி தன் குழந்தையை வீட்டில் விட்டு வெளியே சென்று மீள, குழந்தையின் காவலுக்கிருந்த கீரிப்பிள்ளை ஆங்குவந்த பாம்பைக் கொன்றதால் பட்ட குருதியைக் குழந்தையைக் கொன்றதாகக் கருதி அக்கீரியைக் கொன்ற மனைவியொடு வாழேன், இத்தீவினைக்கு

நீ கழுவாய் செய்தால் அன்றி மீளேன் என வடபுலம் செல்லும் பார்ப்பனன் இன்ன கழுவாய் என வடமொழியில் எழுதித்தர, அதனைக் கையில் எடுத்துக்கொண்டு தெருத்தெருவாக அலைய, அவன் கணவன் எழுதிய கழுவாயைச் செய்து அவனையும் தேடி அழைத்துக் குடியொடு நன்கு வாழுமாறு வேண்டும் செல்வம் மிக வழங்கிய கொடைச் சிறப்பையும் கற்புடையாள் ஒருத்தியைப் பழி சுமத்திய பொய்மையன் ஒருவனை, பொய்மையரை அடித்துண்ணும் பூதம் பற்றிச் செல்ல அதனைக் கண்டு அவன் தாய் அலற அஃதறிந்த கோவலன் அப்பொய்யனுக்காகத் தன்னுயிரைக் கொண்டு அவனை விடுக்க வேண்ட,

"நரகன் உயிர்க்கு நல்லுயிர் கொண்டு
பரகதி இழக்கும் பண்பீங் கில்லை"

என்று கூறி அக்கீழோனைப்பூதம் அடித்துண்ண, அவன் தாயைத் தன் தாயாய் ஏற்று வேண்டுவ புரிந்து அவள் அவலம் போக்கிய வறுமையரைக் காக்கும் வண்மையையும் எடுத்துக் கூறினான். மேலும்,

"இம்மைச் செய்தன யானறி நல்வினை
உம்மைப் பயன்கொல் ஒருதனி உழந்தித்
திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்தது
விருத்தகோ பால நீ"

என்றதும் மாடலன் கூறிய வரலாற்றுக் குறிப்புகளாம்.

புறஞ்சேரியில் பொல்லாத கனவு கண்ட கோவலனைக் கவுந்தியடிகள் மதுரை மாநகர்க்குப் புறப்படு என்றபோது உடனிருந்தவனும், உடன்போகச் சொன்னவனும் அவனேயாம்.

செங்குட்டுவன் வடபுலம் சென்று கல்லெடுத்து நீர்ப்படை கங்கையில் செய்து அதன் தென்கரையில் இருந்தபோது மாடலன் ஆங்குத் தோன்றுகின்றான்.

"வாழ்க எங்கோ"

என வாழ்த்தி, "மாதவி மடந்தை, கானற்பாணி கனக விசயர்தம் முடித்தலை நெரித்தது" என்று புதிர் போடுவதுபோல் செய்தி உரைத்தான். அதனைக்கேட்ட செங்குட்டுவன்,

"பகைப்புலத் தரசர் பலரீங் கறியா
நகைத்திறம் கூறினை நான்மறை யாள
யாதுநீ கூறிய உரைப்பொருள் ஈங்கு"

என்றான்.

மாடலன், பூம்புகார்க் கடற்கரைக் கானற் பாணியையும் ஊழ்வினை உருத்ததையும், மதுரைக்குக் கண்ணகியொடு கோவலன் வந்ததையும், பாண்டியன் இறப்பையும், கண்ணகி சேரநாடு புகுந்ததையும் அதனால் கனகவிசயர் தலையில் கடவுட் கல் ஏற்றப்பட்டதையும் விரிய உரைத்தான்.

பின்னர்த் தான் வடபுலம் வந்ததையும் அதன் காரணத்தையும் உரைத்தான்.

யான், பொதியமும் குமரியும் சென்று மதுரைக்கு வந்தபோது,

வலம்படு தானை மன்னவன் தன்னைச்
சிலம்பின் வென்றனள் சேயிழை என்றலும்
தாதெரு மன்றத்து மாதரி எழுந்து
கோவலன் தீதிலன் கோமகன் பிழைத்தான்
அடைக்கலம் இழந்தேன் இடைக்குல மாக்காள்
குடையும் கோலும் பிழைத்த வோஎன
இடை இருள் யாமத்து எரியகம் புக்கதும்,

கவுந்தியடிகள் உண்ணா நோன்பிருந்து உயிர் துறந்ததும் உரைத்தான். மதுரைக்கு நேர்ந்ததையும் முழுதுற உரைத்தான். பின்னர், என் ஊராம் தலைச்சங்காடு சென்று இந்நிகழ்ச்சிகளை யான் கூறக் கோவலனுக்கும் கண்ணகிக்கும் நேர்ந்ததை அறிந்த கோவலன் தந்தை மாசாத்தன் துறவு கொண்டதும், கோவலன் தாய் இறந்ததும், கண்ணகியின் தந்தை துறவு கொண்டதும் அவள்தாய் இறந்ததும் மாதவியும் மணிமேகலையும் துறவு பூண்டதும் கூறினான். என் சொல்லால் இத்தனை இன்னல்கள் நேர்ந்தமையால் அதன் கழுவாயாகக் கங்கையாடப் போந்தேன்" என்றான்.

இவற்றை அமைந்து கேட்ட செங்குட்டுவன்,

"தென்னவன் நாடு செய்தது ஈங்கு உரை"

என்றான். மாடலன்,

"கொற்கையில் இருந்த வெற்றிவேற் செழியன்
பொற்றொழிற் கொல்லர் ஈரைஞ் ஏற்றுவர்
ஒருமுலை குறைத்த திருமா பத்தினிக்கு
ஒருபகல் எல்லை உயிர்ப்பலி ஊட்டி" யதை உரைத்தான்.

வெற்றிவேற் செழியன் அரியணை ஏறி ஆட்சி நடத்துவதையும் உரைத்தான்.

மாடலன் வழியே பூம்புகார்ச் செய்தியும் மதுரைச் செய்தியும் செங்குட்டுவன் அறிந்து கொண்டதன் வழியாகக் கதைப் பகுதிகளை அப்படி அப்படி உரைத்தவன் மாடலன் என்பதை அறிகிறோம். செங்குட்டுவன் தன்நிறை அளவு 50 துலாம் பொன் வழங்கினான் மாடல மறையோனுக்கு. ஒரு துலாம் 100 பலம் என்பது பழநாள் கணக்கு.

வஞ்சிக் காண்டச் செய்தியோ அடிகள் நேரில் அறிந்ததும், தம் நாட்டு நடைபெற்றதும் வடநாட்டு நடைபெற்றதும் கண்டும் கேட்டும் அறிந்தவை ஆதலின் கதை முழுமையுற வாய்த்ததாம்.

இனி, மாடலன் இவ்வளவொடும் நின்றான் அல்லன். வடபுல வெற்றியைச் சோழனுக்கும் பாண்டியனுக்கும் உரைக்கச் சென்ற தூதர்கள் அஞ்சிச் சென்றோரையும், துறவரையும் வென்றது வெற்றியாகாது என வேந்தர் இருவரும் உரைத்ததாகத் தூதர் சொல்லச் செங்குட்டுவன் சினந்தான். அப்பொழுது மாடலன்,

இகழாது என்சொல் கேட்டல் வேண்டும்
வையங் காவல் பூண்டநின் நல்யாண்டு
ஐயைந்து இரட்டி சென்றதற் பின்னும்
அறக்கள வேள்வி செய்யாது யாங்கணும்
மறக்கள வேள்வி செய்வோய் ஆயினை

என்று பல்பல எடுத்துக்காட்டுகளுடன் யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை என்பவற்றை உரைத்து "யான் அரும்பொருட் பரிசிலேன் அல்லேன்" சொல்வது கேள்:

"நான்மறை மருங்கின் வேள்விப் பார்ப்பான்
அருமறை மருங்கின் அரசர்க் கோங்கிய
பெருநல் வேள்வி நீசெயல் வேண்டும்"

என்றான். வேந்தன் செங்குட்டுவன்,

"மாடல மறையோன் சொல்லிய முறைமையின்
வேள்விச் சாந்தியின் விழாக்கொள ஏவி" னான்.

வேள்விகள் பலவும் மாடலன் கூறியவாறு செய்து, கடவுள் மங்கலமும் செய்தான்.

நிறைவுக் காதையாம் வரந்தரு காதை, அதில் மாடலன், செங்கோட்டு மலை உச்சியில் உள்ள கல்பாறை இடையில் சுனைகள் பல உண்டு; அவற்றின் இடையேயுள்ள சுனையில் புகுந்து நீராடியவர் பழம் பிறப்புணர்ச்சி அடைவர். ஆதலால் அந்நீரைக் கொணர்ந்து ஈங்குள்ள அரட்டன் செட்டியின் இரட்டைப் பிள்ளைகள் பாசண்டன் பார்ப்பனி என்பார் மூவர் மேல் தெளிக்கக்,

கேளிது மன்னா என்று அழைத்து, மாலதி என்பாளின் மாற்றாள் மகவுக்குப் பால்தர அது உண்ட குழந்தை இறக்க அவள் எப்படிப் பழிப்பாளோ எனப் பாடு கிடக்கப் பாசண்டச்சாத்தனே மகவாய் வந்து மாலதி துயர் நீக்கி, அப்பார்ப்பனியைப் பின்னே தன் கோட்டம் வரச்சொல்லி மறைந்தான். அத் தேவந்தியாம் அடித்தோழி இவள் என்றும், கோவல கண்ணகியர் தாயர் அரட்டன் செட்டியின் இரட்டைப் பிள்ளைகள் ஆயினர் என்றும் மாதரி ஆடகமாடச் சேடக் குடும்பியின் சிறுமகள் ஆயினள் என்றும் கையகத்துக் கனிபோல் காணச் செய்தனன்.

செங்குட்டுவன்,

"பத்தினிக் கோட்டம் படிப்புறம் வகுத்து
நித்தல் விழாவணி நிகழ்த்தச்" செய்தனன்.

மாடலன்,

பூவும் புகையும் மேவிய விரையும்
தேவந் திகையைச் செய்கென்" றருளினன்.

கண்ணகி, 'தந்தேன் வரம்' என உருவிலி ஒலி தரச் செங்குட்டுவன் மாடலன் முதலோர் வேள்விச் சாலையுள் புகுந்தனர். இளங்கோவும் உடன் புகுந்தார். அக்கால் இளங்கோ தம் இளந்தை வரலாற்றையும், இக்கதை கேட்டோர் நடக்க வேண்டும் முறையையும் கூறி,

"மல்லல்மா ஞாலத்து வாழ்வீர் ஈங்கென்"

எனக் காப்பியத்தை நிறைவு செய்தார்.

எந்தத் தீர்த்த நீராட்டைப் பீடன்று என்று கண்ணகி மறுத்தாரோ, அந்த நீராட்டால் தேவந்தி முதலோரை அடையாளம் காட்டி, பார்ப்பனியாகிய அவளையே கண்ணகி கோயில் வழிபாட்டுக்கு மாடலன் வழிவகுத்தமை தான் மறையோன் பிறப்பு என்பதையும் மறைவழியே வழி என்பதையும் நல்ல ஊடகனாக இருந்து இதனைச் செய்ததையும் வேள்விச்சாலையுள் வேந்தனையும் இளங்கோவையும் புகுத்தியதையும் நோக்கின்

> ***பழந்தமிழ் நெறிகள் பல மறை (வேத) நெறி***
> ***யாகப் புகுத்த வந்த படைப்பே மாடல மறையோன்***
> ***படைப்பு என்பது புலப்படும்.***

சிலம்பில் பங்கு கொண்ட மற்றையோர் கழுவாய்க்கும் மாடல மறையோன் கொண்ட தீர்த்த மாடல் கழுவாய்க்கும் சொங்குட்டுவன் நிறையளவு பொன் பெற்றுக் கொண்டவன் ஆகிய அவன், 'பரிசில் வேண்டிக் கூறேன்' என்றதும் வேதிய அல்லது மறை வழக்காக அறியப்படுதலும் ஆய்ந்து காண்க!

காலம்

அடிகள் தமிழ்நெறிக்கதிர் ஒழிய, மதியந் தானும் தோன்றாத இடையிருள் மாலைக் காலம் போன்றதாகலின் தமிழ்நெறி மணமுறை, மறையோர் முறையில் தீவளர் வேள்வியைச் சுற்றிவரும் மங்கலவிழா நிகழ்த்தப்பட்டதும் சுட்டத்தக்கதாம்!

அரசர் முடியைப்பிடித்துக் கொண்டு, மக்கள் தன் அடியில் வீழ்ந்து கிடக்க வைக்கத் தொடங்கிய காலம் மேலும் பெருகியது இளங்கோவடிகள் காலம் என்பதன் பதிவாவணம் சிலம்பு என்பதும் எண்ணி உணரத்தக்கதாம். இந்நாள் ஊடகம் போல அந்நாள் ஊடகனாக இருந்தவன் மாடலமறையோன் என்பதைச் சுருங்கக் கூறி அமைவாம்.

❖❖❖

11. கதிரும் மதியும்

"ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்"

என்று தொடங்க வேண்டிய வாழ்த்தினைத்

"திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்"

என்று தொடங்கினார்.

ஞாயிறு – நாள்; தன் ஒளியுடையது.

திங்கள் – கோள்; ஞாயிற்றொளியைக் கொண்டு ஒளி செய்வது.

இவ்வாறு மாற்றிய அடிப்படை என்ன?

கண்ணகியை, ***"சராறு ஆண்டு அகவையாள்"*** எனத் தொடங்குகிறார்.

கோவலனை, ***"சுரெட்டு ஆண்டு அகவையான்"*** என்கிறார்.

கண்ணகியை முற்படக் கூறியதை எண்ணும் அருஞ்சொல் உரையாசிரியர், "இவளை முற்கூறிற்று கதைக்கு நாயகி ஆதலின்" என்கிறார்.

கதைக்குத் தலைவியாம் கண்ணகியை முற்படக் கூறியதற்குத் தகத் திங்களை (தண்மையை) முற்படக் கூறினார்.

கோவலனைப் பிற்படக் கூறியது கொண்டு ஞாயிறு பிற்படக் கூறப்பட்டது என்பது உணர வாய்க்கும். இது மங்கல வாழ்த்துக்காதை! தொடக்க வாழ்த்துப் பகுதி!

அடுத்து வரும் மனையறம் படுத்த காதையில் கோவலனும் கண்ணகியும் நெடுநிலை மாடத்து இடைநிலத்தில்

"மயன்விதித் தன்ன மணிக்கால் அமளிமிசை"

இருந்த இனிய இருக்கையை,

"முதிர்கடல் ஞாலம் முழுவதும் விளக்கும்
கதிர் ஒருங்கிருந்த காட்சி போல"

என்கிறார். கோவல கண்ணகியரைக் கதிரும் மதியும் ஒருங்கே இருந்த காட்சிக்கு ஒப்பிடுகின்றார்.

"கடல் சூழ் ஞாலம் முழுவதையும் விளக்கும் ஞாயிறும்
திங்களும் சேர இருப்பக் கண்ட காட்சி போல"

என உரைவரைந்தார் அடியார்க்கு நல்லார்.

கணவன் மனைவியரைக் கதிரும் மதியும் என ஒப்பிடல் உண்டோ எனின் அவ்வாறு கூறல் பெருவழக்காம்.

"அஞ்சுடர் நீள் வாள்முகத்து ஆயிழையும் மாறிலா
வெஞ்சுடர் நீள் வேலானும் போதரக்கண்டு - அஞ்சி
ஒருசுடரும் இன்றி உலகுபா ழாக
இருசுடரும் போந்தனஎன் றார்"

என்பது திணைமாலை. (71)

"வெங்கதிர்க் கனலியும் தண்கதிர் மதியமும்
தங்கதீ வழுவித் தலைப்பெய்தாற் போல"

என்பது இறையனார் களவியல் உரை (2)

"மதியமும் ஞாயிறும் கதிதிரிந் தோடிக்
கடல்நிற விசும்பில் உடனின் றாங்கு"

என்பது பெருங்கதை (1:32 : 22-23)

அந்திமாலைச் சிறப்புச்செய் காதையில் அரைசு கெடுத்து எனவரும் இடத்து (8),

"அரசு - தன் கொழுநன்; என்றது ஆதித்தனை என்றார் அருஞ்சொல் உரையாசிரியர்.

கோவல கண்ணகியர் மதுரைக்குப் புறப்பட்டபொழுது கதிரோன் தோன்று முன்னதாம் இருட்பொழுதாம்.

"கனைசுடர் கால்சீயா முன்"

என்பது அது (6:79) அக்காதை வெண்பா கூறியதும் அது, அடுத்த காதைத் தொடக்கமே (நாடுகாண்காதை)

"வான்கண் விழியா வைகறை யாமத்து"

என்பது (1)

"இரவிடைக் கழிதற்கு ஏதம் இன்று"

என்றே பெரிதும் இரவிலேயே நடக்கின்றனர் (13:13)

"கதிர் செல்வதன்முன் மாட மதுரை மாநகர்"

எனப் புறஞ்சேரியில் இருந்து கோவல கண்ணகியர் புறப்பட மாடலனும் கவுந்தியும் ஏவுகின்றனர். – சிலம்பு திருடிய கள்வன் என்று கோவலன் கொல்லப்பட்டதைக் கேட்ட அளவில் கண்ணகி,

"தீங்கள் முகிலோடும் சேணிலம் கொண்டெனச்
செங்கண் சிவப்ப அழுதாள்!" "எங்கணாஅ"

என அலறினாள்.

காய்கதிர்ச் செல்வனே கள்வனோ என்கணவன் என வினாவுகின்றாள். அப்பொழுது,

"கள்வனோ அல்லன் கருங்கயற்கண் மாதராய்
ஒள்ளொரி உண்ணும் இவ்வூரென்றது ஒரு குரல்"

அக்குரல் வெய்யோன் குரல் என்பதை "என்றனன் வெய்யோன்" என்றார் (19:1)

கண்ணகி,

"மல்லல்மா ஞாலம் இருளுட்டிச் செங்கதிர் சென்றொழிப்பப்
புல்லென மருண்மாலை"ப்
பொழுதில் கோவலன் கிடக்கை கண்டாள்.
காலையில் மலர்சூட்டியவன் மாலையில் கிடந்த கிடக்கை கண்டு,

"வண்டார் இருங்குஞ்சி மாலைதன் வார்குழல்மேல்
கொண்டாள் தழீஇக் கொழுநன்பால் காலைவாய்ப்
புண்டாழ் குருதி புறஞ்சோர மாலைவாய்க்
கண்டாள் அவன்தன்னைக் காணாக் கடுந்துயரம்"

கோவலன் தன்னைத்தழுவ, அவன் நின்றான் எழுந்து

"நிறைமதி வாண்முகம்
கன்றியது என்றவள் கண்ணீர்கை யான் மாற்ற
அழுதேங்கி நிலத்தில்வீழ்ந் தாயிழையாள் தன்கணவன்

தொழுதகைய திருந்தடியைத் துணைவளைக் கையாற்பற்ற
பழுதொழிந் தெழுந்திருந்தான் பல்லமரர் குழாத்துளான்
எழுதெழில் மலர்உண்கண் இருந்தைக்க எனப்போனான்"

திங்கள் ஞாயிறு ஆகிய சுடர்களில் தொடங்கிக் கதிர் மறைவொடு நிறைமதி வாண்முகத்தொடு நிறைக்கிறார்.

ஆண்மையும் பெண்மையும் ஒருங்கு கூடிய இறைமையை ஞாயிறும் திங்களுமாகிய கண்களை உடையவை என்னும் தொன்மம் எண்ணத்தக்கது.

"வீங்குநீர் அருவி வேங்கட மென்னும்
ஓங்குயர் மலையத் துச்சி மீமிசை
விரிகதிர் ஞாயிறும் திங்களும் விளங்கி"

என்று வேங்கடவேளைக் காட்டுகிறார் அடிகள் (11: 41-43)

"பசுங்கதிர் மதியமொடு சுடர்கண் ணாக"

என்பது நற்றிணையின் கடவுள் வாழ்த்து.

அம்மையப்பரை முக்கண்ணராகக் கொள்ளலால் - அம்மைக்குப்பாதி தந்தார் என்பதால் - **"ஒன்றரைக் கண்ணர் கண்டீர் ஒற்றியூர் உடைய கோவே"** என்றார் அப்பரடிகள்.

❖❖❖

12. குன்றக் குரவை

அடிகள் படைப்பு :

தமிழ்ப் பாவிகத் தந்தையும் தாயுமாக இலங்குவது **சிலப்பதிகாரம்;** அப்பாவிகம் கொண்டே **தண்டியலங்காரம்** "பெருங்காப்பிய நிலையே பேசுங்காலை" எனத் தொடங்கிப் பேசியது. இது முதற் சிறப்பு!

செந்தமிழ் என்னும் பெருமையை வெளிப்படுத்திப் பேசியது **தொல்காப்பியம்.** அச் செந்தமிழுக்கு, **'முத்தமிழ்'** என்னும் பேற்றை வழங்கியது சிலப்பதிகாரமே. இஃது இரண்டாம் சிறப்பாம்!

தொல்காப்பியர் மணவாத் துறவரா, இல்லறத்தரா-பெரிதும் பின்னவராகவே கொளல் சால்பு!

திருவள்ளுவர் மணவாத் துறவரா, இல்லறத்தரா-பெரிதும் பின்னவராகவே கொளல் சால்பு!

ஆனால், இளங்கோவடிகள் வெளிப்பட அறியப்பட்ட **துறவர்; மணவாத்துறவர் மட்டுமா? அரசும் துறந்திருந்த அடிகள்!** குணவாயில் கோட்டத்துக் குடிகொண்டு, தமிழர் நெஞ்சமெல்லாம் குடியேறி, குடியேறிய நாள் தொட்டுத் தமிழுலகர் நெஞ்சங்களில் எல்லாம் கொலுவிருந்து கோலோச்சிக் கொண்டிருப்பவர். **இதன் சிறப்பென்ன?**

"துறவர்களே துறவர்களே, தமிழைத் துறவாதீர், தமிழ்க் கலைகளைத் துறவாதீர்; இல்லறம் துறவறமாம் ஆகிய இரண்டறங்களையும் மதியுங்கள்; சமயச்சால்பும், அரசு ஒருமிப்பும், இறைமைப்பேறும் துறவாதீர்" – என்று ஏறத்தாழ ஈராயிர ஆண்டுகள் அறைகூவல் விட்டுக்கொண்டு, புகழ்வாழ்வு வாழ்ந்து கொண்டிருப்பவர் – இது மூன்றாம் சிறப்பு!

"இயற்கையே இறைமை; இறைமை வழிபாடே வரி, வாரம், நடம், கூத்து, ஓவியம், சிற்பம், கருவி, கண்டம் என்பவையெல்லாம் எல்லாம், **இயைந்து புணர்ந்து கலந்து ஒன்றாகி நிற்கும் வாழ்வியல் நிலை"** என்பதைத் **'தாதா'வாகத் தமிழ்மண்ணுக்குத் தந்த தவப் பெருஞ்சான்றோர்** – இது நான்காம் சிறப்பாம்!

இச்சீர்மைச் சிலம்பின், மூன்றாம் காண்டமாம் வஞ்சிக்காண்டத்தின் முகமாக விளங்குவது **குன்றக்குரவை.**

பாடல், காதை, வரி, குரவை, மாலை என்னும் ஐவகையால் முப்பது பகுதியாய் அமையும் காப்பியத்தின் 24--ஆம் பகுதியாய், குரவைப் பெயரதாய் அமைவது குன்றக்குரவை. முன்னொரு குரவை (17) **ஆய்ச்சியர் குரவை.** ஆயர்பாடிக் கண்ணனை நோக்கியது அது.

> ***தீக்குறி கண்டு அதனைத் தீர்க்க ஆடியது ஆய்ச்சியர் குரவை;***
> ***கண்ணகி கோவலனொடு விண்ணகம் புக்க தெய்வக்கோல***
> ***இறும்பூதால் பாடியது குன்றக்குரவை.***

முன்னது **மாயவனைப்** பற்றியது. பின்னது **வேலவனைப்** பற்றியது. அடியளவால் 134 அடிகளையுடையது. உரைப்பாட்டு மடையாகத் தொடங்கி அப்பாட்டு மடையாலேயே முடிவது. அரிய உள்ளுறையுடையது; **விண்ணகக் காதலர் ஆகிய கோவல கண்ணகியரை முன்னிட்டுப்பாடி, மண்ணகக் காதல் அரணமாம் அறத்தொடு நிலையைத் திறத்தொடு கூறுவது.**

குரவையாவது எழுவரேனும் ஒன்பதின்மரேனும் கைகோத்தாடும் கூத்து. (17:5 அடியார்க்)

குன்றத்துக்கண் ஆடிய குரவையாகலின் இப்பெயர் பெற்றது. குன்றத்து மகளிர் தினைப்புனம் காத்து, அருவியாடியும் சுனையில் சுழன்றும் வருகின்றனர். வரும் வழியில் மலைவேங்கை நிழலில், **தாம் வழிபடும் வள்ளியே** போலத் தோன்றும் கண்ணகியாரைக் கண்டு **"யாவிரோ?"** என வினாவினர்:

> ***"மணமதுரையோடு அரசுகேடுற வல்வினைவந்து உருத்தகாலைக்***
> ***கணவனையங் கீழந்து போந்த கடுவினையேன் யான்"***

என்கிறார். மார்பிழந்து நின்ற காட்சி உருக்கியதை அன்றி, மற்றொன்றும் **கரவிலா மலைவாணர்க்கு வேண்டுமோ?** வணங்கினர்; அஞ்சினர்; கைகூப்பிக் கொண்டு நிற்கின்றனர்; வானவர் மலர்தூவி கணவனொடும் அவரை விண்ணகம் கொண்டு போயினர்; உருக்கம் அச்சம் தொலைய, வியப்பு விஞ்சியது. தெய்வத் தோற்றம் எய்தியது. ***"இவள் போலும் நம் குலத்திற்கு ஒரு தெய்வமில்லை"*** என்னும் உறுதிக்கு வந்து விட்டனர் கொடிச்சியர்.

"சிறுகுடியீரே சிறுகுடியீரே, நறுஞ்சினை வேங்கை நன்னிழற்கீழ் ஓர் தெய்வம் கொள்ளுமின்! பறைமுழக்குங்கள்! கொம்பு ஊதுங்கள்! குறிஞ்சி

பாடுங்கள்! புகை எடுங்கள்! பூப்பலி இடுங்கள்!" என்று கூறுமாறு கண்ணகியார் **கற்புமாண்பால் கடவுள் ஆகிவிட்டார், குறிஞ்சி வாணர்க்கு! போரின் வீறு அமர நிலை என்றால், இக்கற்பின் வீறு அமரிநிலையாம். அமரி, குமரி என்பது வேட்டுவ வரி (67)**

அருவியில் ஆடிவந்த மகளிர், கண்ணகியைக் கண்டு வியந்து வாழ்த்திய போது பொழிந்த மழை, **அருவியை வானவில் ஆக்கிற்று!** அத்தனை வண்ணநீராக அருவி வழிந்தது! இந்திரவில்லின் எழில் கொண்டு இழுமென்று விழுகிறது! அருவி ஆடுவோம் என்று ஆடிப் பாடிச் செல்கின்றனர். **அறத்தொடு நிலை கிளர்கிறது.**

நம் நலத்தை நுகர்ந்தான். 'அஞ்சாதீர்' என்றான்; அவன் நம் நலத்தை மீளத் தந்தானல்லன்! அவன் அருவியில் ஆடுகிறோம்! அவன் மலையில் கல்லை உருட்டிக் கொண்டு வந்துவிழும் **அருவிமேல் வெறுக்க இடமில்லை. வெறுக்க இடமாக இருப்பது என்னைத் தவிரப் பிறரும் அந்நீரில் ஆடியதுதான்! ஆடலாமா?**

"மற்றையார் உற்றாடினோம் தோழி!
மற்றையார் முன்னாடினோம் தோழி!
மற்றையார் மீதாடினோம் தோழி!"

என்று வருந்துகிறாள் தலைவி! **தலைவன் நாட்டு அருவி நீரில் தான் தவிரப் பிறர் ஆடலாமா?** கண் சிவக்க நீராடினோம்; இனி, வேல் ஏத்திக் குரவை தொடுத்துப் பாடுவோம் என்று **தெய்வம் பராவுகின்றனர்.**

"சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்
ஏரகமும் நீங்கா இறைவன் கைவேல்"

சிறப்பினைப் பாடுகின்றனர்; வரைவு (திருமணம்) முடிவதற்காக!
சிலம்பன் செய்த நோய் தீர்க்க அறியாள் அன்னை;
வேலனால் வந்ததென்று வெறியாட்டை நினைக்கிறாள்;
இது நகைப்புக்கு உரியது. உண்மையறியாமல் வெறியாட வேலன் வந்தால், அவன் மடவன்; அவன் மட்டுமல்ல அவன்மேல் ஏறி ஆலமர் செல்வன் வருவனெனின், அவன் அவனினும் மடவன்.

வெறியாடும் களத்திற்கு மயில்மேல் மாணிக்கம் வந்தால், அவனிடம் **"அறம்பிழைத்தானின் மண அணி வேண்டுவோம்; அயலவர் மணம் ஒழி; அவர் மணம் அருள்"** என்போம். குறவர் தம் மகளார் நிலையுயர் கடவுளே, உன் இணையடி தொழுதேம்; **பலரும்**

அறியும் மணம் தருக; பிழை மணம் தவிர்க என்போம்" எனப் பாடுகின்றனர்; ஆடுகின்றனர்.

இவ்வாறு தோழியும் தலைவியும் பிறரும் பாடுதலை, ஒருசார் நின்று கேட்கும் தலைவன் முன், தோழி சென்று தொழுது,

"கடம்பு சூடி உடம்பிடி ஏந்தி
மடந்தை பொருட்டால் வருவ தீவ்வூர்;
அறுமுகம் இல்லை ; அணிமயில் இல்லை ;
குறமகள் இல்லை; செறிதோள் இல்லை;
கடம்பூண் தெய்வ மாக நேரார்
மடவர் மன்ற இச் சிறுகுடி யோரே"

என்று கூறினாள் அது கேட்ட தலைவன், தானே வந்து வரைவன், நாம் கண்ணகிக்குக் கணவனைக் காட்டிக் கொடுத்த நிலையைப் பாடுவோம்.

கோமுறை நீங்கத் தீமுறை செய்தாளை யாம் பாடும்போது, வெற்பன் மணவணியை வேண்டுவம்; இதனைக் கண்டு காதலர் வந்து மகிழ்வர். இமயத்தொடு கொல்லி ஆண்ட குடவர் கோமான் வாழ்க! என்று வாழ்த்திக் குரவை பாடி முடிக்கின்றனர்.

"காப்பியத்தின் போக்கில் புகார்க்காண்டம், மதுரைக்காண்டம் போல, வஞ்சிக்காண்டம் ஒட்டுவதாக இல்லை. காப்பியக் கதை மதுரைக்காண்டத்திலேயே முடிந்து போகின்றது; ஆதலால், வஞ்சிக்காண்டம் ஒட்டுப் போடப்பட்டதோ" என ஐயுறுவர் சிலர்.

அவர், உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர் என்பதையோ, கணவனை மீளக் கண்டு விண்ணகம் போனதற்காம் சான்றை நேரில் கண்டு நாட்டுக்கு உரைத்தாரையோ அவர் தெய்வநிலை உற்றார் என்பதையோ அறிதற்கு வஞ்சிக்காண்டம் வேண்டியதாயிற்று என்றும், அதன் முகப்பு குன்றக் குரவையே என்றும் கொள்ளல் முறை.

குன்றக்குறவர் கண்ட காட்சியே வேந்தன் செங்குட்டுவன் அறியும் செய்தியாய், இளங்கோவடிகள் ஆயும் செய்தியாய், சாத்தனார் காட்சிச் செய்தியாய் வாய்த்து, **காப்பியத் தொடக்கத் தூண்டுதலாக அமைந்தமை அறிதல் வேண்டும். தமிழகமே அன்றி வடநாட்டவரும், கடல்சூழ் இலங்கைக் கயவாகுவும்** கடவுளாகக் கொண்டதும் இன்றும் அவ்வழிபாடு ஆங்கு உண்மையும் அறிய வாய்ப்பது இக்குன்றக் குரவை மூலம் தொட்டேயாம்.

குன்றவாணர் தொழில், இயற்கை எழில், இயற்கை நுகர்வு, இயற்கைக்கூத்து, அறக்காவல், பிறழா ஒழுக்கம், வழிபாடு என்பனவெல்லாம் "உள்ளுறையாய்" அமையத் திகழ்வது குன்றக்குரவை.

ஒருபொருள் மேல் **மூன்றடுக்கல்** தாழிசை நிலை! குன்றத்துக் கொடிச்சியர், தமக்கு உண்டாகிய இறும்பூதால் – வியப்பால் – காணரிய காட்சியால் – தம்வயம் இழந்து, **ஒருபொருள்மேல் நான்கடுக்கலாக** ஒரு முறைக்கு இருமுறை பாடுவதாகக் காட்டுகிறார்.

நீராடி வந்த மகளிர், 'அலவுற்று வந்தனர்'! கண்ணகியார் தெய்வக் கோலம் கண்டதும், அயர்வு அகன்றது; மழையோ பொழிந்தது; புதுநீர் கண்ட பூரிப்பால் மீள ஆடினர்; ஆடிய நீரில் இருந்தே, அறத்தொடு நிலை பாடினர்.

நலனுண்டு நல்காதான் குறையை, அவன் நாட்டின்மேல் – மலைமேல் – நீர்ப்பெருக்கின் மேல் காணலாமா? நல்காதானாக அவன் இருப்பினும் நாம் மறப்பேம் அல்லேம்; அவனேயாக – அவன் கொடையேயாக – கொண்டு துய்ப்பேம்; இதனைப் பிறரும் கொண்டு துய்ப்பதுதான் பலரும் ஆடற்கு இடந்தருவான் பழியை நினைந்து நினைந்து நைய வைக்கின்றது! அடிகள் உருக்கம், கொடியிடையார் உருக்கமாகக் கூடுவிட்டுக் கூடு பாய்கின்றது! நலனுண்டு நல்காதானுக்கு நல்லறம் காட்டுகின்றது.

சேய்க்குக் கண்ணீர்! தாய்க்குச் செந்நீர்!
சேய்க்குத் தும்மல்! தாய்க்கு நூறு!
உன்கண்ணில் நீர்வழிந்தால் என் கண்ணில் உதிரம் கொட்டுதடி –
என்பது தாய்மைப் பிழிவு.
தலைவியின் தோற்றத்தில் – உரையில் – உணவில் – பழக்கத்தில்
ஒரு சிறு மாற்றம்! என்றும் குழந்தையாக எண்ணும் தாய்,
தன் குழந்தைப் பருவத்தை வளர் பருவத்தை ஏனோ மறந்து
போகிறாள்! **வேலன் விளையாட்டு** என நினைக்கிறாள்.
வெறியாடும் வேலனை அழைக்கிறாள். அவனும் வேலன் விளையாட்டு என்றே ஆடுகிறான்!

உண்மை, **"வேலனால் அன்று; வெற்பனால்"** என்றுணர்ந்த தலைவிக்கும் தோழிக்கும் நகைப்பே உண்டாகின்றது! உண்மை உணராமல் உடுக்கடித்துத் தலையாட்டும் கூட்டம் மட்டுமன்று; வெறியாட

வந்தானும் மடவன்! இவர்கள் மாறா நேயத்து வள்ளி மகிழ்நனை அழைத்து 'இவன்மேல் ஆடுவான்' என்று எண்ணுவதை எண்ணி, அவனுக்கும் நகைப்பாக இருக்கும்; வள்ளிக்கும் நகைப்பாகவே இருக்கும். ஆதலால் அவன் வாரான்!

ஒருவேளை இவர்கள் எண்ணுவதுபோல் அவன் வெறிக்களம் வந்து இவன்மேல் ஏறி ஆடினால், இவனிலும் அவன் மடவன்! – என்று கூறும் வகையால் அறத்தை நிலைநாட்டுகின்றனர்.

தெய்வம் பராஅய பகுதியில் சீர்கெழு செந்தில், செங்கோடு, வெண்குன்று, ஏரகம் நீங்கா இறைவன் வேலன் என வருவதில் படைவீடுகள் நான்கு பேசப்படுகின்றன.

செந்தில் என்பது ஐயமறத் தெரிந்த திருச்சீரலைவாயே!
அரும்பத உரையார் திருச்செந்தில் என்றே கூறுகிறார்.
செங்கோடு, திருச்செங்கோடு என்கிறார்.

வெண்குன்றம், சுவாமி மலை என்கிறார் ந.மு.வே. நாவலரும் ஏற்கிறார். ஏரகம் இன்ன இடம் என அரும்பத உரையால் அறியக்கூடவில்லை.

ஏரகத் துறைதலும் உரியன் என்னும் முருகாற்றுப்படை உரையில் (189) ஆசிரியர் **நச்சினார்க்கினியர், "ஏரகம் மலைநாட்டகத்ததொரு திருப்பதி"** என்கிறார். துளுநாட்டில் உள்ள குமரகோட்டம் என்கிறார் அரச மாணிக்கனார். வெண்குன்று, ஏரகம், சுவாமிமலை மூன்றும் ஓரிடத்துப் பெயரா? வெவ்வேறா? தனியாய்வு வேண்டும்! ஆவிநன்குடியும், திருப்பரங்குன்றமும் முருகாற்றுப்படையில் உண்டே! பத்துப்பாட்டில் முருகாற்றுப்படை பிற்பட்டது என்பார்க்கு இஃதொரு களமாகிவிடுமா?

"கோமுறை நீங்கத் தீமுறை செய்தாளை"ப் பாடிப் பயன் என்?
தன்னந்தனிநின்று கோவேந்தன் முன் சென்று அறந்தவறியவன்
ஆருயிர், தானே நீங்கச் செய்தவள், தன்னை வழிபடும் நமக்கு,
தன் அவ்வறம் பிழைக்க விட்டு வைக்க மாட்டாள்! அறம் காப்பாள்!
என்பதாகக் குன்றத்துக் குரவைப்பாட்டை அடிகள் இயைக்கிறார்!
கோமுறை காத்து நிற்கும் குடவர்கோ வாழ்த்துடன் நிறைவிக்கிறார்.

"தலைமகட்குத் தோழி வரைவு கூறியது" என்பது இதன் அகத்துறை.

13. சிலம்பின் அடையும் நடையும்

சிலம்பு என்பது ஒலியால் பெற்ற பெயர். சில் சில், சல் சல், சல சல என்பன ஒலிக்குறிப்பு இரட்டைக் கிளவிகளே. சிலம்பு, சலங்கை, சல்லரி, சலசலப்பு, சலம் முதலியன இவ்வொலிக்குறிப்பு வழிச் சொற்களே.

சிலம்புதல் – ஒலித்தல்; கல்லும் மணியும் பரலாய் ஒலியெழுப்பும் காலணியும், கம்போடு கம்பு மோதி ஒலிக்கும் கம்பாட்டமும், எதிரொலி செய்யும் மலையும் 'சிலம்பு' எனப்படுதல் இவ்வொலிக் குறிப்பாலேயே ஆம். சிலம்பி என்பதோர் பூச்சி; அது சிலந்தி என்று வழங்கப்பெறுகிறது. அரவம் என்னும் ஒலிப்பெயரைப் பாம்பு பெற்றது போல, ஓயாது ஒலிக்கும் ஒலிப்பெயராலேயே 'சிலம்பி' என அது வழங்கப்பெற்றதாம்.

"சிலம்பகம் சிலம்பப் பாடி" என்பது முருகாற்றுப்படை – (40)

சிலம்பு எனப்படும் சிலப்பதிகாரப் பாவிகத்தில் சிலம்பு எவ்வெவ்வா றெல்லாம் அடைநயம் பெறுகின்றது என்பதையும் அவ்வடையின் நடைநயம் என்னென்ன என்பதையும் சுட்டுவதே இக்கட்டுரையாம்.

சிலம்பு என்பது அடைமொழி எதுவும் இன்றி நடைபெறும் இடமும் உண்டு (8:90; 9: 73, 74; 12:63 25:72). இச்சிலம்பு எனச் சுட்டும் இடமும் உண்டு (பதி.30). அச்சிலம்பு என்னும் சுட்டொடும் வருதல் உண்டு (பதி.30)

சிலம்பு காலணி ஆகலிற் காற்சிலம்பு (19:7) என் காற்சிலம்பு (20:61), என்காற் பொற்சிலம்பு (20:68) சீறடிச்சிலம்பு (16:92), அணிமணிக் காற்சிலம்பு (20:71) எனவும் காற்கணி (16:111), காலணி (16:127) எனவும் வழங்கப்பட்டுளது.

அழகிய வேலைப்பாட்டால் அணிசிலம்பு (4:47) சித்திரச் சிலம்பு (16:119) பொன்னஞ் சிலம்பு (29:9:2) பொற்றொழிற் சிலம்பு (20:42) போற்றருஞ் சிலம்பு (16:116) என்றெல்லாம் சொல்லப்படுகின்றது. செவ்விய பொன்னால் செய்யப்பட்டது என்பதைச் செம்பொற்சிலம்பு (19:23) என்கிறது.

உள்ளிடு பரலை உடைமையால் சில்லரிச்சிலம்பு (பதி.25) இணையரிச்சிலம்பு (20:27) எனப்பட்டது.

சிலம்பின் ஒலியின்பம் கருதிப் "பண்ணமை சிலம்பு" (பதி.18) என்றும், தீமை நேர்தற்கு இடமாகலின் தீவினைச் சிலம்பு (25:69) செய்வினைச் சிலம்பு (16:160) சூழ்வினைச் சிலம்பு (பதி.58) என்றும் கூறப்பட்டது.

ஒற்றைச்சிலம்பு தனிச்சிலம்பு (23:10) என்றும், நின்ற சிலம்பு (19:2) என்றும், அரண்மனைச்சிலம்பு கோயிற்சிலம்பு (16:145) என்றும் யாமுடைச்சிலம்பு (20:69) என்றும் கூறப்பட்டன.

சான்றாய் அமைந்து நடுவுநிலையை நாட்டிய நயன்போற்றும் வகையில் செஞ்சிலம்பு (25:73; 29:11:4) என்று இருமுறையும் கூறப்பட்டன.

மாதவியார் அணிந்த காலணிகள்,

"பரியகம் நூபுரம் பாடகம் சதங்கை
அரியகம் காலுக் கமைவுற வணிந்து"

என்று கூறப்பட்டது (16:84-5). இதில் வரும் நூபுரம் என்பது சிலம்பு – என்பதன் வடமொழிச் சொல்லாகும்.

"நிலம்பக வீழ்ந்த சிலம்பாறு"

என்பதற்கு (11:108) சிலம்பாறு என்றது ஓராறு என்று அருஞ்சொல் உரைகாரரும் சிலம்பாறு அவ்யாற்றின் பெயர் என்று அடியார்க்கு நல்லாரும் உரைவரைந்தாராக அவ்யாறு 'நூபுரகங்கை' எனப் பெயர்த்திரிபு செய்யப்பட்டு வழங்குதல் அழகர்மலை செல்வார் எவரும் அறிந்தது. "சிலம்பாற்றினை நூபுரகங்கை என்பர்" என்பர் பெரும்பேராசிரியர் உ.வே.சாமிநாதர் (சிலப். 18:108-11 அடிக்குறிப்பு)

புலமைப்படைப்பில் இடம் பெறும் அடைகள் வாளா அமைவன அல்ல; உள்ளீடு மிக்கவை என்பதை உணர,

"**தீவினைச் சிலம்பு** காரணமாக
ஆய்தொடி அரிவை கணவற் குற்றதும்
வலம்படு தானை மன்னன் முன்னர்ச்
சிலம்பொடு சென்ற சேயிழை வழக்கும்
செஞ்சிலம் பெறிந்து தேவி முன்னர்
வஞ்சினம் சாற்றிய மாபெரும் பத்தினி"

என்றும் இவ்வாறு அடிகளுள் சிலம்பு மும்முறை இடம்பெற்றதும், கோவலன் கொலைக்கு மூலமாக இருந்த சிலம்பைத் **தீவினைச் சிலம்பு** என்றதும், கண்ணகி கையில் இருந்த சிலம்பு பயன் செய்திலதாகலின் வாளா சிலம்பு என்றும், அரண்மனைக்கண் இருந்ததும் கோவலன் வழிப்பெற்றதுமாம் **சிலம்பே செம்மையை நிலைநாட்டியதாகலின் செஞ்சிலம்பு** என்றும் கூறப்பட்ட அருமை பாவிகத் துய்ப்புடையார்க்குப் பாலொடு தேன்கலந்த பான்மையவாம் அடை நடைகளாம் என்க.

தேவி சிலம்பு பெயரளவில் நின்றது; எங்கும் வெளிப்பட்டிலது. அவர் வயம் இருந்ததும், களவு போய – சிலம்பும் காட்சிப்பட்டிலை. கண்ணகி கைச்சிலம்போ ஒற்றைச்சிலம்பு என்ற அளவில் நின்றது. கோவலன் தந்த சிலம்பே, மீள வந்து கண்ணகியாரால் உடைக்கப்பட்டு மணி மன்னவன் கன்னத்தில் அறைந்து மன்னனையும் தேவியையும் காவு வாங்கிய செஞ்சிலம்பு ஆயது என்பது மெய்ப்பிக்கப்படுவதாம். செஞ்சிலம்பே நம் சிலம்புக்காவிய மூலத் தூண்டலாம் என்க.

❖❖❖

14. மனச்சான்று

தங்கக்கடையில் 'காதணி'களை இணை இணையாக வைத்துளர். மிதியடிக் கடையில் 'மிதியடி'களை இணை இணையாக வைத்துளர். ஏன்?

அவை ஒரு காதிற்கோ ஒரு காலுக்கோ அணியப்படுவன அல்ல. இணை இணையாக வாங்கி இணைஇணையாக அணியப்படுவன! மிதியடியும் அணியா? 'காலணி' என்று சில கடைகளில் பலகை இருக்கக் காண்கிறோம் அல்லவா!

பாதுகாப்புக்குரியதும் பார்வைப் பொலிவும் கொண்டிருக்க வேண்டும் என்பதுதானே இதன் காரணம். வண்டியில் பேருந்து வண்டியில் ஒருவர் ஏறுகிறார். ஏறும்போதே வண்டி ஓடிக் கொண்டிருக்கிறது. அவர் மிதியடி ஒன்று கழன்று விழுந்து விடுகிறது. ஒற்றை மிதியடிக்காரர், சற்றே சென்றதும் காலில் இருந்த மிதியடியைக் கழற்றி வீசிவிடுகிறார். ஏன்?

ஒன்றை அணிய முடியாது! ஒன்று வாங்கவும் முடியாது! ஆதலால்! மிதியடியைத் திருடுபவனும் ஒன்றைத் திருடான். மாறி மாறிக் கிடந்தாலும் தெளிவாகக் கண்டு இரண்டைச் சேர்த்தே நடையிடுவான். அல்லது பையுள் இடுவான். அவ்வாறாக,

ஒற்றைச் சிலம்பு திருடப்பட்டதாம்; திருடுவதிலும் ஓர் அறப்பார்வை போலும்!

விற்க வருபவனும் ஒற்றைச் சிலம்பை விற்க வருகின்றானாம்!

வியப்பான ஒற்றுமை இல்லையா?

வலக்கால் மிதியடி வேறு; இடக்கால் மிதியடி வேறு; கால் மாறி ஆட – போட – ஓட – முடியாது;

சிலம்பும் அப்படிப்பட்டதே! வலக்கால் சிலம்பு வேறு. இடக்கால் சிலம்பு வேறு; திருடு போன சிலம்பு எக்கால் சிலம்போ, அக்கால் சிலம்பே விற்க வருபவனும் கொண்டு வருகிறானாம்!

இது வியப்பின் மேல் வியப்பு இல்லையா?

ஒருவர் கால் செருப்பு மற்றவர்க்குச் சேர்வது இல்லை. காலளவு ஒத்ததாக இருந்தால் மட்டுமே சேரும்! கண்ணகியார் காலும், கோப்பெருந்தேவியார் காலும் ஒத்த அளவாக அமைந்தனவாம். இனி வியப்பைப் பெருக்க முடியாது. அதற்கு ஓர் உத்தி உண்டு.

“வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந்தன்றே” என்னும் உத்தி!

கோப்பெருந்தேவி சிலம்பு மதுரையில் செய்யப்பட்டது. கண்ணகி சிலம்பு பூம்புகாரில் செய்யப்பட்டது செய்த இடமும் ஒன்றன்று; செய்தவரும் ஒருவர் அல்லர். கண்ணகியார் சிலம்பையும் கோப்பெருந்தேவியார் சிலம்பையும் வேறுபாடு சிறிது இருந்தாலும் அணிந்த அவர்கள் கண்டுபிடித்து விடுவர். கோப்பெருந்தேவியார் ஊடல் தீர்ப்புத் தூதுவனாகக் கண்ணகியார் சிலம்பே செல்கின்றது. அவர் மாறானது எண்ணாமல் தம்மதே எனக் கொள்கிறார். ஒருவேளை ஊடல் நிலையில் உற்றுப் பார்த்திரார் எனினும்,

‘காணாமல் போனது கண்டடைந்தோம்’

என்று வியக்கும் போதாவது உற்று நோக்கியிருப்பார். வியப்பிலேயும் உற்று நோக்கவில்லை என்றால் அது தனிப்பெரும் வியப்பே தான்.

வினைவிளை காலம் ஆதலால், சினையலர் வேம்பன் தேரான் ஆகின்றான். கண்ணகியாரும் அவனை நேரே ‘தேரா’ மன்னா என்றே விளிக்கிறார்.

அவனுக்கென்ன தேர்ச்சித்துணையர் இலரா?

இருந்தாலும் துணிந்து கூற முன் வந்திலரா?

‘கொன்றச்சிலம்பு’ கொணர்க என்றது, தேவியார் முன்னே செல்ல – தான் பின்னே செல்ல. சொல்வது கேட்டுத் திகைத்திலரா?

நாமே திகைக்கிறோம்!

‘கடையகத்தாளே’ என்று வாயில் காவலன்

கூறிய அளவில் ‘வருக; மற்றவள் தருக’

என்னும் காட்சிக்கு எளியன்! வேந்தன்.

“அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்து இறைமுறை
பிழைத்தோன் வாயி லோயே”

என்று **‘அறு அறு’** என அறுத்ததை அறியான்
எனினும் “தேரா மன்னா செப்புவ துடையேன்”
என்பது கேட்கத்தானே செய்தான் .
“என்கால் சிலம்பு கொண்ட கள்வன் நீயே
என்றதும் கேட்கத்தானே செய்தான்!”

“தேமொழி உரைத்தது செவ்வை நன்மொழி”

என்று, இனிதுறு சொல்லால் கனிவுறக் கூறியவன் தானே வேந்தன்!

"கள்வனைக் கோறல் கடுங்கோல் அன்று
வெள்வேல் கொற்றங் காண்"

என்று தானே சொல்கிறான்.

"என் கால் சிலம்பு மணியுடை அரியே"

என்றதைக் கேட்டதும்,

தேவியின் சிலம்பு முத்துடை அரியே என்று அவன் கூறிச் **'சிலம்பைத் தருக'** என்று தான் வாங்கிக் கொள்ளாமல் **முன் வைக்கத்தானே** சொல்கிறான். கண்ணகியார் தாமே சிலம்பைத் தளத்தில் அறைகிறார். மணிதானே மன்னவன் கன்னத்தில் அறைகிறது!

"யானோ அரசன் யானே கள்வன்"

"தென்புலங்காவல் என்முதல் பிழைத்தது"

"கெடுக என் ஆயுள்"

என்று குடைசாய – கோல் சாய – அணை சாய – அவன் சாய – தேவி சாய நேர்கின்றன.

"ஒவ்வொன்றற்கும் காரணம் காட்ட முடியாமல்"

'வினை' என ஒரு நிழல் பெயரை வழங்கினார்.

அடிகள்! கானல் வரி யாழின்மேல் தொடர்ந்த வினை இப்படித் தொடர்கிறது.

தீச்செயல் செய்தான் தீவினை,

"பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்"

என்பதன் மெய்ச் சான்றல்லவோ இது!

மனச்சான்றால் அம்மன்னன் தவிர்த்து இதுவரை எந்த அறக்கேடராவது வீழ்ந்த சான்று இல்லையே ஏன்?

"மனச்சான்று சாகடிக்கப்பட்டு விட்டது" என்பதன் சான்று தானே அது!

❖❖❖

15. கவுந்தியழகள்

இளங்கோவடிகளின் தேர்ந்து தெளிந்த சால்பு உள்ளத்தின் வெளிப்பாடு ஒன்றைக் கூறுக என்றால் முந்து நிற்க வல்லது கவுந்தியடிகள் என்னும் படைப்பே.

சமண சமயப் பற்றுமையின் விளக்கமே கவுந்தியடிகள் படைப்பு என்றும், இணைத்துக் கொள்ளப்பட்ட புனைவுப் படைப்பு என்றும் எது கூறினும் அவற்றையெல்லாம் கடந்த ஆன்ம நேயமே உயிராகக் கொண்ட, அருமைப் படைப்பு கவுந்தியடிகளாம்.

கவுந்தி, காவுந்தி, ஐயை, காவுந்தியடிகள், மாதவத்தாட்டி என்பவையெல்லாம் தமக்குரியனவாய்த் தாங்கிய அருளம்மை அவர்! பிறிதின் நோய் தம் நோயே எனக் கொண்டு, தாம் கொண்டதனை மெய்ப்பித்துக் காட்டிய மேன்மையர்.

சமயக்கட்டு சமயச்சடங்கு துறவு நிலை என்பவற்றை எல்லாம் தாண்டி நிற்க வேண்டியது – **ஆன்மநேயம்** என்னும் ஒன்றுமட்டுமே என்பதை இளங்கோவடிகளார் எண்ணி எண்ணிப் படைத்த படைப்பு கவுந்தியடிகள். ஐ என்பது தாய் : ஐ ஐ என்பது தாயின் தாயாம் பாட்டி. ஒளவை என்பதன் பொருளும் அது.

கண்ணகியார்க்கு 'நாத்துணை' யார்? தோழி யார்? தாய் யார்? பாட்டி யார்? செவிலி யார்? அறவர் யார்? அறிவர் யார்? அருளர் யார்? ஆருயிர் என நிலைநாட்டினார் யார்?

கரும்பாறைக்குள் கரும்பு ஆறும் தோன்றும் என்பதைக் காட்சி தொட்டுக் கடைநாள் வரை ஆன்மநேய வளர்முறையால் நிலைநாட்டிய அவர், **இளங்கோவடிகளார் உள்ளத் திறவுகோல் அன்னவராம்!**

பத்தாம் காதை தொடங்கிப் பதினைந்தாம் காதையொடு – நாடு காண் காதை தொடங்கி அடைக்கலக் காதையொடு – **ஆறுகாதை அளவிலோ அவர் அமைந்தார்?**

பதினாறாம் காதையில் ஆம் கொலைக்களக் காதையில்,

"மாதவத் தாட்டி வழித்துயர் நீக்கி
ஏதம் இல்லா இடம்தலைப் படுத்தினள்"

என்று பாராட்ட, இருபத்து ஏழாம் காதையில் (நீர்ப்படைக் காதை) அவர் "உண்ணா நோன்போடு உயிர்பதிப் பெயர்த்து" (83) கூற, இருபத்தொன்பதாம் காதையில் (வாழ்த்துக்காதை), ஜயந்தீர் காட்சியராகத் (8) திகழ - மூன்று காண்டங்களிலும் இடம்பெறும் பெற்றியராக விளங்குகின்றார்.

"சிலம்பு பொருளாக உலந்த பொருளீட்ட எழுக" என எழுந்த கண்ணகி, பூம்புகார் கடக்கு முன்னரே, 'மதுரை மூதூர் யாது?' என்று வினாவும் அவரை, முன்னூறு கல்தொலைவு எப்படிக் கொண்டு செல்வான்? அவர், நகைத்து வினாவினாலும், அவன் நகைப்பொடு ஆறு ஐங்காதமென நயமாகக் கூறினாலும், அவன் உள்ளகம் அலமராதா? இவ் வினாவுதலை எழுப்பிய இடத்துத் தோற்றம் தந்ததொரு தவச்சாலை! ஆங்கு முகம் காட்டியவரே கவுந்தியடிகள். கோவல கண்ணகியர்,

கண்டவர் வணங்கும் தூய வடிவாக விளங்கிய அவரை வணங்கினர். தூய தோற்றம்! கட்டமை சமயப் பிடிப்பு அழுந்தி நிற்க,

"உருவும் குலனும் உயர்பேர் ஒழுக்கமும்
பெருமகன் திருமொழி பிறழா நோன்பும்
உடையீர் என்னோ உறுக ணாளரிற்
கடைகழிந் திங்ஙனங் கருதிய வாறு?"

என வினாவுகிறார்.

"கங்குல் கனைசுடர் கால்சீயாமுன்", எவரும் அறியாவாறு புறப்பட்ட அவன் மான உணர்வு, முதற்கண் அதிர்வுக்கு ஆட்படுகின்றது!

அழகும் குடிப்பிறப்பும் ஒழுக்கமும் இறைவன் நூலிற் கூறிய
விரதம் தப்பாமையும் என்னும் இவற்றையெல்லாம்
ஒருதலையாக உடைய நீங்கள், **தீவினையாளரைப்போல**
நுமது இடத்தைக் கழிந்து வருவதற்குக் கருதியது என்னோ
என்று கேட்டார்!

அமர்வித்து, உரையாடி, ஒருவரை ஒருவர் புரிந்து கொண்ட பின்னர் இவ்வினா வினாவப் பட்டிருந்தால், கோவலன் மான அதிர்வு அடைந்திரான். அவன் விரும்பாத வினா எழும்பிய போது என் செய்வான்?

"உரையாட்டு இல்லை: உறு தவத்தீர்"

என்று மறுமொழி கூறினான்.

மிக்க தவத்தினை உடையீர் இவ்வினாவிற்கு விடையில்லை என்று சொல்லி, மேலும் அவர் வினவாமல் இருக்கத் தானே பேசினான்:

"யான், மதுரை மூதூர் வரைபொருள் வேட்கையேன்"

என்றான். "மதுரை மூதூர்க்குச் சென்று பொருள் தேடும் விருப்புடையேன்" என்ற அளவில் கவுந்தியார், மதுரைத் தொலைவை எண்ணினார்; வழியை எண்ணினார்; கண்ணகியின் மென்மையை எண்ணினார்;

"இவள் சிறிய மெல்லிய அடிகள், பருக்கைக் கல்லாகிய பகையை வெல்ல இயலா; காடு நாடு என்பவற்றைக் கடக்க இவள்நிலை ஏற்றது அன்று; இவற்றை அறிபவர் யார்? மேற்கொண்ட செயல் ஏற்றது அன்று; ஆதலால், செலல் வேண்டா என்று கூறியும் நீர் விடுவதாய் இல்லை" என்றார்.

"பாடகச் சீறடி பரற்பகை யுழவா
காடிடை இட்ட நாடுநீர் கழிதற்கு
அரிதிவள் செவ்வி அறிகுநர் யாரோ?
உரியது அன்று **ஈங்கு ஒழிகென ஒழியீர்"**

என்பது அது.

"ஈங்கு அமைகென அமையீர்" எனினும் இப்பொருளதே!

செவ்வி என்பதற்கு ஊழ்நிலை அறிவார் எவர்? என்பார் அடியார்க்கு நல்லார். **பின்வருவது அறிந்து, 'ஒழிகென ஒழியீர்'** என்று கூறியதாகக் கருதிவிடக்கூடாது என்று,

"இவர்க்குத் தவப்பயனாலே **சபித்தல் அன்றிக்**
கால உணர்ச்சி இன்மை அறிக"

என்பார். பின்னும் (165) கண்டறி கவுந்தி என்னும் இடத்தும்

"கால உணர்ச்சி இன்மை அறிக"

என்பார்.

மதுரைக்குச் செல்ல கவுந்தியார் எண்ணியே இருந்தார் போலும்! அல்லது தாம் செல்ல இருக்கும் திட்டத்தை உடனே மேற்கொள்ள இவர்கள் செலவு தூண்டியிருக்கவும் கூடும்!

"மொழிப்பொருள் தெய்வம் வழித்துணை"யாகக் கொள்பவர்

எனினும் தாம் கோவல கண்ணகியார்க்கு உதவினாற் போலவும், அவர்களொடு கூடித் தாமும் செல்ல வாய்த்தாற் போலவும் கொள்ள நேர்ந்தது ஆகலாம். அதனால்,

"மறவுரை நீத்த மாசறு கேள்வியர்
அறவுரை கேட்டாங்கு அறிவனை ஏத்தத்
தென்தமிழ் நன்னாட்டுத் தீதுதீர் மதுரைக்கு
ஒன்றிய உள்ளம் உடையேன் ஆகலிற்
போதுவல் யானும் போதுமின்"

என்றார்.

"அறிவனை வணங்கத் தமிழ் மதுரைக்குச் செல்லும் கருத்து உடையேன்; ஆதலால் யான் போவேன்; நீங்களும் வருக" என்னும் அவர் சொல் கோவலனுக்கு எதிர்பாரா இன்பமும் வியப்பும் ஆயின! ஊரைவிட்டுத் தாண்டு முன்னரே, போய்ச்சேரும் இடம் யாது எனக் கேட்பவரை நெட்ட நெடுவழி அழைத்துச் செல்வது எப்படி என உழன்ற அவன் உள்ளத்திற்கு ஆறுதல் வாய்க்கவே, அவரை வணங்கி,

"அடிகள் நீரே அருளுதிர் ஆயின் இத்
தொடிவளைத் தோளி துயர்தீர்த் தேன்"

என உவந்துரைத்தான். துயர் தீர்ந்ததாகவே முடிவு செய்துவிட்டான் கோவலன்! காலவழு அவன் களிப்பில் வந்து நின்றது.

கோவல, வயல்வழி சோலைவழி என இரண்டுவழி அல்லது வேறுவழி என ஒன்று இல்லை என்றவர் சோலை வழியில் செல்வது பற்றிக் கூறுகிறார்.

"கோவலன் காணாய், கொண்ட இந்நெறிக்கு
ஏதந் தருவன யாங்கும் பல கேண்மோ"

என்கிறார். "நாம் நடக்க மேற்கொள்ளும் வழியில் துன்பம் தருவன பலப்பல எங்கும் உள்ளன; அவற்றைக் கூறுகிறேன் கேள்" என்கிறார்.

துயர் தீர்ந்தேன் என்றவன் சொல்லி வாய்மூடுமுன், துன்பம் தருவன எங்கும் பல உள என்பது இன்புறக் கேட்கும் மொழியா? உண்மை எனினும் உளவியல் அறிந்து உளம் தளிர்க்க அல்லவோ கூறவேண்டும்?

கவுந்தியார் சொல்லும் செய்திகள் உள்ளம் தொடுவன! உருக்குவன! ஆனால் அதன் முன்னுரை?

இளவெயிலையும் தாங்கமாட்டாத இம்மென்மையளைச் **சோலை வழியில்** அழைத்துக் கொண்டு செல்வோமானால் நிலம்பிளக்க இறங்கிய வள்ளிக்கிழங்கைத் தோண்டி எடுத்ததனால் ஆய குழிகளைச் சண்பகப் பூக்கள் பொய்யாக மூடிப் பாராது நடப்பார்க்கு மேற்செல்ல இயலாத் துன்பத்தை ஆக்கும்.

அக்குழியைக் கண்டு ஒதுங்கிச் செல்வோரை முதிர்ந்த பலாப்பழங்கள் பகைபோலாகி மோதும்.

மஞ்சளும் இஞ்சியும் கலந்து பயிரிடப்பட்ட தோட்டத்தில் பலாக்கனியின் விதைகள் கிடந்து பருக்கைக் கற்களைப் போல் துயருறுத்தும்.

வயல் வழியில் செல்வோமானால் வாளைமீனைக் கவ்விக் கொண்டு நீர்நாய் ஊடறுத்துச் செல்லின் இவள் கலங்குவள்.

கரும்பில் கட்டிய தேன்கூடு முதிர்ந்து சிதைந்து ஒழுகும் தேன், நீரில் கலத்தல் உண்டு. அதனை நீர் வேட்கையால் அள்ளிக்குடிக்கவும் நேரும். (தேன் பருகுதல், சமண சமயத்தாரால் விலக்கப்பட்டவற்றுள் ஒன்று)

களைபறிப்பவர் வயல் வரப்புகளில் போட்ட வேளைப் பூவில் வண்டுகள் புகுந்திருத்தல் உண்டு. நடக்கும் அயர்வால் அப்பூவை மிதித்து விடவும் கூடும்.

வாய்க்கால் வரப்பில் நடக்குங்கால் ஆங்குள்ள ஆண் பெண் நண்டுகளாம் நந்தும் அலவனும் துயர் கொள்ளுதல் கண்டு தாங்க முடியாமை ஏற்படும். நின்னை விரும்பும் இவளுடன்,

அவ்வவ் விடங்களை அறிந்து அவற்றை அணுகாது

பாதுகாப்பாயாக என்றார். காவிரி வடகரை வழி இது.

கவுந்தியடிகள் பிச்சைக்கலம், தோளில் இடும் உறி, மயில்தோகை ஆயவற்றைக் கொள்கிறார் தெய்வ மொழியாம் மந்திரம் வழித்துணையாக என வேண்டிப்புறப்படுகிறார். ஆதலால் தவச்சாலையில் இருந்தே இவற்றைக் கூறினார் என்பது விளக்கமாம்!

உடன்தான் தாமும் வருகிறாரே! அதன்முன் ஏன் இவ்விரிவுரை? சமயவாணர் உரைத்தலும் கேட்டலும் ஆழங்கால்பட்டுப் பழகிப் போனமுறை! 'கொளுத்தக்கொண்டு கொண்டது விடாமை' என்பது மடம் என்பதன் பொருளாதல் அறிக.

மக்களே வாருங்கள்! எழில் மிக்க சோலை! இனிய வயல்! பசுமையின் கொள்ளை! மண்ணின் மலர்ச்சி! உயிர்களின் கிளர்ச்சி! பாருங்கள் பாருங்கள் இயற்கையின் எழில் இருக்கை! எனக் காட்டிக் காட்டிக் களிப்பொடு செல்லலாமே!எத்தனை ஆன்மநேயம்! அச்சம் பிணைக்கிறதே! துயரம் கப்ப ஆகிறதே. இளங்கோவடிகள் கவுந்தியடிகளாக மாறி, படிப்படியே கனிவுறச் செய்யும் எழிலின் படைப்பு இஃது!

வயலும் பொழிலும் ஊரும் தாண்டி ஒரு நாளுக்குக் காதத்தொலைவு என்பதற்கு மேல் நடவாராய்ப் பலநாள் தங்கிச் செல்லும் பொழுது ஒருநாள் ஆற்றுவீ என்னும் அரங்கத்தமைந்த மரச்செறிவமைந்த சோலை ஒன்றனை அடைந்தனர். ஆங்கிருந்ததொரு கல்மேடை (சிலாவட்டம்). அதில் அருகதேவர் நெறிவழாது போற்றும் சாரணர் வந்து தோன்றினர். அவர்களைக் கௌந்தியடிகளொடு கோவல கண்ணகியரும் வணங்கினர். 'முன் செய்த வினை அகல்க' என்று வேண்டினர்.

உள்ளம் என்னும் விளக்கால் அச்சாரணன் இவர்களுக்கு வர இருக்கும் துன்பத்திற்கு வருந்திக் கவுந்தியடிகளை நோக்கி, "எவராலும் ஒழிக்க ஒழியா நுகரச் செய்யும் தீவினையைக் காண்பாயாக. விளை நிலத்து இட்ட வித்துப் போல் வரும் விளைவை ஒழிக்க இயலாது. கடிய காற்றில் வெற்றிடத்து வைக்கப்பட்ட விளக்குப்போல அழியின் அல்லது உடம்பொடு உயிர்கள் நில்லா ஒளி வடிவாகிய அருக தேவனைச் சார்ந்தாலல்லது பிறவி நீங்கார்" என்று சாரணர் தலைவர் கூறினார்.

சாரணர் அறவுரை கேட்ட கவுந்தியார் கைகளைத் தலைமேல் கொண்டு, அருகதேவன் அருளிச் செய்த அறவுரை கேட்கத் தவிரப் பிறவுரை கேட்க என் செவிகள் திறவா. அருகதேவன் திருப்பெயர்களைக் கூறுவதன்றிப் பிற பெயர் கூறாது என் நா.அப்பெருமான் திருவடிகளைக் காண்பதற்கல்லது மற்றையடிகளை என் கண்கள் காணா. அவனை அன்றிப் பிறரை நிலத்தில் வீழ்ந்து வணங்காது என் மெய். அவனை வணங்க அன்றி என் கைகள் குவியா. அவன் அடியை அல்லது என் தலை எவரையும் வணங்காது. அவன் அருளிய ஆகமத்தை ஓதிப் பூரிப்பதன்றிப் பிறிதொன்றை ஓதிப் பூரியாது என்மனம் என்று கூறிய கவுந்தியடிகள் உரையைக் கேட்ட சாரணர் ஒரு முழம் எழுந்து, ***"பிறப்பினைத் தரும் பாசம் கவுந்திக்குக் கெடுவதாக"*** என்று கூறி வான் வழியே சென்றனர். பின்னர் மூவரும் காவிரியாற்றைப் பள்ளியோடத்தால் கடந்து தென்கரையை அடைந்து ஒரு சோலைக்கண் தங்கினர்.

ஓர் ஊரில் தங்கி இரவு கடந்த காலையில் புறப்பட்டனர்; வெயிற்போதும் நடந்தனர். நீர்வேட்கை உண்டாயது. கோவலன் ஒரு கிளை வழியில் சென்று பொய்கை ஒன்றை அடைந்தான்.

அங்கே ஒரு தெய்வம் மாதவியின் தோழி வயந்தமாலை போல் தோன்றி வாழ்க்கையில் வெறுப்புற்ற மாதவி என்னை விலக்கிவிட்டாள். யான் வணிகக் கூட்டத்தொடு வந்தேன். எனக்கு யாது சொல்கிறாய் என, கோவலன் ஐயுற்று மந்திரமொழி ஒன்று கூற, அவள் அஞ்சித் தன் உருவம் காட்டி, கண்ணகிக்கும் கவுந்தியடிகட்கும் இதனைக் கூறுதல் வேண்டா என்று கேட்டுப் பிரிந்தது. கோவலன் கொண்டு வந்த பொய்கை நீரைப் பருகி வேட்கை தீர்ந்தனர்; வெயில் மிகுதலால் மேலும் நடவாராய் ஓர் ஐயை கோட்டம் அடைந்து தங்கினர். உடன்பிறந்தவர் ஒருங்குடன் இருப்பது உண்டோ உறுதவத்தீர் என்றவுடன் பொங்கிய சீற்றம் கூறியவரைச் சாவிக்கிறது! சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லியை உறுதவத்தவர் கொள்ளலாமா? கொண்டு சாவித்தல், அவர்கள் தீவினையினும் பெரிய தீவினை செய்தாராவர் அல்லரோ! தவந்தருசாபம் அது, ஆதலால் அத்தவம் குற்றப்பாடு உடையது ஆகின்றதே!

பழிப்புக்கு ஆட்பட்ட கோவல கண்ணகியர் 'நெறியின் நீங்கியோர் நீரல கூறுதலை அறியாமை என்று அறியல் வேண்டும்' என்று அல்லவோ அருந்தவ வடிவர்க்கு அறிவுரை கூறத்துணிகின்றனர். சாவநீக்கமும் அவர்கள் அல்லரோ வேண்டுகின்றனர்.

கோவல கண்ணகியரை எள்ளியது தம்மை எள்ளியதனினும் மேலாக எண்ணி வருந்திய வருத்தம் தானே சாவிப்பு ஆகியது! தவ இழப்பையும் தாங்கும் துணிவை அவர்க்குத் தந்தது. வினைக்கொள்கை அழுத்தத்தினர் 'பழித்தலும் பழிக்கக் கேட்டலும்' வினைவழிப்பட்டது என்றல்லவோ அமையவேண்டும். அன்றியும் அவர்கள் நெறியர் அல்லரே! நெறியின் நீங்கினோரை நெறிகாட்டுவோர் இந்நிலைப்படுத்தல் நேரிதா?

கவுந்தியடிகள் உள்ளக் காய்வு கண்ணகி கோவலர் தொடர்பால் கனியத் தொடங்கிவிட்ட கவின் இஃதாம்!

ஐயை கோட்டத்தின் ஒருபால் சாலினி தெய்வமருள் ஏறி ஆடுகிறாள். அவள் ஒருபுறத்தே இருந்த கண்ணகியைக் கண்டு எயினர்க்குக் காட்டி,

"இவளோ,
கொங்கச் செல்வி குடமலை யாட்டி
தென்தமிழ்ப் பாவை செய்ததவக் கொழுந்து
ஒருமா மணியாய் உலகீற்கு ஓங்கிய
*திருமாமணி என"*க் கூறுகிறாள்.

இனி வெயில்மிக்கிருத்தலால் பகல்நடை வேண்டா; இரவுச் செலவு நலமாம் எனக் கோவலன் கூற, கவுந்தியடிகளும் இசைந்து நிலவு ஒளியில் வழிச் செலவு மேற்கொள்கின்றனர்.

கூகைகள் குழறின; புலிகள் குமுறின; அஞ்சுதல் வேண்டா என்று கூறி,

"தொடிவளைச் செங்கை தோளிற் காட்டி
மறவுரை நீத்த மாசறு கேள்வி
அறவுரை கேட்டாங்கு ஆரிடை கழிந்து."

நடந்தனர்.

"மதுரைத் தென்றல் வந்தது காணீர்
நனிசேய்த் தன்றவன் திருமலி மூதூர்"

என்பது சொல்லக்கேட்டு,

"வையை என்னும் பொய்யாக் குலக்கொடி
புனல்யா றன்று பூம்புனல் யாறென...
மாதவத் தாட்டியொடு மரப்புணை போகி
அறம்புரி மாந்தர் அன்றிச் சேராப்
புறஞ்சிறை மூதூர் புக்கனர்"

புறஞ்சிறை மூதூர் என்றது புறஞ்சேரி; அது துறவோர் இருக்கையாம்.

தம்மொடு வந்தாள், தெய்வமேறப் பெற்ற சாலினி வாக்கால் தவக்கொழுந்து எனப் பாராட்டப்படுகிறாள்! கொங்கு – குடமலை – மட்டுமன்று. உலகுக்கு ஓங்கிய திருமாமணி எனப்படுகிறாள்! தவ மூதாட்டியுள்ளம் நெகிழ்ந்து போகின்றது! உள்ளம் சுழல்கின்றது! மெய்யியல் தத்துவங்கள் கழல்கின்றன! இறுக்கம் இளக்கமாகின்றது! உருக்கு, உருகுபனி ஆகின்றது!

"காலை முரசம் கனைகுரல் இயம்பக்
கோவலன் சென்று கொள்கையின் இருந்த

காவுந்தி ஐயையைக் கைதொழுது ஏத்தி" னான்.

"என்னோ இங்ஙன் கடைகழிந்த வாறு"

என்று கவுந்தியடிகள் கேட்ட வினாவுக்கு, "உரையாட்டில்லை" என்றவன் தான் உரையாடுகின்றான் மேலே!

"நெறியின் நீங்கியோர் நீர்மையேன் ஆகி
நறுமலர் மேனி நடுங்குதுயர் எய்த
அறியாத் தேயத்து ஆரிடை யுழந்து
சிறுமை யுற்றேன் செய்தவத்தீர் யான்
தொன்னகர் மருங்கின் மன்னர் பின்னோர்க்கு
என்நிலை உணர்த்தி யான்வரும் காறும்
பாதக் காப்பினள் பைந்தொடி யாகலின்
ஏதம் உண்டோ அடிகள் ஈங்கு?"

என்கிறான்.

'எற்றென்று இரங்குவ செய்'தானாக நைந்து தேம்பி, நும்மையன்றி எமக்கு எவருளார்? நும் பாதக் காப்பினள் பைந்தொடி என்றானுக்குக் கவுந்தி கூறுகிறார்: –

முற்பிறப்பில் நல்வினையை மிகச்செய்து சிறிது தீவினையும் செய்த தாலே உன் உறவையும் உடைமையையும் இழந்து நின் மனைவியொடும் துயருற்றவனே,

எந்த உயிர்க்கும் எவரும் பாவம் செய்தலின் நின்றும் நீங்குமின்; நீங்கீர் எனின், அதன் விளைவாகிய துயரைத் தீவினையூட்டும் என்று அறங்களைப் பெரியோர் எவ்வளவு வற்புறுத்திச் சொன்னாலும் **உறுதியற்றோர்** அதனைக் கொள்ளாராய்த் தீவினை யூட்டுங்கால் செயலற்று நிற்கின்றனர். கற்கவேண்டுவ கற்றோர் அவற்றின் பயனை நுகருங்கால் அதற்கு வருந்தார்; இது நாம் செய்ய வந்ததே என்று கொள்ளுவர்.

மகளிரைப் புணர்தலால் வரும் துன்பமும், பின்னர்ப் பிரிதலால் வரும் துன்பமும், பொருள் தேடுதற் பொருட்டு வரும் துன்பமும், அப்பொருள் அகல்தலால் வரும் துன்பமும் என முழுவதும் துன்பமேயாம். இத்துன்பங்கள் பற்றற்ற தனிவாழ்க்கையையுடைய பெரியோரிடத்து இல்லை. புணர்தல் பொருள் என்பவை காரணமாகத் துன்பம் எய்தினோர் இன்று நின் அளவினோர் அல்லர். முன்னும் எண்ணிறந்தோர்.

தன்தந்தை ஏவலால் மனைவியொடு காடு சென்று அவளைப் பிரிந்து அல்லல் பட்டவன் இராமன் என்பதை நீ அறியாயோ?

மண்ணையும் அரசையும் இழந்து மனைவியொடு சென்ற நளன் காட்டிலே நள்ளிருளிலே அவனே பிரிய நேர்ந்தது நீ அறியாயோ?

அவரைப் போல் நீயும் துயருற்றனை எனினும் அவரினும் நீ பெரிய நன்மையை உடையாய்; அஃது யாது என்றால், நீ உன் காதலி உன்னைப் பிரியாது வாழும் வாழ்வைப் பெற்றாய் என்று தேற்றி நகர்க்குச் சென்று வருவாயாக என விடுத்தார்.

வினைக் கொள்கையில் அழுந்தி நின்று அறவுரை கூறத் தொடங்கிய அவர், நின்னினும் குறையா நிலையர் பட்ட துயர்களை அறிவாய் அல்லவோ! அவர் பெறாப்பேறும் நீ பெற்றுளை அலவோ! என ஒரு பால் அடிகளாகவும், மற்றொருபால் அன்னையராகவும் – ஐயையாம் பாட்டியராகவும் – விளங்குகிறார்.

மதுரை அகநகர் கண்டுவந்த கோவலன் புறஞ்சேரி அடைந்தான். இரவு கழிந்து தான் கண்டு வந்த காட்சியைக் கோவலன் கவுந்தியடிகளுக்குக் கூறினான். அப்பொழுது மாடலமறையோன் கவுந்தியடிகள் இருக்குமிடத்து வர, அவனைக் கோவலன் வணங்கினான். கோவலன் முன்னர்ச்செய்த அறச்செயல்களையெல்லாம் அடுக்கிக் கூறி,

"இம்மைச் செய்தன யானறி நல்வினை
உம்மைப் பயன்கொலோ ஒரு தனி உழந்தித்
திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்தது"

என்றான். அப்பொழுது கோவலன்,

ஒரு கீழ் மகனால் இந்நகரில் கண்ணகி நடுங்கவும் யான் என் உடை கொள்ளப்படவும் கடாவின் மேல் ஏறவும் கண்ணகியொடு துறவர் பெறும் பேற்றைப் பெறவும், போதி அறவோனிடம் மணிமேகலையை மாதவி அளிப்பவும் வைகறை யாமத்தே கனவு கண்டேன் ஆதலால் அது நன்றன்று; உடன் வந்துறும் என்றான்.

அதனைக் கேட்ட அளவில் துறவோர்க்கு அல்லது இப்புறஞ்சேரி பிறவோர்க்குப் பொருந்தாது. ஆதலால் நின்னை வணிகர் ஏற்றுக்கொள்வார். இவ்விடத்தில் உன் இருப்பை விட்டு நீங்கு; கதிர் செல்வதன் முன் உன் காதலியொடு மதுரை மாநகர் புகுக என்று கவுந்தியடிகளும் மாடலனும் கூறினர்.

நகருள் சென்ற கோவலன் வணிகர் எவரையும் கண்டு தன்னை அடையாளப்படுத்தினான் அல்லன். ஆங்குச் சென்று தங்கும் இடம் என எதனையும் தேர்ந்தான் அல்லன். பூம்புகார் தொட்டு மாமதுரை வந்த கவுந்தியடிகளும், கோவலன் அறவன் என்பதை அறிந்த மாடலனும் ஒருங்கே ஓடு மதுரைக்குள் என்கின்றனர்! கனவுச் செய்தியின் விளைவா? மாந்த நேயத்தை மறக்கச் செய்யும் கொடுமைக்கு அது தள்ளிவிட்டதே எனத்தோன்றும்!

தற்செயலாக அவண் வருகிறார் ஆயர் முதுமகள் மாதரி என்பவர். புத்தர் பெருமான் முன் நின்ற சுசாதையார் போல, அவரை முன்னரே அறிந்தவர் அல்லர் கவுந்தியார். ஆயினும்,

"ஆகாத் தோம்பி ஆப்பயன் அளிக்கும்
கோவலர் வாழ்க்கையோர் கொடும்பாடு இல்லை
தீதிலள் முதுமகள் செவ்வியள் அளியள்"

இவளிடம் கண்ணகியை ஒப்படைப்பது துன்பமற்றது என எண்ணினார். மாதரி கேட்பாயாக! இக்கண்ணகியின் கணவன் கோவலன். அவன் தந்தை மாசாத்துவான். அவன் பெயரைக் கேட்ட அளவில் அரிய பொருளைப் பெற்றதுபோல் மகிழ்ந்து இவர்களைத் தம் விருந்தினராகப் பெருஞ்செல்வர்கள் கொள்வர். அதுவரை

"இடைக்குல மடந்தைக்கு அடைக்கலம் தந்தேன்"

என்றார். அவரைப்பேணும் முறையையும் பேணலால் உண்டாம் பயனையும்,

"மங்கல மடந்தையை நன்னீர் ஆட்டிச்
செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் தீட்டித்
தேமென் கூந்தற் சின்மலர் பெய்து
தூமடி உடீஇத் தொல்லோர் சிறப்பின்
ஆயமும் காவலும் ஆயிழை தனக்குத்
தாயும் நீயே ஆகித் தாங்கு; ஈங்கு
என்னொடு போந்த இளங்கொடி நங்கைதன்
வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள்
கடுங்கதிர் வெம்மையிற் காதலன் தனக்கு
நடுங்கு துயர் எய்தி நாப்புலர வாடித்
தன்துயர் காணாத் தகைசால் பூங்கொடி

இன்துணை மகளிர்க்கு இன்றி யமையாக்
கற்புக்கடம்பூண்ட இத்தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலமால்"

என்று கூறினார். 'பத்தினிப் பெண்டிரால் நாடுபெறும் நலமும், தவத்தவர் தரும் அடைக்கலம் மிகச்சிறிதே எனினும் மிகப்பேரின்பம் நல்கும் என்பதும் விரித்துக் கூறிச் சான்றும் காட்டினார். மேலும், இங்கே நீட்டித்து இராமல் நீ போ' என்று விடுத்தார். மகிழ்வொடு மாதரி அழைத்துச் சென்று தம்மனைக் கண் புகுந்தார்.

கண்ணகியையும் கோவலனையும் கனவுக்காட்சியைக் கூறிய அளவில் மாடலன் கூறினாலும், கவுந்தியடிகள் ஏற்கலாமா? உடனே போ எனக் கூறலாமா?

மாதரி வாராக்காலும் விடுத்திருக்கத் தானே செய்வர்? ஏனெனில், அவரைக் காணுமுன்னரே போ என்றனரே! பொழுதும் சாய்ந்து இரவு வருவது ஆயிற்றே! இரக்கமிக்க அல்லது இரக்கமுடைய செயலா?

கண்ணகியாரை, கற்புக்கடம் பூண்ட இத்தெய்வம் அல்லது பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலமால் என்கிறாரே! அருகதேவன் திருப்பெயர்களைக் கூறுவது அன்றிப் பிறபெயர் கூறாது என் நா என்றவர் அல்லரோ அவர்! ஏன் விரைவுபட்டு புதுவராம் அவர்கள் நிலையை எண்ணாமல் விடுக்கிறார்?

"அறத்துறை மாக்கட் கல்லது இந்தப்
புறச்சிறை இருக்கை பொருந்தாது"

என்பது அவர் உள்ளத்தை அலைக்கழிக்கிறது. கோவலன் ஊர்காணப் புறப்படுமுன்,

"பாதக் காப்பினள் பைந்தொடி யாகலின்
ஏதம் உண்டோ அடிகள் ஈங்கு? (இல்லை)"

என்று கூறினானே! இருக்கக்கூடா இடத்து இருக்கச் செய்து, காவற் கடமை பூண்ட யானே, கவலைக்கிடமாகச் செய்துவிடின் அம்மவோ தாங்கேன்; கூடாது! என விரைவுப் படுத்துகிறார்!

அவரோ தவப்பள்ளியர்; கோட்டம் பள்ளி என்பன அன்றிப் புகாத உறுதியர்! உடனாகிப் போகவோ, அவர் நிலை இடம் தரவில்லை . அன்றி

அவர் மதுரை வழியையே அறியாது, அறிந்தார் உரை கேட்டு வந்தவர்; துறவுத்தூயர்! என் செய்வார்?

பருந்து வட்டமிட்டு வருவதாக நினைத்து ஒலி எழுப்பிக் குஞ்சைக் கூட்டுக்குள் அல்லது வீட்டுக்குள் செல்லவிடும் தாய்க்கோழி அன்ன தகவில் உரைக்கிறார்! **கோவல கண்ணகியர், அவரைத் துறவு நிலை – சமயக்கட்டு – என்பவை எல்லாம் கடந்த கனிவராக்கிவிட்டனர்.**

பதினாறாம் காதையில்

"மாதவத் தாட்டி வழித்துயர் நீக்கி
ஏதம் இல்லா இடம் தலைப் படுத்தினாள்"

எனக் கூறப்படுகிறார்.

ஏதம் ஏற்பட்டதை உணர்ந்து, உள்ளகம் ஒடுங்கி, உண்ணா நோன்பு கொண்டு, உயிர்க் கொடை புரிகிறார்!

மாடலன் கழுவாய் தேடி நீராடித் தீர்த்தது போலத் தீர்த்துக் கொண்டாரா? ஐயந்தீர் காட்சியராக அல்லவோ நிறைவுறுகிறார்.

"ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணிய துடைத்து"

என்பதை நிலைநாட்டப் படைக்கப்பட்டார் போலும்.

"தெய்வமாய்,
மண்ணக மாதர்க் கணியாய கண்ணகி
விண்ணகமா தர்க்கு விருந்து" (கட்டுரை காதை)

என்றதுபோல் **கவுந்தியாரும் விண்ணக விருந்தாகினார் போலும்!** "பற்றறலே வீடு பேறு; அது பேராப் பெருநிலை" என்பது சமயநூற் கொள்கை. கவுந்தியடிகள், தம்நலப்பற்று அற்றார் எனினும் அருகன் அடிகளே பற்றாகப் பற்றினார் எனினும் கண்ணகியார் மேல் ஏற்பட்ட தெய்வ நிலைப்பற்று, பாதக்காப்பினள் என்பதை மாதரிமேல் சுமத்தினும் தம் மேல் சுமத்தப்பட்ட பற்று, பாதுகாப்பைக் காக்கவியலா அவலக்கவலை, அதனால் உண்ணா நோன்பால் உயிர்நீத்த உரன் என்பவற்றால் அவர் தொண்டில் – தம்நலமற்ற தொண்டில் தோய்ந்தாரே அன்றி, "அற்றது பற்றெனில் உற்றது வீடு" என்பதை இழந்தவரே ஆவர். அதனை, அவரே விரும்பி ஏற்றவரும் ஆவர்.

"வீடும் வேண்டா விறல்" நிலை உற்றவர், **மன்னுயிர் ஓம்பும் கடமையில் குன்றார்! தனனுயிர் ஓம்பும் பற்றற்ற நிலையைக் கருதார். பற்றுற்ற நிலையில் மன்னுயிர் ஓம்பும் தொண்டிலே நிலைபேறமைவதே பிறவி நோக்காகக் கொள்வர்.**

"எனக்கு வீடு வேண்டா! பிறவாமை வேண்டா
எனக்குத் தொண்டு வேண்டும்! தொண்டுக்காகப் பிறப்பு வேண்டும்!
தொண்டிலா வீடு வேண்டா! வேண்டா!"

என்ற **திரு.வி.க.வின் முன்னோடி கவுந்தியடிகள் எனல் சாலும்!**

"தொண்டலால் துணையும் இல்லை" என்னும் பெற்றியைக் கண்ணகியார் தொடர்பால் பெற்று, **வீடும் வேண்டா விறலில் விளங்கியவர் கவுந்தியடிகள் எனப் போற்றுவோம்!**

❖❖❖

16. இன்பத் துன்பு

ஓர் அறத்தைக் கூறுவதில் இருவகை உண்டு. ஒன்று, உடன்பாடு; மற்றொன்று எதிர்மறை.

திருக்குறளில், "நட்பு, கூடா நட்பு
ஒழுகுகம, கூடா ஒழுகுகம
செங்கோன்மை, கொடுங்கோன்மை

என்பன போன்றவற்றைக் கருதுக. இவை அதிகாரப்பகுப்பு. ஒரு பாடலிலேயே இவ்வாறு உடன்பாடு எதிர்மறை என இருவகையும் இடம் பெறப் பாடுதல் உண்டு.

"ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்."

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று"

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று."

இன்னவை காண்க.

வாழ்த்துவகை பல. அவை உடன்பாட்டு வகையாலேயே பெரிதும் இடம்பெறும். ஆனால் எதிர்மறை வகையிலும் இடம் பெறல் காணக்கூடியவையே. அந்நிலையில் பாவலர் உளக்குறிப்பு வெளிப்படு உத்தியாக அமைதலையும் அறியலாம்.

அகப்பாடல் ஒன்றில் (86)

"கற்பினின் வழாஅ நற்பல உதவி
பெற்றோன் பெட்கும் பிணையை ஆகு"

என்பது மங்கல மகளிர், மங்கல நீராட்டி மங்கல வாழ்த்தாகக் கூறுவது.

"கற்புடன் வாழ்ந்து நற்பல உதவி"

எனின் உடன்பாடாகி விடல் இயல்பு, தலைவன் தலைவி பெயர் சுட்டிக் கூறப்படாத அகப்பாட்டு வாழ்த்து அது (அகம் 86)

இளங்கோவடிகளார் 'மங்கல வாழ்த்துக் காதை' என்பதே முதல் காதையாகக் கொண்டு நூலை இயற்றுகிறார்.

திங்கள், ஞாயிறு, மழை, பூம்புகார் வாழ்த்துகளை நூல் வாழ்த்தாக அல்லது காப்பிய வாழ்த்தாகக் கூறுகிறார்.

கோவல கண்ணகியர் திருமணம் நிகழ்த்தும் மகளிர், கண்ணகியைக்,

"காதலற் பிரியாமல் கவவுக்கை ஞெகிழாமல்
தீது அறுக என" ஏத்துகின்றனர்.

மூன்று வாழ்த்துமே உடன்பாடாக அமையவில்லை

"காதலால் ஒன்றி கவவுக் கையளாய்
நலமுறுக"

என வாழ்த்த எந்த இடரும் அடிகளார்க்கு இருந்திராது. எனினும் மூன்றையும் எதிர்மறை வாழ்த்தாகவே உரைத்தார் (1:61-62)

கோவல கண்ணகியர் வழிவழியாக வாழ்ந்து வந்த பூம்புகாரை,

"பதியெழு வறியாப் பழங்குடி கெழீஇய
பொதுஅறு சிறப்பில் புகாரே ஆயினும்
நடுக்கின்றி நிலைஇய என்ப தல்லதை
ஒடுக்கம் கூறார் உயர்ந்தோர் உண்மையின்"

இங்கேயும் அனைத்தும் எதிர்மறையே!

எழுவு அறியாது, பொதுஅறு, நடுக்கு இன்றி, ஒடுக்கம் என்பவற்றைக் காண்க.

கண்ணகியாரைத் 'தீதிலா வடமீனின் திறம் இவள்திறம்' என்னும் இடத்தும் எதிர்மறையே ஆகின்றது : "அருந்ததி அன்னாள் என்கிறாரே (64) சாலி ஒருமீன் தகையாள் என்கிறாரே (51)

கோவலன் மண்தேய்த்த புகழன்; அவனைப் பாராட்டுவார்

"பண் தேய்த்த மொழியர்! தேய்க்காமல் வளர முடியாதா?"
"குலத்திற் குன்றாக் கொழுங்குடி" (2:8)

கண்ணகியைப் பாராட்டும் கோவலன்

"தீராக் காதலனாம்" (2:36)

அவன் பாராட்டுவதோ ***"குறியாக் கட்டுரையாம்"*** (2:37)

மங்கல அணி, ***"மறுவின் மங்கல"*** அணியாம் (2:63)

மாசறு பொன்னாம். காசறு விரையாம் (2:73-74)

"மலைஇடைப் பிறவா மணி"
"அலையிடைப் பிறவா அமிழ்து"

"யாழிடைப் பிறவா இசை" (2:77-79)

"மறப்பருங் கேண்மை" (2:85)

இவ்வெல்லாமும் முதலிரண்டு காதைக் குள்ளேயே!

"சிறப்பிற் குன்றாச் செய்கையொடு பொருந்திய
பிறப்பிற் குன்றாப் பெருந்தோள் மடந்தை" (3:5, 6)

"மூன்றின் ஒன்று குறைபடாமல்" (3:9)

"ஆசின்றுணர்ந்த ஆசான்" (3:32)

"வசையறு கேள்வி" (3:35)

"அசையா மரபு" (3:36:42)

"மாற்றோர் செய்த வசை" (3:43)

"நாத் தொலைவில்லா" (3:44)

இப்படி எண்ணின் மிகப்பல்கும். ஆகலின் எதிரிடையில் தொடரும் சில இடங்களை மட்டும் காண்போம். மாதவி ஆடல் பாடல் அழகு என்பவற்றில் மயங்கிய கலைவல்லானாம் கோவலன், 1008 கழஞ்சு தந்து மாலையை வாங்கி,

"விடுதல் அறியா விருப்பினன் ஆயினன்
வடுநீங்கு சிறப்பின்தன் மனையகம் மறந்"தான்

இரண்டும் முரண்கள் இல்லையா. "வடு நீங்கு", "விடுதல் அறியா". அந்திமாலைப் பொழுது வருகிறது கதிர் மறைகிறது; மதியும் தோன்றவில்லை. அரைசு கெடுத்து அலம்வரும் அல்லல் காலையாகிறது. கையறு நெஞ்சக் கண்ணகி ஊதுலைக்குருகின் பெருமூச்சுவிட்டு நிற்றல் கழி துயராகின்றது (குருகு = துருத்தி) இவை எதிரது உரைத்தல் இல்லையா?

கண்ணகி கருங்கண்ணும் மாதவி செங்கண்ணும்

முறையே இடமும் வலமும் துடித்தன என்கிறார்.

கருங்கண் என்றது, கண்ணகிக்குப் புணர்ச்சி இல்லாமையால்
செங்கண் என்றது, மாதவிக்குப் புணர்ச்சி விதும்பலால்
கண்ணகிக்குக் கூட்டமுண்டாகையால் இடக்கண் துடித்தன
மாதவிக்குப் பின்பு பிரிவுண்டாகையால் வலக்கண் துடித்தன

என்பது அரும்பத விளக்கம் (5: 237-239)

கானல்வரியில் வரும் யாழ், 'குற்றம் நீங்கிய யாழ்': அதுவோ (கூடலை ஊடல் ஆக்க) ஊரும் உறவும் ஒழித்து ஓட வைக்கிறது!

(உறவோடிருந்தும் மாதவி அலமருகிறாள்; தனித்துயர் அடைகிறாள்.)

(தனித்திருந்த கண்ணகி தீக்கனவு கண்டு கலங்குகிறாள்!

ஆறுதல் கூறவந்த தோழி தேவந்தி தீர்த்தநீர் ஆடிக்

கணவனைக் கூடலாம் என்கிறாள். கண்ணகியோ, 'பீடு அன்று' என்கிறாள். கண்ணகியார் காப்பியம் தொடங்கி ஒன்பது கதைப்பகுதி நடந்து சொல்லும் முதல்சொல், பீடு அன்று என்பதே!

"பெருமையராகிய நீங்கள் இப்படிப் புறப்பட்டதேன்?" என்று துணைக்கு வர இருந்த கவுந்தியடிகள் வினவக் கோவலனோ 'உரையாட்டில்லை' (சொல்லுதற்கு இல்லை) என்கிறான். வினாவுக்கு ஏற்ற விடையா இது. உறுகணாளரில் (துன்பமுறும் பாவமுடையவர்) புறப்பட்டீர். இவ்வாறு போதல் வேண்டா எனின், நீங்கள் கேட்கமாட்டீர் என்பதைக் கவுந்தியடிகள் கோவல கண்ணகியரிடம்

"ஒழிகென ஒழியீர்" என்கிறார்.

காடுகாண் காதையில் "தீது தீர் தென்னவன்" எனப்படுகிறான்.

அவனைக் காண்பவன் "தீத்திறம் புரிந்தோன்" (எரியோம்பாளன்) எனப்படுகிறான். மதுரைக்கு வழி கோவலனை நோக்கிக் கூறுகிறான் மாங்காட்டுப் பார்ப்பான்.

"கோத்தொழி லாளரொடு கொற்றவன் கோடி
வேத்தியல் இழந்த வியனிலம் போல"

என அவன் தொடங்கி வழி கூறுகிறான். (2:11: 60, 61)

கோவலன், ***"குன்றாக் கொள்கைக் கோவலன்"***

எனப்படுகிறான். (2:11:163)

கானுறை தெய்வம் ஒன்று கோவலன் தனித்த இடத்துத் தோன்றி "கோவலன் செய்தான் கொடுமை" என மாதவி கூறியதாகக் கூறுகிறது. (கக.178)

"காய்கதிர் திருகலின் நடுங்களுர் எய்தி
ஆறுசெல் வருத்தத்துச் சீறடி சிவப்ப
நறும்பல் கூந்தல் குறும்பல உயிர்த்து"க்
கண்ணகி ஐயை கோட்டத்தில் தங்குகிறாள்.
தேவராட்டி சாலினி என்பாள் கண்ணகியை நோக்கி,"

"இவளோ, கொங்கச் செல்வி குடமலையாட்டி
தென்தமிழ்ப் பாவை செய்த தவக்கொழுந்து
ஒருமா மணியாய் உலகிற் கோங்கிய
திருமா மணி"

என்கிறாள். இதற்கு அரும்பத உரையார் "கண்ணகிக்கு நிகழ்வது கூறினாள்" என்கிறார். மண்ணவள் விண்ணவள் ஆவாள் என்பது அஃதாம்.

அங்கிருந்து மதுரைப் புறஞ்சேரிக்குப் புறப்படுகின்றனர்.

"கோள்வல் உளியமும் கொடும்புற் றகழா
வாள்வரி வேங்கை மான்கணம் மறலா
அரவும் கூரும் இறைதேர் முதலையும்
உருமும் சார்ந்தவர்க் குறுகண் செய்யா
செங்கோல் தென்னவர் காக்கும் நாடு" (13:5-9)

என்று கூறுபவர், இரவு வருதலை,

"கொடுங்கோல் வேந்தன் குடிகள் போலப்
படுங்கதிர் அமையம்" காட்டுகிறார். (13:15-16)

உளியம் முதலியவை கேடு செய்யாச் செங்கோல் தென்னவர் நாடு என்று இக்காதையிலேயே பாராட்டிய கவுந்தியடிகள்,

"கொடுவரி மறுகும் குடிஞை கூப்பிடும்
இடிதரும் உளியமும் இனையா தேகு"

என்று கண்ணகிக்குக் கூறுகிறார்.

கோவலன் விடியலில் கண்ணகி கவுந்தியரை

"தீதுதீர் சிறப்பில் சிறையகத் திருத்தி"

ஒருபால் செல்கிறான். (13:41)

பின்னர் மூவரும் புறப்படுகின்றனர்.

'மதுரை நனிசேய்த் தன்று' என்ற கோசிகன்,
'தனிநீர் கழியினும் தகைக்குநர் இல்'

என்கிறான்.

வையையை அடைகின்றனர். வையையோ,

"தையற் குறுவது தானறிந் தனள்போல்
புண்ணிய நறுமலர் ஆடை போர்த்துக்

கண்ணிறை நெடுநீர் கரந்தன ளாகிப்
புனல்யா றன்றிது பூம்புனல் யாறென”க்

காட்சி தருகிறது (13: 171-174) மேலும்,

“தையலும் கணவனும் தனித்துறு துயரம்
ஐயமின்றி அறிந்தன போலப்
பண்ணீர் வண்டு பரிந்தினைந் தேங்கிக்
கண்ணீர் கொண்டு காலுற நடுங்கப்
போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி
‘வாரல்’ என்பனபோல் மறித்துக் கைகாட்ட...
அறம்புரி மாந்த ரன்றிச் சேராப்
புறஞ்சேரி மூதூர் புக்கனர்”

என்கிறது (185-190; 195-196)

1) தென்னவன் நாட்டில் எவற்றின் தீமை இல்லை என்றாரோ அவையே வருந்தச் செய்தலைச் சுட்டுகிறார்.

2) பாதுகாப்பான இடத்தை நலஞ்சேர் சிறப்பு என்னாமல் தீதுதீர் சிறப்பு என்கிறார்.

3) தகைக்குநர் – தடுப்பார்; தடுப்பார் இல்லையாம்.

4) கண்ணகிக்கு வருந்துயர்க்குக் கண்ணீர்ப் பெருக்காகக் காட்டாமல் பூவாடையால் போர்த்துச் செல்கிறதாம்.

5) கண்ணகிக்கும் கோவலனுக்கும் வருவதைத் தெளிவாக அறிந்தவை போல வண்டு இரங்கல் இசைத்து வருந்துகிறதாம்.

6) கோட்டைமேல் உள்ள கொடி வாராதே என்று தடுப்பதுபோல் அசைந்தாடுகின்றதாம்.

7) புறஞ்சேரி இல்லறத்தார் தங்குதற்கு ஆகாத துறவர் உறைவிடமாம்.

காண்பவை எல்லாம் அவலக் கவலைகளைக் குறிப்பாக உணர்த்துவனவாகவே காட்டுகின்றார் அடிகள்.

இரவு புறஞ்சேரியில் தங்கி மதுரையில் தம் தந்தையின் நண்பர் எவரையேனும் அறியுமாறு விடியலில் புறப்படும் கோவலன் “உம் காலடிக்

காப்பில் இவள் இருப்பதால் 'ஏதம் உண்டோ ?" என்கிறான்! 'இல்லை' என்பது அவன் எண்ணம்!

அந்நிலையில் கவலைப்படேல் எனாமல் வினையைப்பற்றி 37 அடிகள் கூறிப், "பொருந்துழி அறிந்து போதீங்கு" என்கிறார்.

வினை விடாது என்பதை இராமன், தருமன், நளன் கதைகளையெல்லாம் கூறுகிறார்.

புறஞ்சேரி வந்த மாடல மறையோன் கோவலன் நலங்களைக் கூறிப் பாராட்டுமளவில் கோவலன், "மதுரையில் கண்ணகி நடுங்கு துயரெய்தவும், தான் உடையிழந்து எருமைமேல் ஏறி ஊரவும், மணிமேகலையை மாதவி போதி அறவனிடம் ஒப்படைக்கவும் நனவு போல நள்ளிருள் யாமத்துக் கனவு கண்டதாகக் கூறினான்; அது விரைவில் எய்தும்" என்றான். உடனே, கவுந்தியும் மாடலனும்,

"அறத்துறை மாக்கட் கல்லது இந்தப்
புறச்சிறை இருக்கை பொருந்தாது"

"ஆதலால் மாலையாவதன் முன் மதுரை புகுக" என ஏவுகின்றனர். அப்பொழுதில் அவண் வந்தார் மாதரி! அவர் அடைக்கலமாக ஒப்படைக்கிறார் கவுந்தி.

"மாதரி தன்னுடன் மடந்தையை இருத்துதற்கு
ஏதம் இன்று"

என்று ஒப்படைக்கிறார்.

ஏதம் இன்று வரும் தீங்கு யாதும் இல்லை; நன்மை யுண்டு என்னாமல் தீமை இல்லை என்றே நினைக்கிறார்.

"நீட்டித் தீராது நீ போ"

என்று மாதரிக்குக் கட்டளையிடுகிறார். (15:199)

"ஏதம் இல்லா இடந்தலைப் படுத்தினள்
நோதக வுண்டோ நும்மக னார்க்கினி" (16:16-17)

என்றே மாதரி அழைத்து வருகிறாள்.

சிலம்பு பெற்றவன்,

"மாறி வருவன் மயங்கா தொழிக" (16:93)

என விடை பெறுகிறான்! மாறிவருதல் என்பது 'விற்றுவருவேன்' என்னும் பொருளதே எனினும் குறிப்பு வேறு காட்டலும் அறியலாம்.

கோவலன் புறப்பட்டு வர இமில் ஏறு எதிர்த்துச் சென்றது. ஏறு எதிர்தல் இடையர் அறியும் நிமித்தமாதலின் (கோவலன்) அறிந்திலன் என்கிறார் அரும்பத உரையாசிரியர். நிமித்தமாவது வருவதை அறிவிக்கும் முற்குறி.

பொற்கொல்லனைக் கண்ட கோவலன்,

"காவலன் தேவிக் காவதோர் காற்கணி
நீவிலை யிடுதற்கு ஆதியோ" (16:111-112)

என வினாவ அவனோ,

"அடியேன் அறியேன் ஆயினும் வேந்தர்
முடிமுதல் கலன்கள் சமைப்பேன் யான்"

என்கிறான் (16: 113-114). அவனைக் "கூற்றத் தூதன்" என்கிறார் அடிகள் (16:115).

கன்னமிடாமலே சிலம்பைக் களவாடிய கள்வன் என் சிறுகுடிலின்கண் உள்ளான் என்று காவலனிடம் உரைத்தான் பொற்கொல்லன்.

காவலன், ஊர்காப்பாளரைக்கூவி,

"தாழ்பூங் கோதை தன்காற் சிலம்பு
கன்றிய கள்வன் கையதாகிற்
கொன்றச் சிலம்பு கொணர்க"

என ஆணையிடுகிறான். (16:151-153). இதனைக் கூறும் அடிகள்,

"வினைவிளை காலம் ஆதலின் யாவதும்
சினையலர் வேம்பன் தேரான் ஆகி"

ஆணையிட்டான் என்கிறார்.

கோவலனை,

"தீவினை முதிர்வலைச் சென்றுபட் டிருந்த
கோவலன்"

என்கிறார் (16: 156-157)

"காவலன் செங்கோல் வளைஇய வீழ்ந்தனன்"

கோவலன் பண்டை ஊழ்வினை உருத்தென் எனக் கோவலன் முடிவை நிறைக்கிறார் அடிகள் (16: 216-217)

கோவலனோடு கதை முடிந்துவிடாதே! இன்னும் தொடர்ச்சி உண்டே !

மாதரி, அன்று அரண்மனைக்கு முறைப்படி நெய்வழங்க வேண்டிய நாள். விடிந்து பார்த்தால்,

"குடப்பால் உறைய வில்லை"

"காளைகள் கண்ணீர் சொரிகின்றன"

ஆதலால் ஏதோ விளைய உள்ளது என அறிந்தாள். ஆதலால் ஆயர்பாடியில் எருமன்றத்து மாயவனுடன் தம்முன் ஆடிய வாலசரிதை நாடகங்களில் வேல்நெடுங்கண் பிஞ்ஞையோடாடிய குரவையாடுதும் யாம் என்றாள். கண்ணகி முன்னாக ஆய்ச்சியர் குரவை நிகழ்ந்தது.

குரவை முடிவில் ஊரில் ஓர் அவலச் சொல் கேட்டது.

"காதலற் காண்கிலேன் கலங்கிநோய் கைம்மிகும்"

என்பது முதலாகக் கண்ணகி அல்லலுற்று ஆற்றாத் துயருற்றாள், ஊரைச் சுற்றிச் சுற்றி உரைத்து உழன்றாள்.

காலை வாய்த் தழுவினாள் மாலைவாய்க் கண்டாள் (19:36-37) அவன் காணாக் கடுந்துயரம்! கோவலன் வாய் 'இருந்தைக்க', (இருப்பாயாக) என்று கூறிப் பிரிந்தது உயிர். கண்ணகி,

நின்றாள் நினைந்தாள் நெடுங்கயற்கண் நீர்துடையாச்
சென்றாள் அரசன் செழுங்கோயில் வாயில் முன்! (19:74-75)

வழக்குரை காதை தொடங்கும்போதே,

"குடையொடு கோல்வீழக்... காண்பென்காண்!"

என்று கண்ணகி சொல்வதாகச் சொல்லும் அடிகள்,

காதை இறுதியில்,

"தாழ்ந்த குடையன் தளர்ந்த செங்கோலன்"

என்று அவனையே சொல்ல வைக்கிறார்.

"யானோ அரசன் யானே கள்வன்"

என்று கூறி அவன் வீழவும்,

"கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்லென்று
இணையடி தொழுது வீழ்ந்தனளே மடமொழி"

என்று தேவி வீழ்ச்சி சொல்லவும் வைக்கிறார்!

கோவலன் வீழப் பத்தொன்பது காதைகள் பாடிய அடிகள், காவலன் வீழ ஒரே ஒரு காதையை எடுத்துக் கொள்கிறார்.

பாண்டிமாதேவி வீழ்வதுபோல வீழாமல் கண்ணகி மேலெழ

மூன்று காதைகளை எடுத்துக் கொள்கிறார்.

"தீத்தொழிலாட்டியேன்" என்று கண்ணகி சொல்லிப்
பதினான்கு நாள்கள் நடந்து நெடுவேள் குன்றமேறி
வானவூர்தி யேறலோடு நிறைக்கிறார்!"

மதுரைக் காண்டம் முடிந்து, கண்ணகி தெய்வநிலை எய்துதல் வஞ்சிக் காண்டமாக மலர்ந்து வரந்தரலோடு நிறைகிறது.

கோட்டம் எடுத்துச்

சிலையை நிறுவிக் 'கடவுண் மங்கலம்' செய்யப்படுகிறது.

மின்னுக் கொடி ஒன்று விண்ணில் பளிச்சிடுகின்றது.

"தென்னவன் தீதிலன்... நானவன் தன் மகள்"

"வென்வேலான் குன்றில் விளையாட்டு யானகலேன்"

எனக் கண்ணகியார் உருவிலி ஒலி கேட்கின்றது!

முரண்களையே அடுக்கி வந்து அவலக் காப்பியத்தை அரிமா நோக்கில் திருப்பி

அரண்களையே பதித்துக் கண்ணகி வாக்காகவே,

"எங்கோ மடந்தையும் ஏத்தினாள் நீடுழி
செங்குட்டுவன் வாழ்க என்று"

மங்கலக் காவியமாக முடிக்கிறார்!

இதனை முரண் அரண் என்பதா, அரண் முரண் என்பதா? அல்லது துன்பியல் என்பதா, இன்பியல் என்பதா? அல்லது இன்பத் துன்பியல் என்பதா?

நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரமாக நமக்கு வாய்த்தமையால் இன்பத் துன்பியல் எனலாம்!

மகப்பேற்றுப்பாடு மகமுகம் கண்டதும், தாய்முகம் தண்ணிய முழுமதியாக மலர்வது கண்கூடு அல்லவா!

❖❖❖

17. கண்ணகியாரும் செல்லத்தம்மனும்

மதுரை மாநகரின் வடக்கு வெளிவீதியில் 'சிம்மக்கல்' என்பதோர் இடம். அவ்விடத்தில் 'சிம்மக்கல்லுரு' உள்ளது. முன்பு அது, தென்பால் நோக்கியிருந்து, இதுகால் கீழ்பால் திருப்பி வைக்கப்பட்டுள்ளது.

தென்பால் திரும்பியிருந்தகாலை அதன் முன் பார்வையில் இருந்த திருக்கோயில், செல்லத்தம்மன் கோயில்; இப்பொழுது பின்பார்வையில் அமைந்துவிட்டது.

செல்லத்தம்மன் கோயில் வடக்குப் பார்த்தது. பழமைச் சின்னமுடையது. அங்கே 'கண்ணகி' என்னும் பெயர் எழுதி வைக்கப்பட்ட கல்லுரு உள்ளது. அதனை அடுத்து, 'இடைச்சியம்மன்' உள்ளது.

செல்லத்தம்மன் கோயில், 'கண்ணகி கோயில்' என்பது ஊர் சொல்லும் செய்தி! உண்மைச் செய்தியா? சான்று உண்டா? இளங்கோவடிகள் வாக்கே அகச்சான்று!

'சிலம்பின் வென்ற சேயிழை' கண்ணகியார்! கண்ணகி என்று சொல்லப்படும்; சிலையில் சிலம்பு உண்டா? 'ஆம்' கண்ணில் காட்சி எழில் கவினி நிற்கக் கண்ணகியார் கையில் தனிச்சிலம்பு உள்ளது!

"செம்பொற் சிலம்பொன்று கையேந்தி" (19, 23)

"காவியுகு நீரும் கையில் தனிச்சிலம்பும்" (20:வெண்பா 2)

"கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும்" (20: வெண்பா 2)

"இணையரிச் சிலம்பொன் றேந்திய கையள்" (20;27):

"பொற்றொழிற் சிலம்பொன் றேந்திய கையள்" (20:42)

என்று அடிகளார் கூறும் சிலம்பு, அம்மையார் கையகத் துண்மை கண்ணகம் நிறைகின்றது. இது பிறிதின் கிழமைச் சான்று. மற்றொன்று;

கண்ணகியார் காது, வீழ் காது! வடிந்து வீழ் காது; கொடுங்குழை துறந்து வடிந்து வீழ் காது; மும்மடி அடையால் நம்மடிகளார், கண்ணகியார்

காதெழிலை வடித்துக் காட்டுகிறார். வடிதல் – தொங்குதல்! வீழ்தல் – தட்டி வழிதல்; நீர் வீழ்ச்சியால், 'வீழ்' அறியலாமே! ஆலம் வீழ்து அறியாததா? வளைந்து திரண்ட காதணிகளைத் துறந்தும் கூட வடிந்து வீழும் காது! ஆம்! அடிகள் உணர்வை அப்படியே வாங்கிக்கொண்டு, அவர் திருவடிப் பொடியைச் சூடிய கலைவல்லான் அடிகள் சொல்லை, அப்படியே கல்லில் வடித்திருக்கிறான்! வடிந்துவீழ் காதைப் பார்க்க வேண்டுமா? "வாருங்கள் மதுரைச் செல்லத்தம்மன் கோயிலுக்கு" என்று சொல்லாமல் சொல்லி அழைக்கின்றான்;

கண்ணகியார் பக்கத்தே இருக்கும் 'இடைச்சியம்மன்' எவர்? உணர்ந்த மக்கள் எவ்வளவு உணர்வோடு போற்றுகிறார்கள் என்பதற்கு 'இடைச்சியம்மைப்' பெயரே சான்று!

கண்ணகிக்கு அடைக்கலம் தந்தவர் எவர்?

"கோவலர் குடியில் வந்த மாதரியம்மை ! அவரோ
தீதிலள்; முதுமகள்; செவ்வியள்; அளியள்"

எனப் பண்பியல் பட்டங்களைப் பாரிக்கப் பெற்றவர்!

பண்பியல் பட்டங்களைத் திட்டமிட்டுத் தீர்மானித்துத் தந்தவரோ, முடிகெழு வேந்தன் உடன்பிறந்தும், நாடு நகர் துறந்தாலும் நற்றமிழ் துறவாத் தூய துறவி இளங்கோவடிகளார்! அதனை, வழங்குகின்ற அருமையாட்டியோ, மறந்தும் புறந்தொழா அருகசமயத் தவமூதாட்டி கவுந்தியடிகள்! நேரில் வழங்கினால் நாணத்தால் பெற மறுப்பார் மாதரியார் என்று நெஞ்சத்தால் வழங்குகின்றார்! அடைக்கலமாகக் கண்ணகியையும் வழங்குகின்றார்! எப்படி?

"இடைக்குல மடந்தைக்கு அடைக்கலம் தந்தேன்" (15:130)

அடைக்கலம் பெற்றவர் நிலை என்ன ஆயிற்று? கொடுமை கொடுமை!

"அடைக்கலம் இழந்தேன் இடைக்குல மாக்காள்"

என்று கரைந்துருகி,

"இடையிருள் யாமத்து எரியகம் புகுந்தார்" (27:77-8)

இடைச்சியம்மையை இவரென இன்னும் விளக்க வேண்டுமா?

கோவலனைத் தம் மகனாகக் கருதினார் கோவலர் குடி மூதாட்டி மாதரி. தன் மகள் ஐயையைக் கண்ணகியார்க்கு 'நாத்துணை' யாகத் தந்தார்! அடியார்க்கு நல்லார், "நாத்தூண் நங்கைக்கு" விளக்கம் வரைகின்றார். "நங்கை என்று புதல்வர் மனைவியைக் கூறும் முறைப் பெயராதலின் நங்கை என்றாள் என்க" என்றும், "கோவலனைத் தனக்கு மகனாகக் கருதி இங்ஙனம் கூறினாள்" என்றும் கூறுகிறார் (16:14:19).

"ஆய்ச்சியர் குரவைக்கு அடித்தளமானவர் மாதரி; கண்ணகி காண, கண்ணன் ஆயர்பாடியில் பிஞ்ஞை (நப்பின்னை)யோடு ஆடிய குரவையை ஆடி விளைந்த தீக்குறியைப் போக்க முனைகின்றார். ஆயர் குடி வழிபாடு மாயோன் வழி போக்க முனைகின்றார். ஆயர் குடி வழிபாடு மாயோன் வழிபாடே! "மாயோன் மேய காடுறை உலகம்" ஆய்ச்சியர் குரவைக்கும் முல்லைப் பாணிக்கும் முறைமையுடையவே அல்லவோ;

பின்னே குரவையாடும் மாதரி, முன்னே தம் இல்லில் கோவலன் உண்ண, கண்ணகி படைக்கும் காட்சியை எப்படிக் காணுகிறார்?

"ஆயர் பாடியின் அசோதை பெற்றெடுத்த
பூவைப் புதுமலர் வண்ணன் கொல்லோ!
நல்லமு துண்ணும் நம்பி ஈங்குப்
பல்வளைத் தோளியும் பண்டுநம் குலத்துத்
தொழுநை ஆற்றுள் தூமணி வண்ணனை
விழுமந் தீர்த்த விளக்குக் கொல்லோ"

எனக் காண்கிறார். மகனாகவும் மருகியாகவும் கண்ட மாதரியார், கண்ணனாகவும், பின்னையாகவும் கருதி விம்மிதம் அடைகிறார்! வழிபடு தெய்வமே விருந்து வந்ததாகக் களி துளும்பி 'ஐயையும் தவ்வையும் விம்மிதம்' எய்துகிறார்கள்; "கண் கொளா நமக்கிவர் காட்சி" என்கிறார்கள். மாதரியார் காட்சி இவ்வளவில் நிற்க!

பதிகம், கண்ணகியாரை எப்படி அறிமுகப்படுத்துகிறது? 'திருமா பத்தினி' என்கிறது (5). மங்கல வாழ்த்து, 'போதிலார் திருவினாளாகக்' காட்டுகிறது (25) மனையறம் படுத்ததோ, குழவித் திங்களுக்கும், மூவாமருந்துக்கும் உடன் பிறப்பாகக் கூறுகின்றது. "இவளைத் திருமகளாக்கி அமிர்தின்முன் கூறப்பட்டது" என்றும், "இங்ஙனங்

கூறினார் பிறை திருவொடு பாற்கடலிடைப் பிறத்தலின் இவளைத் திருமகளாக மதித்து" என்றும் முறையே அருஞ்சொல் உரையாசிரியரும், அடியார்க்கு நல்லாரும் உரைத்தனர்.

வேட்டுவச் சாலினியோ, "ஒருமா மணியாய் உலகிற்கு ஓங்கிய திருமாமணி" (12: 49-50) என்றும், மாடலனோ , "திருத்தகு மாமணிக் கொழுந்து" (15, 93) என்றும் கண்ணகியைத் திருக்காட்சி காண்கின்றனர். மாடலன் கோவலனைக் 'கோபாலன்' என்றே விளிக்கின்றான். (15;93).

கோவலன் பிரிந்த புகார், இராமன் பிரிந்த அயோத்தியாகின்றது (13, 65-6). "தாதை ஏவலின் மாதுடன் போகிக் காதலி நீங்கக் கடுந்துயர் உழந்த" இராமனே எடுத்துக்காட்டாக நிற்கின்றான் (14, 46-7).

இவையெல்லாம் சுட்டுவதென்ன? கண்ணகி திருமகள் போல்வாராய்ப் பிறர்க்குக் காட்சி வழங்க, மாதரியார்க்கும் ஆயர் குடியார்க்கும் திருமகளாகவே காட்சி வழங்கினாராம். ஆதலால் இடைச்சியம்மைக்கும் அடைக்கலம் தந்த ஆயர் குடியார்க்கும் செல்வத் தம்மையாகக் கண்ணகியார் திகழ்ந்தாராம். 'செல்வத்தம்மை' திருமகளல்லரோ?

'செல்வத் தம்மை, செல்லத்தம்மை யாகுமா? செல்வம் கொடுத்தல்' 'செல்லங் கொடுத்தலாக' வில்லையா? 'செல்வம்' என்பாரைச் 'செல்லம்' என வழங்குவதில்லையா? செல்லாயி, செல்லப்பன், செல்லம்மை! செல்லாண்டி, செல்லியம்மை இவையெல்லாம் வழக்கில் இல்லாதவையா?

இடைச்சியம்மையும் அவர் வழியினரும் செல்வத்தம்மையாகக் கண்ணகியாரைக் கண்டு வழிபட்ட 'சொற்கோயில்' சிலம்பு என்றால், 'கற்கோயில்' 'செல்லத்தம்மன் கோயில்!' அக்கோயிலை அடுத்திருப்பவை இராமாயணச்சாவடி; பெருமாள் கோயில்; ஆயர் பெருமக்கள் குடியிருப்பு. இத்தொடர்புகள் இயல்பாய் அமைந்திருக்கவும் முடிவு செய்யவோர் இடரும் உண்டோ ?

❖❖❖

18. போற்றா ஒழுக்கம்

கண்ணகியாரொடு மதுரைக்கு வந்த கோவலன், சிலம்பு விற்கப் புறப்படுவதற்கு முன், தன் குறைபாடுகளையெல்லாம் நெஞ்சாரக் கூறி நெகிழ்கின்றான். அந்நிலையில் கண்ணகியார், "போற்றா ஒழுக்கம் புரிந்தீர்" என்று சுட்டுவதைக், குறை போலக் கூறுவார் உளர். அதனைப் பற்றிக் கருதுவது இது.

"தன் பிழையுணர்ந்து வருந்தும் கணவனிடம், "போற்றா ஒழுக்கம் புரிந்தீர்" என்பது கற்புக் கண்ணகியார்க்குத் தகுமா? இது திருந்தியவனை வருந்த வைக்கும் மொழியாயிற்றே" எனக் குறை காண்கின்றனர்.

கண்ணகியார் தனித்து உறைதலை உணர்ந்த கோவலன் தாய் தந்தையர், உள்ளகம் வருந்தினர். அவர்கள் உள்ளகம் வருந்துதல் ஆற்றாத கண்ணகியார், தாம் வருந்தவில்லை என்பதைக் குறிப்பதுபோல் "வாயல் முறுவல் செய்து" வாழ்ந்தனர். அதனைக் குறிக்கும் வகையாலேயே அவர், "உள்ளகம் வருந்தப் போற்றா ஒழுக்கம் புரிந்தீர்" என்றார். இதில், தம் உள்ளகம் வருந்திய குறிப்போ – வருத்திய குறிப்போ – இல்லை !

கண்ணகியார் வாயல் முறுவல் செய்தலைப் பட்டறிவும் பழுத்த அறிவும் ஒருங்கமைந்த மாமன் மாமியார் உணர்ந்து கொள்ளமாட்டார்களா, என்ன? அதனால், அவர்கள் உள்ளகம் வருந்தவே செய்தனர்; அதனையே குறித்தார் கண்ணகியார். ஆதலால், அவர் மேல் குறை காண இடமில்லை.

இனிப், "பெற்றோர்க்காகவே எனினும், கலங்கியும் கவன்றும் கரைந்தும் நிற்கும் கணவனிடம் இவ்வாறு கூறலாமா?" என அடுத்துத் தொடுப்பாரும் உளர். அவர்கள் "போற்றா ஒழுக்கம்" என்பதன் மரபு வழிப் பொருளை உணர்ந்து கொண்டால் இதனைக் குறையாகக் கருதார்.

போற்றா ஒழுக்கம் என்பதற்குப் பேணிக் காவாத குற்றம், பிறர் போற்றிக் கூறத் தகாத தவற்றொழுக்கம், பரத்தமை என்றெல்லாம் பொருள் கண்டு இவ்வாறு கூறுகின்றனர்.

"போற்றா ஒழுக்கம்" என்பதற்கு அரும்பத உரைகாரரும் அடியார்க்கு நல்லாரும் பொருள் கூறினர் அல்லர். ஒன்றுக்கு மூன்று

முறை "போற்றா ஒழுக்கம்" என்றே கூறியமைந்தனர். இதன் பொருள் என்ன? "இத்தொடருக்குப் பொருள் கூற வேண்டிய தேவை இல்லை; புலவர் உலகம் இத்தொடரின் பொருளை வெட்டவெளியாக அறியும்" என்பதே பொருளாம்.

இப்போற்றா ஒழுக்கத் தொடர் கொலைக்களக் காதையை அன்றி, வரந்தரு காதையிலும் வருகின்றது. ஆங்கும் அரும்பத உரையில் பொருள் இல்லை. அடியார்க்கு நல்லார் உரையோ கிடைக்கவில்லை! ஆதலால் ஆங்கும் இதே நிலைதான்!

வரந்தரு காதையில்,

"புகழ்ந்த காதலன் போற்றா ஒழுக்கின்
நிகழ்ந்ததற் கிரங்கும் என்னையும் நோக்காய்"

என்பது. இது கண்ணகியாரின் தாயார் கூற்றாக வருவது. தவறு சுட்டும் பொருளாக இஃதிருப்பின், கண்ணகியின் தாய் கூற்றாக – மாமியார் கூற்றாக இடம் பெறல் உண்டா , மரபுவழி உரிமை சிறிதும் பழித்துரைக்க இடந் தராதாம் என்பதைத் தமிழியலும், தமிழர் வாழ்வியலும் அறிந்தார் நன்கு கண்டு கொள்வர்.

பழி சுட்டாததாக இருந்தும், பழிச்சுட்டாகக் கொள்ளப் படலான இத் தொடரின் பழம் பொருளைக் கலித்தொகைத் தொடரொன்று கைந்நீட்டி அழைத்துக் காட்டித் தெளிவிக்கிறது. (133)

"போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை"

என்பது அது.

ஆற்றுதல், போற்றுதல், பண்பு, அன்பு, அறிவு, செறிவு, நிறை, முறை, பொறை, என்பவற்றைத் தொடராகக் கூறி விளக்கும் இப்பாடலில், போற்றுதல் என்பதன் பொருள் விளக்கம் கிடைக்கின்றது. இத்தொடர்க்கு "ஒன்றைப் பாதுகாத்தல் என்று சொல்வது, கூடினாரைப் பிரியாதிருத்தலை" என்று பொருளுரைக்கிறார் நச்சினார்க்கினியர்.

போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை எனின், போற்றாமை என்பது புணர்ந்தாரைப் பிரிந்தமை தானே! "நீர் பிரிந்தீர்" என்பது தவறான செய்தியா? மயக்கம் தீர்க்க மரபு வழி உரை காணும் முறையைப் போற்றுதல் வேண்டும் என்று இப்போற்றா ஒழுக்கம் சுட்டுவதாகக் கொள்ளலாமோ?

❖❖❖

19. கண்களி மயக்கக் காதல்

இக்கட்டுரைத் தலைப்பைக் கண்டதும் "அக் காதலர் எவர்?" என்னும் வினாவே எவர்க்கும் எழுதல் ஒருதலை. ஆனால் அவர், "அந்தமில் இன்பத்து அரசாள் வேந்த"ராகிய இளங்கோவடிகளின் இனிய நண்பரும், மணிமேகலை துறவை 'ஆறைங் காதை'யில் பாடியவரும் ஆகிய தண்டமிழ் ஆசான் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனாரே எனின் வியப்புத் தோன்றக்கூடும். உண்மையில் சாத்தனாரே 'கண்களி மயக்கக் காதலர்' என்பதை அடிகளாரே கூறிய பின்பு ஐயுறுதற்கு அணுத்துணையும் இடமில்லை.

கள்ளும் நறவும் முதலாயின உண்டார்க்கே உள்ளக் களிப்புண்டாம். ஆனால் காண்டற்கரிய காட்சிகளைக் கண்டவர்க்கும் 'கண்களி'யுண்டாம். மையலுற்றார்க்கே மயக்கம் உண்டாம்; எய்தப் பெறாத இன்பம் ஓரிடத்தில் எய்தியவர்க்கே காதல் உண்டாம். இம்மூன்றும் ஒருங்கெய்தப் பெற்றார்க்கே கண்களி மயக்கக் காதல் தோன்றும். அவ்வாறு தோன்றப் பெற்றாரே கண்களி மயக்கக் காதலர் ஆவர். சாத்தனார் அந்நிலையை எப்போது எவ்விடத்து எந்நிலையில் உற்றார்?

மலைவளங்காணச் சென்ற செங்குட்டுவனுடன் இருந்த மதுரைச் சாத்தனார், அவன் முன்னிலையிலேதான் கண்களி மயக்கக் காதல் கொண்டு திகழ்ந்தார்.

வஞ்சி முற்றம் நீங்கி, அஞ்சாமுழவின் அருவி ஆர்க்கும் மஞ்சுசூழ் சோலை மலைவளம் காணுதற்குக் கோப்பெருந்தேவியும், அவர் ஆயமும், தன் பரிவாரங்களும் புடைசூழ நெடுவேலான் குன்றம் நண்ணிய செங்குட்டுவன், நெடியோன் மார்பின் ஆரம் போல விளங்கிய பேரியாற்றின் இடுமணற் பரப்பின் மேல் இனிது தங்கினான். அப்பொழுது உடனிருந்த சாத்தனார் கண்களி மயக்கம் கொண்டார் என்றால் எதனால் என்னும் வினா எவர்க்கும் எழும்பும்.

கைபுனைந் தியற்றாக் கவின்பெறு வனப்பாம் மலைக்காட்சி சாத்தனாரைக் கண்களி மயக்கக் காதலில் ஆழ்த்தியதா? அரிமாவன்ன

ஆற்றலும் தோற்றமும் அமைந்த செங்குட்டுவன் பொலிவுதான் கண்களி மயக்கக் காதலில் ஆழ்த்தியவா? அரசியின் ஆயமும் அரசியல் சுற்றமும்தாம் அக் காதலில் ஆழ்த்தினவா? வென்றிச் செவ்வேள் வேலன் பாணி முதலாகப் பக்கமெல்லாம் பரவியெழுந்த பல்வேறு ஒலி முழக்கங்கள் தாம் தண்டமிழ் ஆசானைக் கண்களி மயக்கக் காதலர் ஆக்கினவா? திறை சுமந்து நிற்கும் தெவ்வர் போல யானைவெண் கோடும் அகிலின் குப்பையும் முதலாக அளவற்ற அரும்பொருள்களைச் சேரவேந்தன் திருவடிகளில் படைத்து, "ஏழ்பிறப்படியோம்; நின்கொற்றம் வாழ்க" என்று வாழ்த்திய குன்றக் குறவர்தம் கூற்றும், தோற்றமும் பிறவும் கூலவாணிகரைக் கண்களி மயக்கக் காதலர் ஆக்கினவா?

இவ்வனைத்தும் சாத்தரைக் களிப்பூட்டி இருக்கலாம் மயக்கமோ காதலோ ஊட்டியிருக்க மாட்டா. மலைநாட்டை முதன்முதலாக இப்பொழுதுதான் அவர் காண்கிறாரா? செங்குட்டுவன் சீர்மையை இப்பொழுதுதான் நேரிடையாக நோக்குகிறாரா? இளங்கோவடிகளின் கெழுதகை உழுவலன்பினர் சாத்தனார். ஆகலின் இச்சேர நாட்டுச் செலவு முதன்முறையாக இருந்திருத்தற் கியலாது. ஆதலால் இக்காட்சிகள் சாத்தரைக் களிப்புறச் செய்தவை ஆகலாமே அன்றி, 'மயக்கக் காதல்' ஊட்டுபவையாக மாட்டா.

குன்றக் குறவர் செங்குட்டுவனை வணங்கி எழுந்து,

"கான வேங்கைக் கீழோர் காரிகை
தான்முலை இழந்து தனித்துயர் எய்தி
வானவர் போற்ற மன்னொடும் கூடி
வானோர் போற்ற வானகம் பெற்றனர்"

என்று தாம் நேரில் கண்ட நிகழ்ச்சியைக் கூறினர். இதனைச் சாத்தனாரும் கேட்டார்.

கொற்றவன் தவறிழைத்ததும், கோவலன் மாண்டதும், கண்ணகி வழக்குரைத்ததும், அதன் விளைவும் மதுரையில் கண்டு அறிந்தவர் சாத்தனார். கண்ணகியார் கோவலர் இவர் தம் முன்னைச் செய்தியைக் கேட்டும் அறிந்தவர் அவர். ஆனால் கண்ணகியாரின் பின்னைச் செய்தி இன்னதென அவர் அறியார். ஆகலின் கண்ணகியார் கணவனுடன்

கட்புலம் காண விட்புலம் போய செய்தியைக் குன்றக் குறவர் கூறக் கேட்ட அவர் கண்ணகியாரின் தெய்வ நிலையை எண்ணி எண்ணி மயக்கம் கொண்டார். காட்சியால் கண்களி கொண்ட அவர் கண்ணகியாரின் பழுதறு வரலாற்றை முழுதுற அறியும் வாய்ப்புக் கிட்டிய அளவில் கண்களி மயக்கத்தினர் ஆனார்.

கண்ணகியாரைப் பற்றிய செய்தியைக் குன்றக்குறவர் செங்குட்டுவனிடம் உரைத்த காலையில் அவரை,

"எந்நாட்டாள் கொல் யார்மகள் கொல்லோ
நின்னாட் டியாங்கண் நினைப்பினும் அறியேம்"

என்று கூறிய வாய்மொழியே சாத்தரைக் கண்களி மயக்கக் காதலர் ஆக்கிற்றாம்.

சாத்தனார் மாபெரும் புலவர்; மணிமேகலை யாத்த தண்டமிழ் ஆசான். குன்றவர் கூறிய உரையில் நன்றுறத் தோய்ந்து நெஞ்சம் பறி கொடுத்தார். 'எந்நாட்டாள் கொல்' என்று குன்றவர் வினாவிய வினா அவரை ஆட்கொண்டது. 'எந்நாட்டாள்?' என்பதில் ஒவ்வொரு நாடும் அடங்கத்தக்கது தானே. சேரநாட்டுக்கு மட்டும் விலக்குண்டா? பருவரல் ஊட்டிய பாண்டி நாடும் சரி, பதியெழுவறியாப் பழங்குடி கெழீஇய பொதுவறு சிறப்பிற் புகார்ச் சோணாடும் சரி, செழுமலைச் சேர நாடும் சரி 'எந்நாடு' என்பதனுள் அடங்கியே தீரும். இவ்வெண்ணத்தில் இருந்து விடுபடு முன்னரே,

'நின்னாட்டி யாங்கண் நினைப்பினும் அறியேம்'

என்னும் குன்றக்குறவர் உரை சாத்தனார் செவியினிக்கப் பாய்ந்தது.

"அல்லற்பட்டு ஆற்றாது அழுவார் – ஆற்றுவாரற்று அலமந்து திரிவார் – உறுப்புச் சிதைந்து உலமருவார் – ஒரு தனி வந்து இரங்கி நிற்பார் – இச்சேர நாட்டினராக இருத்தற்கு இயலாது. செங்குட்டுவன் என்னும் செங்கோல் வேந்தன் நாட்டின் எல்லையுள் இத்தகைய அவலம் ஏற்பட்டிருக்க முடியாது" என்று அவர்கள் கருதுவதை உட்கொண்டு – குன்று வாழ் மக்களும் கோல் நிலை உணர்ந்து கூறும் நிலைமையில் செங்குட்டுவன் ஆட்சிச் சீர்மை உண்மையை உட்கொண்டு – சிறக்க

எண்ணினார். நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து இன்புற்றார். "செங்குட்டுவன் செங்கோல் மாண்புதான் என்னே! என்னே!" என இறும்பூதெய்தினார். கண்களிப்ப நோக்கி, மையல்மிக்கு, இன்னதென இயம்பவொண்ணா இன்பநிலையுற்றார். அந்நிலையில் கண்களி மயக்கக் காதலராக விளங்கினார்.

சாத்தனார் உணர்வை உள்ளவாறு உணர்ந்தவர் இளங்கோவடிகளார். ஆதலால்,

"மண்களி நெடுவேல் மன்னவற் கண்டு
கண்களி மயக்கக் காதலோ டிருந்த
தண்டமிழ் ஆசான் சாத்தன்"

என்றார்.

மன்னர் அவையிலும், கற்றறிந்தோர் மையத்திலும் வாழும் புலவரொருவர் தம் புரவலனை நோக்கிச்,

"சோறு படுக்கும் தீயொடு
செஞ்ஞாயிற்றுத் தெறலல்லது
பிறிதுதெறல் அறியார்நின் னிழல்வாழ் வோரே
திருவில் அல்லது கொலைவில் அறியார்
நாஞ்சில் அல்லது படையும் அறியார்" (புறம் 20)

என்று நயந்து பாராட்டுவதிலும், ஆள்வோர் தொடர்பென்பது அறியாமல், அறிவறிந்த கல்வியும் பெறாமல், காடுமலைகளில் வாழும் எளிய மக்களும் அல்லற்பட்டு நிற்பாளைக் கண்டு, 'எந்நாட்டாள் கொல், இந்நாட்டியாங்கண் நினைப்பினும் அறியேம்' என்று வினவுமாறு ஒரு நாட்டின் ஆட்சி நடைபெறும் என்றால், அவ்வாட்சி அன்றோ உலகம் எடுத்துக் காட்டாகக் கொள்ளத்தக்க ஆட்சி. அவ்வாட்சியைக் கண்டு உலகம் கண்களி மயக்கம் கொள்ளும் காலம் வருமா? வாழ்க கண்களி மயக்கக்காதல்!

❖❖❖

20. வள்ளுவப் பரப்பாளர் அழகள்

மங்கல வாழ்த்துக் காதைத் தொடக்கம், திங்கள், ஞாயிறு, மாமழை, பூம்புகார் வாழ்த்துகள். இவ்வாழ்த்துகளின் சேர்மப் பொருள் அரச காப்பியத்துக்குத் தக,

"கொடை அளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க்கு ஒளி"

என்னும் திருக்குறள் விளக்கமாதல், 'மங்கல வாழ்த்துப் பாடலின் மாண்பு' என்னும் கட்டுரையில் கண்டோம்.

அதே பாடலில் கோவலனை 'மண்தேய்த்த புகழினான்' என்கிறார். அதற்கு அருஞ்சொல்லுரையாசிரியர், 'பூமிசிறுகும்படி வளர்ந்த புகழ்' என்கிறார். அது வள்ளுவப்படி,

'நிலவரை நீள்புகழ்' (234)

என்பதாம். மனையறம் படுத்த காதையில் கண்ணகியாரை,

'மாசறு பொன்னே, வலம்புரி முத்தே,
காசறு விரையே, கரும்பே, தேனே'

எனப் பாராட்டுகிறான். இப்பாராட்டை நுணுகி நோக்கிய அடியார்க்கு நல்லார், "இவற்றாற் சொல்லியது **ஒளியும், ஊறும், நாற்றமும், சுவையும், ஓசையும்** ஆகலின்,

"கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள" (1101)

என நலம் பாராட்டப் பட்டன" என்கிறார்.

கனாத்திற முரைத்த காதையில் தேவந்தி என்னும் தோழி, கண்ணகியிடம், "சோமகுண்டம் சூரியகுண்டம் என்னும் துறைகளில் நீராடி, காமனை வழிபட்டால் பிரிந்த கணவர் வரப்பெறுவார்" என்று கூற,

"பீடன்று"

என்று மறுத்து விடுகிறார். ஏனெனில்,

"தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்" (55)

என்பது தமிழ்மரபு ஆதலால், அதனை உட்கொண்டு, விஞ்சிய நிலையில்,

"தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுவாளைத்"
தெய்வம் தொழுதகைமை தின்னிதால் – தெய்வமாய்
மண்ணக மாதர்க் கணியாய கண்ணகி
விண்ணகமா தர்க்கு விருந்து"

என்று மதுரைக்காண்ட நிறைவில் அடிகள் கூறுகிறார். திருக்குறள் இல்வாழ்க்கை முதல் பாட்டு,

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை" (41)

என்பது. இதில் 'இயல்புடைய மூவர் எவர்' என்பதையும், 'நின்ற துணை' என்பதையும், 'நல்லாற்றின்' என்பதையும் ஆக மூன்று ஒளிவிளக்குகளைத் தந்துள்ளார். அதற்கு முதன்முதல் சான்று விளக்கப்பேராசானாக விளங்குபவர் இளங்கோவடிகள். அது, முன்னே மாதவி விடுத்த முடங்கலில் சுருக்கமாக,

"குரவர்பணி அன்றியும் குலப்பிறப் பாட்டியொடு
இரவிடைக் கழிதற்கு என் பிழைப்பு அறியாது
கையறு நெஞ்சம்"

என்று குறித்தவர் (13:89-92),

"இருமுது குரவர் ஏவலும் பிழைத்தேன்
சிறுமுதுக் குறைவிக்குச் சிறுமையும் செய்தேன்"

எனக் கோவலன் உரையாக மேல்விளக்கம் புரிகிறார் (16:67-68).

இதனால், இயல்புடைய மூவர் எவர் என்பதற்கு உரைகண்ட பலரும் தடுமாற, அடிகளே முதற்கண் ஒளிவிளக்கம் செய்தவராகிறார். அம்மூவர்: தாய், தந்தை, மனைவி என்பவராம். இனி இல்வாழ்க்கை , அடுத்த குறளில்,

"துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை"

என்பதை நினைவு கூருமாறு, அவ்விடத்திலேயே கண்ணகி, தமக்கு நேர்ந்த குறையாக,

"அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை"

என்கிறார் (16:71-73)

கோவலன் கொலையுண்டான்; கண்ணகியார் முறை கேட்டுக் காவலன் அரண்மனையை எய்துகிறார். கண்முன் கண்ட வாயிற் காவலனிடமே, தம் எரிவைக் காட்டும் வகையில்,

"அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்து
இறைமுறை பிழைத்தோன் வாயி லோயே"

என்று கூறி, "அறிவிப்பாயே அறிவிப்பாயே" என்கிறார். அவனும் அஞ்சி நடுங்கி ஒடுங்கியவனாய்க் கூற, அரசன் சிறு தடையும் இன்றி,

"வருக; மற்றவள் தருக"

என்கிறான்.

உள்ளே சென்ற கண்ணகி விளிப்பே *'தேரா' மன்னா* என்பது. பின்னர், *'சூழ்கழல்' மன்னா* என்கிறார். நீயும் ஆராய்ந்தாய் அல்லை; ஆராயும் அமைச்சு முதலாயவரையும் சூழ்ந்தும் ஆராயவில்லை என்பதைக் குறித்துக் காட்டுகிறார்.

வேந்தனோ **"கள்வனைக் கோறல் கடுங்கோல் அன்று"** என்கிறான். ஏனெனில், "அதுவே **வெள்வேல் கொற்றம்**" என்று சான்று காட்டுகிறான். இது,

"கொலையில் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்" (550)

என்னும் வள்ளுவக் குறிப்பாம்.

அப்பொழுதில், மேலும் சீற்றம் கொண்ட கண்ணகியார்,

"நற்றிறம் படராக் கொற்கை வேந்தே"

என்று விளித்து,

"என்காற் பொற்சிலம்பு மணியுடை அரியே"

என்கிறார். **வேந்தன் சினந்தானல்லன்; வன்சொல் சொன்னான் அல்லன்.**

"தேமொழி உரைத்தது செவ்வை நன்மொழி"

என்று, உடனே சிலம்பை வரச் செய்கிறான்.

வள்ளுவம் கூறும்,

"காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்" (386)

என்பதற்கு வேந்தன் உயிரோவியமாகத் திகழ்கிறான். அத்திகழ்வே, கண்ணகியாரைப் பின்னே,

"பாண்டியன் தவறிலன் யானவன் மகள்"

என்று கூறும் பெற்றியை வழங்குகின்றது (29:10)

திருக்குறள் இறைமாட்சியில், **மங்கலவாழ்த்துத்** தொடங்கிய அடிகள், நூல் முடிவாம் **வரந்தரு காதையில்** திருக்குறள் அதிகாரங்களை மாமழையாகப் பொழிகிறார்.

"பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்;
தெய்வம் தெளிமின்; தெளிந்தோர்ப் பேணுமின்;
பொய்யுரை அஞ்சுமின்; புறஞ்சொல் போற்றுமின்;
ஊனூண் துறமின்; உயிர்க்கொலை நீங்குமின்;
தானம் செய்ம்மின்; தவம்பல தாங்குமின்;
செய்ந்நன்றி கொல்லன்மின்; தீநட் பிகழ்மின்;
பொய்க்கரி போகன்மின்; பொருள்மொழி நீங்கன்மின்;
அறவோர் அவைக்களம் அகலாது அணுகுமின்;
பிறவோர் அவைக்களம் பிழைத்துப் பெயர்மின்;
பிறர்மனை அஞ்சுமின்; பிழையுயிர் ஓம்புமின்;
அறமனை காமின்; அல்லவை கடிமின்;
கள்ளும், களவும், காமமும், பொய்யும்,
வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின்;
இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா;
உளநாள் வரையாது; ஒல்லுவது ஒழியாது"

என்பது வள்ளுவ அதிகார அடைவுகள் அல்லவா!

கடவுள் வாழ்த்து
இடுக்கண் அழியாமை
வாய்மை
புறங்கூறாமை
ஈகை
தவம்
மெய்யுணர்தல்
அவையறிதல்
கூடாநட்பு
பிறர்மனை நயவாமை
கொல்லாமை
இல்லறம்
கள்ளுண்ணாமை
கள்ளாமை
நிலையாமை

– இன்னவை வெளிப்படப் பளிச்சிடுவன அல்லவோ! ஆதலால், வள்ளுவப் பரப்பாளருள் தலைநின்றார் இளங்கோவடிகளார் என்க.

❖❖❖

21. சிந்திக்க ! சீர்தூக்க! தெளிக !

இளங்கோவடிகள் காலத்திற்கு முன்னைக்காலம் தனிப்பாடல் காலம். நேரிடை நின்றது போலவும், நேரிடை நிகழ்வது போலவும் அகம்; புறம் எனப் பொருள் வகையில் சான்றோர்கள் போற்றிப் பாடிய காலம். அப்பாடல் வகையில், நெடியதாம் பத்துப் பாட்டெனினும், தனிப்பாட்டே! பத்துப்பத்து, நூறு நூறு எனினும் – தனித் தனிப் பாக்களே!

அத்தனி மலராம் பாடல்களைத் தொடையலாக – **மாலையாகத்** – தொடுத்த – முதல்வர், முதற் காப்பியப் படைப்பாளி **இளங்கோவடிகளே!**

அன்றியும், காப்பிய இலக்கணம் தம் காப்பியத்தால் வடித்துக்கொள்ள வைத்த, காப்பிய இலக்கணமும் அடிகளே. தமிழைச் செந்தமிழ், தண்டமிழ் என்னும் அடைகளோடு, இயலிசை நாடகத் தமிழ் ஆகிய **'முத்தமிழ்'** என வழங்கச் செய்த முன்னவரும் அவரே.

முத்தமிழ் என்பதோடு, **"உரையிடை யிட்ட பொருட்டொடர்"** என்னும் பேறு தமிழுக்கு வழங்கியவரும் அவரே.

மூவேந்தரையும், முந்நாட்டையும், முத்தலைநகரையும் ஒப்பவைத்து ஒருங்கிணைக்க முயன்றவரும் **பெருந்தகை அடிகளே.**

துறவரொருவர், **இல்லறக் காப்பியம்** இயற்றலிலும், அவ்வகையிலும் **பெண்மையைத் தெய்வ நிலைக்கு** ஏற்றிப் போற்றுபவரும், பிறபிற வேந்தர்களும், பிறபிற நாட்டவரும் ஏற்றதுரைப்பவரும் – தனிப்பெருந் **தவஅடிகளார் அவர்களே!**

எவ்வெச் சமயத்தார்க்கும் அவ்வச் சமயச் சால்பவராகத் தோன்ற, பெருந்தெய்வம் சிறுதெய்வம் எனப் பாகுபாடும் இல்லாமல், ஒத்ததறிந்து யாத்தவர் அடிகளே.

பின்னைச் **சீட்டுக்கவி – கடிதம் – ஊடகம்** என்பவற்றுக்கு எல்லாம் முன்னவராக இருந்து தம் படைப்பால் வெளிப்படுத்தியவர் எதிரது உணர்ந்த தவ அடிகளே!

'தம் வரலாறு' எழுதாத் தமிழர் பெருங்குறைபாட்டை நீக்கி, பின்னே மெய்க்கீர்த்தி, வரலாறு என எழுதிவைக்க வேண்டும் என்னும் இன்றியமையா மரபை முன்னோடியாக நின்று நிலைநாட்டிய நீடிய

புலமைத் தோன்றல் குணவாயில் கோட்டத்து அரசு துறந்திருந்தும் தமிழைத் துறவாத தூய துறவி இளங்கோவடிகளே!

வாரப்பாடல், வரிப்பாடல், நாட்டுப்பாடல் என்னும் நாட்டுப்புறப் பாவெல்லாம் கூட்டுக்குள் தேக்கிய **முன்னோடிப்பாவலர் இணையிலா** இளங்கோவடிகளே! இவை **ஒரு பாலாக, மற்றொருபால் 'சிந்தனைக்குரியவை சிலவற்றுக்கு முந்தையர் அவரே'** என்பதையும் விட்டுவிட முடியாது! ஆய்வு என்பது **'சமன்'**!

சங்க இலக்கியத்தொகையும் பாட்டும் 2381. திருக்குறள் 1330 தொல்காப்பியம் 1610 ஆக **5321 பாடல்களில், ஊழ், ஊழ்க்கும், ஊழ்த்த, ஊழ்ப்ப, ஊழ் ஊழ், ஊழி** என்றே 96 இடங்களில் வந்திருந்தும், அவற்றைத் துறை போகக் கற்றிருந்தும், திருக்குறளில் **'ஊழ்'** என்பதற்கு, 'உலகத்து இயற்கை' என ஈரிடங்களிலும் (374, 637) பேரா இயற்கை என ஓரிடத்தும் (370) காட்டியுள்ளமை தெளிந்தும்,

ஆகூழ், போகூழ் என (371, 372) இரு குறள்களில் காட்டியும், அவ்வூழின் ஆக்கல் அழித்தலை,

"கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை" (15)

எனக் கண்காண் சான்று காட்டிய தறிந்திருந்தும், அடிகள் தம் **சமய அழுத்தத்தால் 'ஊழ்'** என்பதொடு 'வினை' என்பதை இணைத்து, அனைத்தும் வினைப்பயனே என எழுவாய் முதல் இறுவாய் வரையும் கொண்டு செல்வது, **"மூத்தவன் இருக்க இளையவனே ஆளும் குறிப்புடையன்"** என்று நிமித்திகன் சொன்னதை,

"உன்சொல்லைப் பொய்யாக்குவேன்"

என்று துறந்து சென்று – நிமித்திகன் உரையைப் பொய்யாக்கிய – **அடிகள் புனைவு, சிந்திக்கத்தக்க தாகின்றது!**

தீவினை அச்சம் (21) தெரிந்து வினையாடல் (52) வினைசெயல் வகை (68) வினைத்திட்பம் (67) வினைத்தூய்மை (66) என்னும் 'வினை' தழுவு அதிகாரங்களில் வரும் வினைகள் ஊழ்வினையா?

எல்லாரும் ஊழ்வினைப்படி நடக்கும் என்றால், அறவுரை ஏன்? அறமன்றமேன், அரசேன், காவலர்ஏன், சிறையேன், படையேன்? தண்டமேன்? இட்டுக் கட்டப்பட்ட 'நிழல்' நீளுகிறதே தேர்ந்த அடிகளிடம்?

அகநானூற்றுப்பாடல்கள் 86, 136 ஆகிய திறமான பாடல்கள்,

"புதல்வர்ப் பயந்த தீதலையவ் வயிற்று
வாலிழை மகளிர் நால்வர் கூடி"

நடத்திய திருமணம் – அன்றே பொதுச் செய்மகளிர் **'ஓரிற்படுத்த'** சீர்மைத் **தமிழர் திருமணம்**

"மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீவலம் செய்வது" (1:52-53)

என்று **வேதிய மணமாகக் காட்டியவர்** அடிகள் தாமே! **'மணிவிழா'** என்னும் ***'இல்லறத்துறவு'*** நெறியையும்,

'அறுபதாம் கலியாண' மாக்கியதும், **தாலி மாற்றுவதும்** ஆகிய பண்பாட்டுச் சிதைவு மூலம் – இச் **சிலம்புக் காட்சி தானே!**

சிலம்பில் இடைச்செருகல் பல உண்டெனினும், இவை இடைச் செருகல் இல்லையே!

பலவற்றை விரிக்காமல் ஒன்றை மட்டும் சுட்டி அமைவோம்.

கண்ணகியார் கடவுண் மங்கலம் செய்யப்பட்டார். நித்தல் வழிபாடு செய்ய ஏற்பாடு செய்த செங்குட்டுவன் முன் மாடல மறையோன் தோன்றி, ஏற்பாடுகளைச் செய்கிறான்.

"பூவும் புகையும் மேவிய விரையும்
தேவந் தீகையைச் செய்கென் றருளி
வலமுறை மும்முறை வந்தனன் வணங்கி
உலக மன்னவன் நின்றோன்"

இத் தேவந்தி கண்ணகியாரின் பார்ப்பனத் தோழி! "சோமகுண்டம், சூரிய குண்டம் மூழ்கிக் காமவேள் கோட்டம் தொழச் சொல்ல,

"பீடன்று"

என்று, கண்ணகியாரால் மறுத்துக் கூறப்பட்டவள்!

வேந்தன் – **செங்குட்டுவன் – என்ன ஆனான்? அடிகள் சொல்கிறார்:**

"மாடல மறையோன் தன்னொடும் கூடித்
தாழ்கழல் மன்னர் தன்னடி போற்ற
வேள்விச்சாலையுள் வேந்தன் போந்தபின்
யானும் சென்றேன்." (30:168-171)

வேள்விச் சாலையுள் வேந்தன் போனான்; அதன் பின், **அடிகள் கடவுள் மங்கலம் செய்த கோயில் பக்கம் சென்றார்.**

வேந்தன் எவ்வழி? மக்கள் அவ்வழி!
பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி – பாண்டியன்
இராச சூய யாகம் வேட்ட பெருநற்கிள்ளி – சோழன்!
வேள்விச் சாலையுள் சேரன் செங்குட்டுவன் – சேரன்!

மக்களாட்சிக் காலத்தேனும் மக்கள் மக்களாக இருக்கச் சிந்திக்க வேண்டும் அல்லவா!

சுட்டப்பட்டவை அடிகளார் குறையா? இல்லை! ஏன் இல்லை! பற்றறப் பற்றற்றானைப் பற்றல் தானே! அடிகள் பற்று **பற்றற்றான் ஆகிய அருகதேவன் பற்றியிருந்த வினைப்பற்று! பாதிரிப்பூ வைத்த கலத்தில் அப்பூவை எடுத்தாலும் மணம் நீங்காது!** என்பது கருதுக! எவ்விலக்கியமும் பதிவும் அவ்வக் **காலக் கண்ணாடி!** அக்காலக் கண்ணாடி, **வேதிய ஆட்டத்தைப் பதிகிறது!** காலமும் இடமும் முதற்பொருள்கள்! அவை ஒன்றை ஒன்று தழுவி நிற்பவை! **அவற்றைப் பதிகிறார் எனத் தெளிக!** தெளிந்தால் அடிகள் தகவே புலப்படும்!

❖❖❖

22. காப்பிய உத்திகள்

கோவலன், கண்ணகியர் மணங்கொண்ட கொடைவிழாவில் தொடங்குகிறார்; அங்கேயே அவர்கள் பெற்றோரை அறிமுகம் செய்கிறார். **இளமைப்பருவத் தோற்றம் வளர்வுகளைக் கற்போர் பார்வைக்கு விட்டுவிடுகிறார்.**

மனையறம் படுத்தலில் கண்ணகியாரைக் குறியாக் கட்டுரை எனத் தொடங்கி, 43 அடிகள் வண்ணித்து உலவாக் கட்டுரையாய் முடிக்கிறார்!

இல்லற வாழ்வு எவ்வாறு நடத்தினர்? அதனைக் காட்டாமல்,

யாண்டு சில கழிந்தன இற்பெருங் கிழமையில்"

என்று ஓரடியில் முடிக்கிறார்! **90 அடி மனையறம் படுத்தலில் மனையறம் ஓரடி!** அடுத்துத் தொடுத்த வெண்பாவிலும் தொலையாத இன்பமே சுட்டினார். மனையறச் செய்தியைக் **கற்பார்க்கே விடுத்தார்!**

அடுத்துவரும் அரங்கேற்றுகாதையில் கலைத்திறங்களையெல்லாம் அரங்க அமைவு முதல் கொட்டுகிறார். மாதவி ஆடலை,

"நாட்டியநன்னூல் நன்கு கடைப்பிடித்துக்
காட்டினள்"

என்ற அளவில் முடிக்கிறார்! மன்னன் வழங்கிய மாலையை,

"மாலை வாங்குநர் சாலும்நம் கொடிக்கு"

எனக் கூனி கூற, மாலையை வாங்கிய கோவலன்,

"விடுதல் அறியா விருப்பினன் ஆகி
வடுநீங்கு சிறப்பின் மனையகம்" மறக்கிறான்!

கண்ணகியை வண்ணித்த வண்ணனைகளுள் ஒன்றுதானும் மாதவியைக் கோவலன் வண்ணிக்கவில்லை!

அடுத்துவரும் அந்திமாலை, கணவரொடு கூடியவர் – பிரிந்தவர் நிலை கூறுவதாய் ஊர்நிலை கூறுவதாக அமைகின்றது! மாதவி மகிழ்வோ, கண்ணகி கவல்வோ காட்டப்படவில்லை; ஊர்ப்பொதுமை நிலையில் ஒன்றுவித்து விடுகிறார்.

அடுத்து இந்திரவிழா, கடலாடல் பொது நிலைப்பாடுகளே!
கானல்வரியில் வரிப்பாடல்கள் பெருகவும், கோவலன்
கண்ணகியைக் கவவுக்கை நெகிழ்ந்ததுபோல், மாதவியைக் கவவுக்கை நெகிழ்ந்து இருவராய் வந்தவர்கள் ஒருவர் ஒருவராய்ப் பிரிகின்றனர்!

மாதவி தன்மனை செல்ல, கோவலன் தன்மனை செல்ல இடைவெளியில் மாதவி தந்த கடிதத்துடன் மாதவி தோழி வசந்தமாலை கோவலனிடம் வழங்க, தலைக்கோலி நிலையில் அரசும் குடியும் நோக்க **ஆடிய ஆட்டங்களையெல்லாம் அடுக்கிக்கூறி**

"ஆடல் மகளே ஆதலின் பாடுபெற்றன என்று மறுத்துச் செல்கின்றான்! ஆனால், கண்ணகியார் வதியும் வீடுசெல்லுமுன் அவர் கண்ட கனவையும், தேவந்தி கிளைக்கதையையும் கூறி, கணவனை அன்றிக் காமனைத் தொழல் பீடன்று என்று கண்ணகி தேவந்திக்கு உரைக்கும்போது, காவலன் போலக் கோவலன் எய்துகிறான்!"

எய்தியவன் தங்கினானா?

"சலம்புணர் கொள்கைச் சலதியோ டாடிக்
குலந்தரு வான்பொருள் குன்றம் தொலைந்த
இலம்பாடு நாணுத் தரும்என,"

"சிலம்புள கொண்ம்" எனக் கண்ணகி கூற,

மதுரைக்கு, "ஏடலர் கோதாய் எழுக" என்று கூறி மதுரைக்குப் புறப்பட்டுவிட்டனர்! வந்தது விடிபொழுது! புறப்பட்டதும் அப்பொழுது! செல்லும் வழியில் **கவுந்தியடிகள்** தவமனை கண்டு, அவரை வணங்க, இக்கோடை வெப்பில் புறப்படலேன்? என வினவ,

"உரையாட்டில்லை" (சொல்வதற்கு இல்லை)

என்று கோவலன் கூற, அவர் "யானும் மதுரை செல்லும் எண்ணம் உடையேன்; உடன்வருவேன்" என்று அவர் கூற,

"தொடிவளைத் தோழி துயர் தீர்த்தேன்"

எனக் கோவலன் கூறிய அளவில்,

"கோவலன் காணாய் கொண்ட இந்நெறிக்கு
ஏதம் தருவன யாங்கும்பல கேண்மோ"

என்கிறார்! **கோவலன் சொல்லும் – கவுந்தியடிகள் சொல்லும் – எதிரது உணர்த்துவது அல்லவா!**

கவவுக்கை நெகிழாமல் என்றது,

கவவுக்கை நெகிழ்தலை ஈரிடங்களில் காட்டிய அடிகள், அவ்வுத்தியை இங்கேயும் ஆள்கிறார்.

நாடுகாண் காதை, காடுகாண்காதை தொடர்கிறது.

"உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்" என்பதைச் சாலினி, தெய்வமேறிக் கூறும் வாக்காக,

"இவளோ, கொங்கச்செல்வி குடமலையாட்டி
தென்தமிழ்ப் பாவை செய்த தவக்கொழுந்து
ஒருமா மணியாய் உலகுக் கோங்கிய
திருமா மணியென"

உரைக்கச் செய்கிறார். இது **வேட்டுவவரி**

வரிப்பாடல்களை வளமாக மீளப்பாடும் இடமாகக் கொள்கிறார். அடுத்தே துறவோர் உறையும் புறஞ்சேரியில் சேர்க்கு முன்னர்,

மாதவியார் கடிதம் கோசிகமாணி வழி எய்துகின்றது. **மாதவி தீதிலள் எனத் தெளிகிறான்.** "அவள்தீது இல்லை ; **என்தீது**" என உணர்ந்து அக்கடிதத்தைத் தன் பெற்றோர்க்குத் தான் விடுக்கும் கடிதமாக விடுக்கின்றான்! **"ஒற்றைக் கடிதம் இரட்டைக் கடித நயம்"** உத்தியில் உயரிய உத்தியாம்!

புறஞ்சேரியில் தங்கிய கோவலன், கவுந்தியடிகள் முன்னே வினவியதற்கு **'உரையாட்டில்லை'** என்றவன்,

"நெறியின் நீங்கியோர் நீர்மையேன் ஆகிச் சிறுமையுற்றேன்"

என்று தன் குற்றத்தைத் தானே எடுத்துரைக்கிறான். அவர் ஆறுதல் கூற, மதுரைக்குச் சென்று தெருச் சுற்றிக்கண்டு வருவதன்றி, **வணிக நோக்குடன் சென்ற காட்சி இல்லை.** மீண்டும் புறஞ்சேரி வருகிறான்.

அங்கே மாடல மறையோன் எய்துகின்றான். முன்னே கூறாது விடுத்த, **"மணிமேகலை பிறப்பு, கோவலன் கொடை நலம்"** என்பவற்றை விரியக் கூறுகிறான்!

அப்பொழுதில் கோவலன் அன்றிரவு தான் கண்ட கனவை எடுத்து உரைத்து, அத்தீய கனவு **'கடிதீங்குறும்'** (கடிது ஈங்குறும்; கடி தீங்குறும்)

என்று கூற, அப்பொழுது ஆங்குவந்த மாதிரியிடம் கோவல கண்ணகியரை அடைக்கலப்படுத்துகிறார். அடுத்தே தொடர்வது கொலைக்களக்காதை.

அங்கேதான் கண்ணகியார் **உணவாக்குதலும் படைத்தலும்** கூறி, முன்னர் ஆக்கிய **அறவோர்க்களித்தல், அந்தணர் ஓம்பல், துறவோர்க்கு எதிர்தல், விருந்தெதிர்கோடல்** என்னும் இல்லற மாண்பை வெளிப்படுத்துகிறார்! கோவலன் தன் குறையை ஒருமுறைக்கு மும்முறை கூறுவான் போலக்கூறி வருந்துகிறான். சீறடிச் சிலம்பில் ஒன்று கொண்டு புறப்படுகிறான்.

சிலம்பு, 'விற்று வாங்கும்' **வணிகரிடம் செல்லாமல், சிலம்பு செய்யும் கொல்லர் தலைவனை அணுகுகிறான்!** கொலை செய்யவும் படுகிறான். **அற்றை இரவு அவன் மீளவில்லை** ; பால் உறையாமை முதலிய குறிகளால் ஆய்ச்சியர் குரவையாடித் தெய்வம் பரவுகின்றனர். கோவலன் கொலையுண்ட செய்தி கிட்டுகின்றது. **துன்பமாலை, ஊர்சூழ்வரி, வழக்குரைகாதை, வஞ்சினமாலை, அழற்படுகாதை, கட்டுரைகாதை** என்பன தொடர்கின்றன. மதுரைக்காண்டம் முடிகின்றது.

"காலைவாய், கணவனைத் தழுவியவள்
மாலைவாய், அவன் தன்னைக் காணாக் கடுதுயரம்"

என்பதால் **அன்றே நிகழ்ந்ததுபோல் காட்டி, ஒருநாள் ஊடே கழிந்தமை மறையுண்டது** உணர வைக்கிறார்.

"கீழ்த்திசை வாயில் கணவனொடு புகுந்தேன்
மேற்றிசை வாயில் வறியேன் பெயர்கென"

வையை ஒரு கரை பற்றி வேலான் குன்றடைந்த நிலையில், தம் செயலை எண்ணித், ***"தீத்தொழிலாட்டியேன் யான்"*** என்று கூறி, பதினான்காம் நாள் விண்ணகம் புகுந்தார் கண்ணகி.

கண்ணகி விண்ணகம் புகுந்ததைக் கண்முன் கண்ட குன்றக்குறவர், **"இவள்போலும் தெய்வம் நம் குலத்துக்கு இல்லை"** என்று குன்றக்குரவை ஆடினர்.

மலைவளம் காணத் தேவி பரிவாரங்களுடன் செங்குட்டுவன் வரக்கண்ட குன்றவர், கண்ணகியார் செய்தியை உரைக்க, உடனிருந்த

கூலவாணிகன் சாத்தனார் மதுரையில் நிகழ்ந்ததை உரைக்க, தேவியின் விருப்பப்படி செங்குட்டுவன் வடநாட்டுச் செலவு மேற்கொண்டு கல்லெடுத்து வந்து கடவுள் மங்கலம் செய்ய ஆயவற்றை, **காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல், வாழ்த்து எனத் தொல்காப்பியர் வகுத்த வீரவழிபாட்டு நிலையை நிறுவி, வரந்தருகாதை** என நூலை நிறைவு செய்யுமுன், தம் வரலாற்றைத் தேவந்தி வாயிலாகக் கூறச்செய்து, "இக்கதை கேட்டவர் இவ்வாறு ஒழுகுக" என அடுக்கிக் கூறிக் காப்பியத்தை முடிக்கிறார்.

நிகழ்ந்தது நிகழ்ந்த காலவரிசையில் கூறாமல், மாற்றியும், மறைத்தும் இணைப்பன இணைத்தும், கனவும் கிளைக் கதைகளும் எனச்சேர்த்தும் உரைத்தமை காப்பிய உத்தியாம்!

தனி நூலாக வேண்டியது கட்டுரையளவில் சுருங்கியது இஃதாம்.

❖ ❖ ❖

குறிப்பு



முனைவர் அ. ஆறுமுகனார்

நிறுவனர்

பாவேந்தர் பதிப்பகம்

சீரகம், 4/79, நடுத்தெரு

திருமழபாடி - 621 851, அரியலூர் மாவட்டம்